12

[illegible], 1930

JL
ஒ211, N29BH
N30.2.12
198532

The "NAVEENA BHARATI" Reg. No. M.

டிசம்பர்—1930

16 JAN 19

# நவீன




மாலை 1. மணி 2.

ஓர் தேசிய

## மாதப் பத்திரிகை

இனிமையும் அழகும் கருத்தும்
விஷயமும் பொதிந்தது.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

# போஷகர்கள்.

1. Messrs. மர்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ், சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர், தேவாரம் ஜமீன், தேவாரம்

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள், சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள், ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள், மிராஸ்தார், சித்தயங்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.

10. ,, ஜான் அந்தோனி ஆஜு அவர்கள், பைசன்வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.



16 JAN 1931

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C., போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டாரர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி & M. L. C., போடிநாயக்கனூர்.

17. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

18. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷ்மிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

19. ,, ஆ. ஆத. இராமனுதத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O., தேவகோட்டை.

20. ,, கா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.


21. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O., தேவகோட்டை.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

198532

நவீன



படங்களுடன் வெளிவந் துலாவும் தேசீய மாஸிகை

## பொருள் அடக்கம்.

மாலை 1. 1930 டிசம்பர். மணி 2.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | சரோஜினி தேவியார்—திரு. N. வேங்கட ரமணன் அவர்கள் ... | 81 |
| 2. | பாரதியாரின் தேசாபிமானம்—திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள் ... | 83 |
| 3. | எனது காதலின் வெற்றி—ஸ்ரீமதி ஆ. சத்தியவதி அம்மையார் ... | 92 |
| 4. | இந்திய அரசர்களும் இராஜ்யங்களும்—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) | 104 |
| 5. | பெண்களும் பௌத்த மதப் பிரசாரமும்–(மனோகரனார்) | 112 |
| 6. | ஆலனின் அமுத மொழிகள்--திரு. A. சுருளியாண்டி அவர்கள் ... | 121 |
| 7. | ஐரோப்பியரின் ஐக்கிய நாடுகள்—திரு. C. A. பெருமாள் அவர்கள் ... | 126 |
| 8. | ஓ ஹிமாலயமே!—ஜனாப் சையது அகமது அவர்கள் | 136 |
| 9. | ஐரோப்பியரின் எழுச்சி–திரு. A. ராமசாமி அவர்கள் | 140 |
| 10. | தாமஸ் ஆல்வா எடிசன்—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) | 152 |
| 11. | கன்றின் கண்கவர் காட்சி—திரு. சூ. ம. மிக்கேல் அவர்கள் ... | 166 |
| 12. | பத்திரிகை உலகம் ... ... ... 1. பட்டாணியர்களின் வீர வாழ்வு, 2. அமெரிக்க மக்களின் வயது வளர்ச்சி, 3. தேகப் பயிற்சியின் தற்கால முறைகள், 4 மேல் நாடுகளும் பொற் காசுகளும், 5. முஸ்லிம் மன்னர் பெருமானது சமரச ஞானம், 6. ஜப்பானில் ஓர் பிரபல நூலாசிரியர், 7. இந்தியர்களின் பலவீனம். | 169 |
| 13. | ஆசிரியர் குறிப்புகள் ... ... ... 1. சந்தா நேயர்களுக்கு, 2. வாழ்க நம் பண்டித நேரு, 3. விடுதலை யடைந்த மாளவியா ஜீ, 4. தலைவர் படேலின் | 177 |




## டிசம்பர் மாதப் பொருள் அடக்கத் தொடர்ச்சி.

பரிதாப நிலைமை, 5. இலங்கையின் பெருங் கிழவர் பிரிந்தார், 6. வெள்ளப் பிரவாகமும் தமிழ் நாடும், 7. வெள்ளம் பெருகிய சென்னை மாநகர், 8. லண்டனிலா இந்து முஸ்லிம் ஒற்றுமை?, 9. புரட்சிக்காரரின் பயங்கரச் செயல்கள், 10. நோபில் பரிசு பெற்ற சர். சி. வி. ராமன், 11. போலீசாரின் அதிக்கிரமங்கள், 12. மீண்டும் இரு அவசரச் சட்டங்கள், 13. புதிய வைசிராய், 14. இலங்கை வாழ் அன்பர்களுக்கு.

### படங்கள்.

1. சரோஜினி தேவியார், 2. எடிசன் கண்டு பிடித்த முதல் கிராமபோன், 3. எடிசன், விளக்குகளுக்கு மின்சாரம் சேமித்துக் கொடுக்கக் கண்டு பிடித்த முதல் இயந்திரம், 4. மென்லோ என்ற விடத்தில் நிறுவப்பட்டிருக்கும் தனது உருவச் சிலையருகே, எடிசன் ஓர் தினம் அமர்ந்து உவகை யடையும் காட்சி.

---

**கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் பதிவு செய்துகொள்ளுங்கள்.**

(ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.) (இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டது.)

உயர்ந்த தன்மை வாய்ந்த பாலிசிகளையுடையது. பாலிசி பணம் கட்டாததற்காக, பாலிசி பறிமுதல் செய்ய முடியாததற்கான விதிகளும், சாசுவதமாகவே பணம் கட்ட இயலாமல் நோயுற்று விட்டாலும் சரி அல்லது அபாயம் நேர்ந்துவிட்டாலும் சரி அவற்றிற்கும் சௌகர்யமான விதிகளுடனும் கூடியது.

மூன்று வருஷங்களுக்கொரு முறை போனஸ்! உத்திரவாதமுள்ள போனஸ் திட்டங்கள்!!

இந்தியாவிலே பணம் முதலீடு செய்யப்பட்டது. லாபகரமான நிபந்தனைகளின் கீழ் வேலை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்:—

1. எம். வி. மார்ச்சண்ட், பிராஞ்சு மானேஜர், 50–52 சர்ச் கேட்டு தெரு, பம்பாய்.

2. சி. பி. கிருஷ்ண ராவ், சீப் ஏஜெண்டு, (மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு) 102, புதுத் தெரு, மதுரை.

## ‘பாரதி’யின் பைண்ட் வால்யம்

### 1930-ம் வருட
### “பாரதி” & “நவீன பாரதி”

சஞ்சிகைகளனைத்தையும் அழகிய காலிகோ துணியால்
நேர்த்தியாகவும் உறுதியாகவும்
கில்ட் பிரிண்ட் செய்யப்பெற்றுத் தரப்படுகிறது.

**பைண்டிங் சார்ஜ் மட்டும் ரூ 1.**

**ரூபாய் ஒன்றே தான்.**

தூரத்திலுள்ள நண்பர்களின் சௌகரியத்தை யுத்தேசித்து
கண் கவர் காலிகோவில் கில்ட் பிரிண்ட் செய்த
மேல் அட்டையினை மட்டும்
தபாற் செலவின்றி
அணா **12**-க்கு
ரெஜிஸ்டர் செய்து
அனுப்பி வைக்கப் படுகிறது.
விரும்புவோர் முன் பணம் அனுப்பவும்.

மானேஜர்,
**ஆனந்தா பிரஸ்,**
உத்தமபாளையம்,
தேனி, S. I. Ry.

# “பாரதி”

## ஓர் தேசிய மாதப் பத்திரிகை.


**ரா. நாராயணஸ்வாமி,**
ஆசிரியர்.


## மாலை 2


பிரசுராலயம்:
**உத்தமபாளையம்,**
மதுரை ஜில்லா.

வருஷ சந்தா:—
உள் நாடு ரூ **2/-** வெளி நாடு ரூ **2½/-** அல்லது 4 ஷிலிங்.


**1930.**



காப்பக
சென்னை

ஆனந்தா பிரஸ்,

உத்தமபாளையம்-31



# படங்களுடன் வெளிவந் துலாவும் தேசீய மாஸிகை

## பொருள் அடக்கம்.

தொடர் எண். பக்கம்.


1. அன்னபூரண தேவி—திரு. N. வேங்கடரமணன் அவர்கள் 36
2. அழகும் ஆரோக்கியமும்—திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 45, 98, 247
3. அதிமதுரத் துண்டுகள்—ஆசிரியர், "பாரதி" 116
4. அன்னையின் அழைப்பு—(ஆண்டி) 435
5. அமெரிக்கா எவ்வாறு சுதந்திரம் பெற்றது?— திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) 513
6. ஆசிரியர் குறிப்புகள் 73, 160, 236, 312, 385, 473, 555
7. ஆராய்ச்சி மேடை—ஆசிரியர், "பாரதி" 79
8. ஆலீஸ் ராஜகுமாரியின் சரித்திரம், ஸ்ரீமதி. தையல்நாயகி-சுப்ரமண்யம் அவர்கள் 186
9. ஆரம்பக் கல்வியும், கிராம முன்னேற்றமும்— திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B. A., L. T., 189
10. ஆசியாவின் இருந்தவக் கதிரோன்—சங்கைக்குரிய பாப்லி அவர்கள் 241
11. ஆலனின் அமுத மொழிகள்—திரு. A. சுருளியாண்டி அவர்கள் 431
12. ஆல்ப்ரெட் நோபல்—ஸ்ரீமான். நாராயணஸ்வாமி முதலியார் அவர்கள் 503
13. இளங்கோவடிகளின் அறவுறை:—"சிலப்பதிகாரம்" 2
14. இந்திய ஊழியர் சங்கம்—ஆசிரியர், "பாரதி" 51
15. இன்னிசை வாழ்த்துக்கள்:—
    - திருவாளர். பா. ஆதிமூர்த்தி அவர்கள் ... 81
    - ஜனப் K. அப்துல் சுகூர் அவர்கள் ... 83

ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார் அவர்கள் ... 85
திரு. அ. சு. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் 86
ஸ்ரீமதி. P. S. அரங்கநாயகி அம்மையார் அவர்கள் 86
திருவாளர். சங்குப் புலவர் அவர்கள் ... 87
16. இந்தியாவின் இருபது கட்டளைகள்—ஆசிரியர், "பாரதி" 161
17. இந்தியாவின் விடுதலை—ஸ்ரீமான். ராமசுப்ரமண்யம் நாவலர் அவர்கள் 292
18. இந்தியாவின் ஏக்கம்:– ஜனாப். K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் ... 298
19. இந்து முஸ்லீம் பிரிவினை—திரு. வி. எ. பெருமாள் அவர்கள் ... 361
20. உடற் பயிற்சி—சாண்டோ ஸ்ரீமான். லெ. சோமசுந்தரம் அவர்கள் ... 137
21. உப்பு வரி சத்தியாக் கிரகம்–ஆசிரியர், "பாரதி" ... 300
22. எனது கலப்பு மணம்–திரு. க. ஆதிநாராயணா அவர்கள் 11
23. எனது ஐரோப்பா யாத்திரை—திரு. M. கிருஷ்ண பாரதி அவர்கள், M. A., B. L., 179, 258
24. எனது குருநாதரின் கடிதம்–(மனோகரனார்) ... 416
25. ஐக்கிய நாணயச் சங்கம்—திரு. வி. மாதர் பூதம் ஐயர் அவர்கள், B. A., 222
26. கடவுள் வணக்கம்—"மணிமேகலை." ... 1
27. கல்வியும் நம் நிலையும்—ஸ்ரீமான் கு. கோ. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) 253
28. கரிபால்டி (இத்தாலி நாட்டு விடுதலை வீரர்)— திரு. சோம. சதாசிவன் அவர்கள் 333
29. காதலும் உற்பத்தியும், (திரு. சாண்டோ லெ. சோமசுந்தரம் அவர்கள் 421
30. காந்தீயம்,—திரு. கே. கோவிந்தராஜன் அவர்கள் ... 426
31. கிள்ளைவிடு தூது—திரு. அளகை M. பொன்னுச்சாமி அவர்கள் ... 25
32. கிராமங்களில் வேலை செய்யுங்கள்—ஆசிரியர், "பாரதி." 492
33. கொரியாவின் சுதந்தர எழுச்சி—ஸ்ரீமான் வி. எ. பெருமாள் அவர்கள் ... 539



34. சந்திரனில் உயிர்களுண்டா?—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள் B Sc., (Hons.) ... 328
35. சத்தியாக்கிரக வீரம்—ஆசிரியர் திரு. பி. ஸ்ரீ. அவர்கள் 468
36. சத்தியப் போர்—திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ... 489
37. சாரதாவின் சட்டமும் சமயவாதப் போராட்டமும்— திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள், M. A., B. L., 94
38. ஜான்ஸி மகாராணி லக்ஷ்மீ பாய்—ஸ்ரீமான் என். வேங்கடரமணன் அவர்கள் ... 273, 372
39. சுசீலை—திரு. K. S. மகாதேவன் அவர்கள் ... 207
40. சுதந்தரப் பாசறை—ஜனாப் கான்முகம்மது அவர்கள் 270
41. ஸ்ரீமதி சௌடாம்பிகை அம்மையார்–ஆசிரியர், "பாரதி." 66
42. டென்மார்க்கில் கூட்டுறவு இயக்கம்—ஸ்ரீமான் மாத்ருபூதம் அய்யர் அவாகள், B. A., ... 552
43. தமிழ் நாடும் தலைவர்களும்—திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் M. A., B. L. ... 164
44. தமிழ் நாடு—ஜனாப் K. அப்துல்சுகூர் சாகிப் அவர்கள் 321
45. தமிழ் நடைப் பயிற்சி–திரு. குமரய்யா அவர்கள் B.A., B. L. 500
46. தகிழ் நாடக மேடை—(மொழி பெயர்ப்பு) ... 548
47. திங்களின் களங்கம்—திரு. T. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் M. A. ... 411
48. தீண்டாமை—ஸ்ரீமதி P. S. அரங்கநாயகி அம்மையார் 30
49. துருக்கியில் கல்வி—திரு. வி. எ. பெருமாள் அவர்கள் 401
50. துஞ்சத்து எழுத்தச்சன்—ஸ்ரீமான் என். வேங்கடரமணன் அவர்கள் ... 531
51. தோலும் நிறமும்—ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் ... 526
52. நமது பெண்களின் தற்கால நிலையும் அவர்தம் வேலையும்— ஆசிரியர், "பாரதி." ... 88
53. பண்டைக்காலப் பெண் கல்வி—பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் ... 267
54. "பாரதி"யின் இரண்டாவதாண்டு—ஆசிரியர், "பாரதி." 3
55. "பாரதி"யின் போஷகர்கள்— " ... 6
56. பாண்டித்துரைத் தேவர்—திரு. நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ... 451

57. புத்தபிரானது ஓர் சம்பாஷணை—ஆசிரியர், "பாரதி." 456
58. போப் ஐயர்—திரு, M. S. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், B. A., L. T. ... 169
59. மதிப்புரை—(மனோகரனார்) ... ... 407
60. மாதர் வாழ்க்கை—ஸ்ரீமதி S. அரங்கநாயகி அம்மையார் 218
61. மாதர் எழுச்சி—ஆசிரியர், "பாரதி." ... ... 323
62. மின்சாரம்—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள் B. Sc., (Hons.) ... 146
63. லார்ட் ராபர்ட் பேடன் பவல்—திரு. T. L. ரகுபதி சர்மா அவர்கள், M. A., L. T. ... 199
64. **வருங்கால பாரத தேசம்**—பாரதியார் ... 490
65. வாலிபர் இயக்கம்—திரு. சி. பொ. செல்லையா அவர்கள் 459
66. விவசாயம்—திரு. A. நடேசம் பிள்ளை அவர்கள் ... 228
67. விவேகானந்த சுவாமிகள்—ஆசிரியர், "பாரதி." ... 232
68. வீர சுதந்தரம்—திரு. P. கந்த நரசிம்மன், B. A., B. L. 102

## படங்கள்.

1. ஜவஹர்லால் நேரு.
2. அன்னபூர்ணா தேவி.
3. கோபால கிருஷ்ண கோகலே.
4. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்.
5. தேவதார்.
6. பூனாவிலுள்ள இந்திய ஊழியர் சங்கக் கட்டிடங்கள்.
7. ஸ்ரீமதி சௌடாம்பிகை அம்மையார்.
8. சாண்டோ லெ. சோமசுந்தரம்.
9. விவேகானந்தா.
10. போப் ஐயர்.
11. ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மீபாய்.
12. மகாத்மா காந்தி.
13. ஸ்ரீமதி சரோஜினி தேவி.
14. பண்டித மோதிலால் நேரு.
15. ஆல்ப்ரெட் ரோபல்.

---



# "நவீன பாரதி"

# 1930

## நவம்பர் & டிசம்பர் மணிகளின் பொருளடக்கம்.

தொடர் எண். பக்கம்.

1. ஆசிரியர் குறிப்புகள் ... ... 73, 177
2. ஆலனின் அமுத மொழிகள்—திரு. A. சுருளியாண்டி அவர்கள் ... 60, 121
3. இந்திய அரசர்களும் இராஜ்யங்களும்—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள் B. Sc., (Hons.) 47, 107
4. இந்தியாவின் துன்ப நிலை—பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் ... 25
5. இந்து முஸ்லிம் ஒற்றுமை—திரு. C. A. பெருமாள் அவர்கள் ... 7
6. இராமகிருஷ்ணரின் சமாசம்—திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள் ... 55
7. எனது காதலின் வெற்றி—ஸ்ரீமதி ஆ. சத்தியவதி அம்மையார் ... 92
8. எனது குருநாதரின் கடிதம்—(மனோகரனார்) ... 41
9. ஐரோப்பாவின் ஐக்கிய நாடுகள்—திரு. C. A. பெருமாள் அவர்கள் ... 126
10. ஐரோப்பியரின் எழுச்சி—திரு. A. ராமசாமி அவர்கள் 28, 140
11. ஓ ஹிமாலயமே!—ஜனாப் சையது அகமது அவர்கள் 136
12. **கன்றின் கண் கவர் காட்சி**—திரு. ரூ. ம. மிக்கேல் அவர்கள் ... 166
13. **துடியின் இழி** செயல்—திரு. அ. சு. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் ... 64
14. சரோஜினி தேவியார்—திரு. என். வேங்கட ரமணன் அவர்கள் ... 81
15. **சிரத்தை வேண்டும்**—திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... 26

16. தாமஸ் ஆல்வா எடிசன்—திரு. K. G. கிருஷ்ணன்
அவர்கள், **B. Sc., (Hons.)** ... 152
17. பத்திரிகை உலகம் ... ... 65, 169
18. பாரதியாரின் தேசாபிமானம்—திரு. பி. ஸ்ரீ.
ஆச்சாரியார் அவர்கள் ... 88
19. "பாரதி"யின் புனர் ஜெனனம் ... ... 1
20. பிரான்சு எவ்வாறு சுதந்திரம் பெற்றது?—திரு.
**G.** வாசுதேவன் அவர்கள், **B. A., (Hons.)** ... 18
21. பெண்களும் பௌத்த மதப் பிரசாரமும்—(மனோகரனார்) 112

## படங்கள்.

1. சரோஜினி தேவியார்.
2. எடிசன் கண்டுபிடித்த முதல் கிராமபோன்.
3. எடிசன், விளக்குகளுக்கு மின்சாரம் சேமித்துக் கொடுக்கக் கண்டுபிடித்த முதல் இயந்திரம்.
4. மென்லோ என்ற விடத்தில் நிறுவப்பட்டிருக்கும் தனது உருவச் சிலையருகே, எடிசன் ஓர் தினம் அமர்ந்து உவகையடையும் காட்சி.



ஸ்ரீமதி சரோஜினி தேவியார்.


நவீன

# பாரதி

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.


"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."—பாரதி.


ஆசிரியர் : ரா. சுப்ரமண்யம்

| மாலை 1 | உத்தமபாளையம் 1930-௵ டிசம்பர்௴ | மணி 2 |
|---|---|---|


## சரோஜினி தேவியார்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

பெண்களுக்குச் சுதந்திர மில்லை யென்றும், அவர்கள் அடிமைகளைப் போல் நடத்தப் படுகிறார்களென்றும் சாதாரணமாகக் கூறப்படும் நம் மிந்திய நாட்டில், ஆடவர்களைப் போல் பெண்களும் சம சுதந்தரம் பெற்று, வீரமும், தியாகமும், கலை ஞானமும், கவிதா சக்தியும், அரசிய லறிவும் வாய்ந்து உலக வாழ்க்கையை ஒளி பெற நடத்தியவர்கள் பலருளர். வேத காலத்தில் கார்க்கி, மைத்ரேயி, விஸ்வவரை போன்ற விதுஷீ மணிகள் வேதாந்த சாஸ்திரங்களில் முதன்மை

யடைந்து சில வேத மந்திரங்களையே எழுதி யிருக்கின்றனர். கணித சாஸ்திரத்திற் சிறந்த லீலாவதி யென்ன! அரசியல் வீர வாழ்க்கை நடத்திய இராணி மங்கம்மா ளென்ன! இராணி துர்க்காவதி யென்ன! பத்மாவதி யென்ன! ஜான்ஸி ராணி யென்ன! கவிப் புலமை வாய்ந்து பாக்களை யியற்றிப் பாரில் புகழ் பெற்ற ஒளவை யென்ன! மங்கையர்க் கரசியா ரென்ன! ஆண்டா ளென்ன! இன்னோரன்ன பெண்மணிகளின் பெருமை தங்கிய சரித்திரங்கள், இந்திய தேச சரித்திரத்தில் இந்தியப் பெண்மணிகளுக்குள்ள உயர்வை விளக்கிக் காட்டுவன வன்றோ? அத்தகைய பண்டைப் பெருமையினை இந் நாட்டில் இன்றும் குன்றாது வளர்த்து வரும் பெருமை வாய்ந்த பெண்மணிகள் பலருளர். அவர்களில் ஸ்ரீமதி. சரோஜினி தேவியார் முதன்மையானவ ராகும். தம் கவிப் புலமையாலேயே யன்றி, தம் சொற் பெருக்குகளினாலும், தேச ஊழியங்களினாலும் முதன்மை யடைந்து இந்திய நாட்டுக்கு ஒரு திலகம்போல்—இந்தியப் பெண்கள் உலகிற்கு ஒரு நாயக மணியாய்—பாரதச் செல்விகளுக்கு ஒரு வழி காட்டியாய் விளங்கி வரும் தேவியாரின் புகழ் இந்திய நாட்டிலேயே யன்றி உலக மெங்கும் பரவி நிற்கிறதைப் பற்றி அதிசயப்பட வேண்டியதில்லை. பாரதப் புதல்விகளின் அறிவுக்கும், அழகுக்கும், ஆற்றலுக்கும், அன்புக்கும் இவ் வம்மையாரை உதாரணமாகக் கூறுவது தவறாக மாட்டாது. இவரைப் போன்ற பெண்மணிகளாலேயே பாரத மாதாவின் அடிமை வாழ்க்கை அகற்றப்பட வேண்டும். எனவே இத்துணைப் பெருமை வாய்ந்த தேவியாரின் வாழ்க்கை வரலாற்றினை யறிய யாரே விரும்பார்?

## பிறப்பும் படிப்பும்

நமது சரோஜினி தேவியார், அகோரநாத சட்டோபாத்தியாய ரென்ற வங்க நாட்டு அந்தணரின் அருமைப் புதல்வியா ராவர். அகோரநாதர், வங்காள நாட்டில் பல் வளமும் பொருந்திய கங்கைக் கரையிலுள்ள பைரம் நகரத்தில் பிறந்தவர். அவர் பழமையான வைதீகப் பிராமண குலத்தி லுதித்தவராயினும் மூடக் கொள்கைகளுக் கிருப்பிடமான ஜாதி யாசாரம், மத வைராக்கியம் முதலிய வற்றை வெறுத்தவர்; ஆசார சீர்திருத்தத்தை விரும்பி ஏற்றவர். அக் காலத்தில் வைதீகப் பிராமணர்களின் பிடிவாதத்தால் அயல் நாடுகளுக்குச்



செல்லுவது ஆசாரத்திற்கு விரோத மெனப் பாராட்டப்பட்டு வந்தது. அந்த நிலையில் முதன் முதலில் வங்காள பிராமணராகிய இராஜா ராம் மோகனராய் அவர்கள் ஐரோப்பாவுக்குச் சென்று ஆசார சீர்திருத்தத் திற்கு அடிகோலினர். அவரைப் பின் பற்றி மற்றும் பல வங்க வாலிபர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று கல்வி கற்க முற்பட்டனர். அவ்வாறு சென்றவர்களில் அகோரநாத சட்டோபாத்தியாயரும் ஒருவர். அவர் இங்கிலாந்திற் படித்து 1877-ம் ஆண்டில் எடின்பர்க் சர்வ கலாசாலையில் சாஸ்திரி யென்ற பட்டத்தைப் பெற்றார். அதன் பின் பர்ன் நகரத்தைச் சார்ந்த சர்வகலாசாலைக்குச் சென்று அங்கும் தமது கல்வி யறிவை வளர்த்துக் கொண்டார். அவ்வாறு ஐரோப்பாக் கண்டத்தில் தமது கல்வியை யொருவாறு முற்றுப் பெறுவித்துக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்பினர். இங்கு வந்த வுடனே நைஜாம் ராஜ்யத்தின் தலை நகராகிய ஹைதராபாத்தில் நைஜாம் காலேஜ் என்ற பெயரால் ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபித்து நடத்த முற்பட்டார். அதன் மேல் கல்வி வளர்ச்சிக்கென அதிக ஆர்வத்தோடு அவர் செய்த வேலைகள் பல.

அத்துணைப் பெருமைகள் வாய்ந்த அகோரநாத சட்டோ பாத்தியாயருக்கு ஹைதராபாத்தில் 1879-ம் ஆண்டு பிப்ரவரிமீ 13உ நம் சரோஜினி தேவியார் மூத்த புதல்வியாராகத் தோன்றினர். பெற்றோர் அவ் வருங் குமரியைச் சீரும் சிறப்புமுடன் வளர்த்துச் சிறு வயதினின்றே கல்வி கற்பிக்க ஆரம்பித்தனர். அகோரநாதர் சாஸ்திர ஞானத்திலும், கணித நூலிலும், இரசாயன ஆராய்ச்சியிலும் தமக் கிருந்த அதிகப் பற்றுதலின் காரணமாகத் தமது புதல்வியும் அக் கலைகளில் தேர்ச்சி யடைந்து விளங்க வேண்டுமென விரும்பினர். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி சரோஜினி தேவியார் ஒரு சாஸ்திர பண்டிதையாகவோ, கணித நூல்வல்லுன ளாகவோ ஆவதற்குப் பதிலாக, ஒரு கவியரசி யாவதற் குரிய குறிப்புகளே இளமையில் அவரிடத்திற் காணலாயினர். இபற்கையிலேயே கவிதையின் இன்பத்தை நுகர ஆரம்பித்த தேவியார் விரைவில் கவிகள் புனைவதில் தமது திறமையை வெளிப் படுத்தினர். தமது பதினோராவது ஆண்டில் ஒரு நாள் ஒரு கணக்கைச் செய்யத் தெரியாமல் யோசித்துக்கொண் டிருக்கையில், தம் முள்ளத்தில் கவிகள் தோன்றின வென்று சரோஜினி தேவியாரே

பன்முறை கூறியிருக்கின்றார். அது முதற் கொண்டு அவர் கவிகள் பாடுவதற் காரம்பித்தார். அவரது கவிகள் இயற்கை வனப்பினை நுகர்ந்து நின்றன. இயற்கையி லொன்று பட்டுச் செல்லும் பெருமை அவரது கவிக்கு அழகு செய்தது. தேவியார் தமது பதின்மூன்றாம் வயதில் ஆயிரத்து முன்னூறு அடிகளைக் கொண்ட ஒரு கவிதா மாலையைத் தொடுத்தாராம். பிறகு இரண்டாயிரம் சீர்கள் கொண்ட ஒரு நாடகத்தை ஆறு தினங்களில் ஆக்கி முடித்தார். அவர் பனிரெண்டாவது வயதிலேயே சென்னைச் சர்வகலாசாலையின் பிரவேச பரீக்ஷையில் தேர்ச்சி யடைந்தார். பால் மணம் மாறாத சிறுமி யொருவள், பிரவேச பரீக்ஷையிற் றேறினா ளென்ற செய்தி நாட்டிற் பரவி மக்களிடையில் ஒரு புதிய உணர்ச்சியை யுண்டாக்கியது. அது வரையில் "அடுப்பூதிகளுக்குப் படிப்பேதுக்கு" என்று பெண் கல்வியை வெறுத்த பலரும் தத்தம் சிறுமிகளுக்கு உயர்தரக் கல்வியையும் கற்பிக்க முற்பட்டனர். இவ்வாறு நாட்டிற் பெண் கல்வியினிடத்தில் அபிமானம் தோன்றுவதற்குக் காரணமா யிருந்த சரோஜினி தேவியார் பதினாறு வயதை யடைவதற்கு முன்னரே எண்ணற்ற நூல்களைப் படித்து முடித்தாராம். எப்பொழுதும் புத்தகமும் கையுமாக இருப்பதே அவரது வழக்கம்.

## இங்கிலாந்து பிரயாணமும் இத்தலி வாசமும்

சரோஜினி தேவியார் உயர்தரக் கல்வியைக் கற்க விரும்பி 1895-ம் ஆண்டில் இங்கிலாந்திற்குச் சென்று லண்டன் மா நகரிலுள்ள இராஜ கலா சாலையிலும், கர்டன் நகரிலுள்ள மற்றொரு கலா சாலையிலும் மூன்று ஆண்டுகள் கல்வி கற்றார். தேவியாரின் இங்கிலாந்து விஜயம், ஆங்கில மக்களின் மனத்தை யீர்த்தது. பதினாறு ஆண்டுடைய ஓர் இள மங்கை கடல் கடந்து, அயல் நாடு சென்று படிக்க முற்பட்ட செய்கை இந்தியருக்கும், ஆங்கிலேயருக்கும் ஒருங்கே ஆச்சர்ய மூட்டியது. இந்தியப் பெண்களுக்குச் சுதந்தர மில்லை யென்றும், அவர்கள் அடிமைகளைப் போல் வாழ்கின்றன ரென்றும், இந்தியர்கள் நாகரீக மற்றவர்க ளென்றும் அதுவரை கிறிஸ்துவப் பாதிரிகளின் பிரசாரத்தால் கருதி வந்த ஆங்கிலேயர் பலரும் சரோஜினி தேவியாரைக் கண்டு, தமது அறியாமையை உணர்ந்து, இந்தியர்களின் உண்மை வரலாற்றை



யும், நிலைமையையும் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டனர். சரோஜினி தேவியார் லண்டன் நகரில் கலாசாலையில் கல்வி பயின்று வருங் காலையில் அவரது கல்வித் திரத்தையும், மதி நுட்பத்தையும், கவிதா சக்தியையும் கண்டு பலரும் புகழ்ந்து பேசினர். கலா சாலையின் ஆசிரியர்கள் யாவரும் ஆங்கிலப் பெண்களைவிட இந்தியப் பெண்மணிகள் கல்வியில் அதிக கவனம் செலுத்துகின்றன ரென்றும், ஆசிரியர்களிடத்தில் பக்தியுடன் கலாசாலை வாழ்க்கையைத் தூய்மையுடன் நடத்துகின்றன ரென்றும் கூறும்படி நம் தேவியார் நடந்து கொண்டார். அவ்வாறு சரோஜினியார் கல்வியையே பெரிதெனக் கருதி இடைவிடாது தமது உடல் நலத்தையுங் கருதாமல் படித்து வந்தமையால் அவரது தேக மசௌக்கிய மடையலாயிற்று. எனவே அவர் அந் நோய் நீங்கி, உடல் நலம் வளரவேண்டி இங்கிலாந்தினை விட்டு இயற்கை வளங்கள் நிறைந்த இத்தலி நாட்டுக்குச் சென்று சின்னாள் வசிக்க முற்பட்டார். ஐரோப்பாக் கண்டத்தின் தென் பாகத்திலுள்ள இத்தலி நாட்டில் மலை வளங்கள் மலிந்துள்ள படியால், அங்கு எப்பொழுதும் தென்றல் வீசி இனிமை விளைந்துகொண் டிருக்கும். வேனிற் காலத்தும் அங்கு வெம்மையின்றித் தண்மை பரந்து காணும். இயற்கை வளப்பங்கள் மிகுந்த அந் நாட்டிலுள்ள கழனிகளும், சோலைகளும் கண் கவர் காட்சிகளாம். மேலும் வர்ஜில், தாண்டி முதலிய கவிக் குஞ்சரங்கள் பிறந்து வளர்ந்த அந் நாடு, இயற்கையை நேசித்த இன் கவி யரசியாம் சரோஜினிக்கும் உகந்த நன்னாடன்றோ?

## இந்தியாவுக்கு வருகையும் இல்லற வாழ்க்கையும்

இத்தலி நாட்டிற் சிறிது உடல் நல மெய்திய பின்னர் 1898-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சரோஜினி தேவியார் இந்தியாவுக்குத் திரும்பி வந்து ஹைதராபாத்தை யடைந்தார். அவர் தமது தந்தையாரைப் போலவே இந்தியா மேன்மை யடைய வேண்டுமானால் இந்தியரிடையில் ஆசார சீர்திருத்தங்கள் ஏற்பட்டு, சாதி வேற்றுமைகள் ஒழிந்து, இந்திய ரனைவரும் ஒரு சமூகத்தினராக வேண்டுமென்று விரும்பினார். எனவே அவ் விருப்பத்திற் கிணங்கத் தம்மூர் வந்து சேர்ந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் டாக்டர் நாயுடு என்பவரைக் கடிமணம் புரிந்துகொண்டு, ஆசார சீர்திருத்தத்திற்கு மற்றொரு

துறை விளக்கினர். அந்தணர் குலத்தில் அவதரித்த ஓர் மாது, வேறு குலத்திற் பிறந்த ஒருவரைத் திருமணம் செய்துகொண்டாரென்ற செய்தி, வைதீக உலகத்தை வேருடன் ஆட்டிவிட்டது. ஆகவே பலரும் தேவியாரை வசை கூற முற்பட்டனர். எனினும் எண்ணித் துணிந்த அக் காரியத்திற்கு அவர் சிறிதும் சஞ்சலமடையவில்லை. மேலும் எத்தகைய சீர்திருத்தத்தையும் உலகோரனைவருக்கும் எடுத்துக் காட்டி, அவரது சம்மதியைப் பெற்றுச் செய்வதென்பது, கடலில் அலை நின்றபின் குளிக்கக் கருதிக் காத்து நிற்பதை யொக்கு மென்பதையும், ஆகவே நியாயமெனக் கருதிய சீர்திருத்தத்தை, உலகோரின் மதிப்பையும் பாராட்டாமல் துணிந்தே செய்து தீரவேண்டு மென்பதையும் அவர் உய்த் துணர்ந்தவராகும். ஆதலால் உண்மைக் காதலுக் குறைவிடமான தம் கணவரோடு கூடி இனிதே இல்லற வாழ்க்கையை நடத்தலானர்.

## மக்கட்பேறும் மாபெருங் கீர்த்தியும்

சரோஜினி தேவியார் முறையே ஜயசூரிய, பத்மஜா, இரணதீர, லீலாமணி என்ற நான்கு குழந்தைகளைப் பெற்றுக் களிகூர்ந்தார். தேவியாருக்குச் சிறுவயதி னின்றே தேசப் பற்று அதிக மாதலால் தேச நலங் கருதிய கிளர்ச்சிகள் பலவற்றிலும் தாமுங் கலந்துழைக்கலானர். தம் இயற்கைப் புலமைத் திறத்தால் பற்பல இனிய கவிகளை யியற்றி வழங்கினர். தேசீய கீதங்கள் பல பாடினர். அவரது கவிகளிற் சொல்லழகும், பொருளழகும் அமைந்து, இயற்கை வர்ணனைகள் மலிந்தன. தேசாபிமானத்தையும், தேசீய உணர்ச்சியையும் நாட்டு மக்களின் உள்ளத்தில் ஊற்றெடுக்குமாறு அவரது கவிகள் செய்கின்றன. அவரியற்றியுள்ள கவிகளில் 'பொற்கடை,' 'இளவேனி லகவல்,' 'காலப் பட்சி,' 'தாலாட்டு' முதலியன சிறந்தவையாம். அவரது இசைப் பாக்களில் 'பாரத மாதா,' 'தமயந்தியின் பிரிவாற்றுமை,' 'காமக் களஞ்சியம்' முதலிய பலவும் வாசகர்களுக்கு—ரசிகர்களுக்கு நல் விருந்தாகும். ஆங்கிலேயக் கவிச் சிரேஷ்டர்களாகிய 'தென்னிசன்' 'ஷெல்லி' முதலியோரின் கவிகளுக்கு நமது சரோஜினி தேவியாரின் கவிகள் ஒரு சிறிதுங் குறைந்தன வல்லவென்று ஆங்கில மேதாவிகளே பலர் இன்று கூறி வருகின்றனர்.



சரோஜினி தேவியாருக்குச் சொன்மாரி பொழிவதிலும் ஆற்றல் அதிகம். அவர் பிரசங்க மேடைமீது நின்று குயிலைப் பழித்த இனிய குரலில் இசை நயங் காண உபந்நியசிக்கப் புகுந்தால் கேட்போர் மனது கரைந்துருகி யோடுவது சகஜம். அதை முன்னிட்டே அவரை 'இந்திய கோகிலம்' என்ற பெயரால் ஆர்வத்தோடு நம்மவர் அழைத்து வருகின்றனர்.

## தேச சேவையும் சிறை வாசமும்

இந்தியாவின் விடுதலையைச் சாதிக்கக் கருதி யுழைத்து வரும் அகில இந்தியக் காங்கிரஸ் மகா சபையினிடத்தில் சரோஜினி தேவியாருக்கு அபிமானம் அதிகம். எனவே காங்கிரஸ் நிகழ்ச்சிகளில் அவ்வப்போது பங்கு பெற்று வேலைசெய்து வந்தார். அப்படியே நாட்டில் பெண்கள் இயக்கத்தையும், ஆசார சீர்திருத்த முயற்சிகளையும் ஆதரித்து, அவற்றின் வளர்ச்சிக்காக நாடெங்கும் சுற்றிப் பிரசங்கங்கள் புரிந்தும், மகா சபைகளில் தலைமை வகித்தும் ஜன சேவை செய்து வருவாராயினர். இந்திய மகா ஜனங்கள்அவரது அரிய தேச ஊழியத்தை வெகுவாகப் பாராட்டி, அதுவரை இந்தியப் பெண்மணிகள் எவரும் பெற்றிராத கௌரவம் வாய்ந்த அகில இந்தியக் காங்கிரசின் தலைமைப் பதவியை கான்பூர் காங்கிரசில் இவருக் களித்துத் தங்கள் நன்றியைக் காட்டினர்கள். பின்னர் இவர் மகாத்மாஜி யவர்களின் அஹிம்சா தர்மக் கொடியின் கீழ் நிலையாக நின்று ஒத்துழையா இயக்கத்தில் வீறுகொண்டு தேசப் பணி செய்துவரத் தொடங்கினர். காந்தியடிகளார் உப்புச் சத்தியாக்கிரகப் போரைத் தொடங்கிச் சிறை சென்ற பிறகு, ஜனுப் தயாப்ஜி அவர்கள் தலைமை வகித்து அப் போரை நடத்தினர். அவரும் சிறைக் கேகின பின்னர் நமது சரோஜினி தேவியார் அப் போருக்குத் தலைமை பூண்டு தர்சன உப்பளத்தை நோக்கித் தொண்டர் படையை நடத்திச் சென்று 1930-ம் வருஷம் மே மாதக் கடைசியில் அரசாங்கத்தாரின் ஒன்பது மாத விருந்துக் குரிமையாளராகிச் சிறைக் கோட்டம் புகுந்து, இன்று பாரத மாதாவின் விடுதலைக்குத் தவம் புரிந்துகொண் டிருக்கிறார். இத்தகைய பாரத மாதாவின் அருந்தவப் புதல்விகளாலேயே பாரதத் தாயின் பண்டைப் பெருமை மீண்டும் உலகில் நிலை நிறுத்தப் பெறப் போகின்ற தென்பதில் ஐயமில்லை. ஸ்ரீமதி சரோஜினி தேவியாருக்கு நீண்ட ஆயுளும், பிற நலன்களும் வாய்க்கும்படி வாழ்த்துக் கூறுவோமாக.

# பாரதியாரின் தேசாபிமானம்.

திரு. பி. ஸ்ரீ ஆச்சாரியார் அவர்கள்.

இந்நாளில் தேசாபிமானம் என்பது ஓர் புதிய மத இயக்கமாக நமது நாட்டில் பரவி வருகிறது. எத்தகைய பெருங் கொள்கையினையும் ஓர் அருஞ் சமயக் கொள்கையாக்கி அனுஷ்டிப்பது நம்மவர் சாம்பிரதாயமாகும்.

அரசியற் கிளர்ச்சி என்பது, கேவலம் மேலை நாட்டாரது முறையினைத் தழுவியே நமது நாட்டில் தோன்றியதென்று கொள்வதில் சந்தேக மில்லை. எனினும், தேச பக்தியை வங்க நாட்டினர் ஓர் மதமாக்கி விட்டனர். கடவுளைத் தாயாகிய பராசக்தி என்று மதித்து வழிபடும் வங்க நாட்டினர், தம் தாய் நாட்டையும் அம் மகா சக்தியின் அம்ஸமாகக் கருதி வழிபட்டு வருவதில் வியப்பொன்றுமில்லை.

"துஞ்சும் பொழுதினும் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்"

என்றவாறு வங்க நாட்டு மக்கள் தாய் நாட்டின் தொண்டிற்கு விசேஷமான பக்தியும் சிரத்தையும் காட்டினர் என்பது நமது அரசியற் கிளர்ச்சியின் வரலாற்றினை ஆராய்வாருக்கு நன்கு புலனாகும்.

வங்க நாட்டிலிருந்து இந்தியா எங்கணும் பொங்கிப் பரந்து செல்லத் தொடங்கிய தேச பக்தியின் ஜீவ நாதமாகிய வந்தே மாதர மகா மந்திரத்தை நமக்கு முதற்கண் உபதேசித்த பெரியார், வங்க நாட்டின் நல்லறிஞராகிய பங்கிம் சந்திர சட்டோ பாத்தியாயராவர். இவர் வங்க மொழியில் இயற்றிய வந்தே மாதர கீதம், அகில இந்திய ஜாதீய கீதமாக வழங்கி வருகின்றது. நீர்வளம் நிலவளம் ஆதிய பல வளங்களும் நிறைந்த இந்திய நாடு, பங்கிம் சந்திரரது கண்ணுக்குப் பராசக்தியாகவே தோன்றித் திகழ்கின்றது. இனிய நீர்ப் பெருக்கும்



இன்கனி வளமும், பைங்கிறப்பழனமும் வாய்ந்து பொலியும் இந்திய நாடு, பார்பூத்த பச்சைப் பசுங் கொடியாகிய பரா சக்தியாகக் காட்சி தருவதில் வியப்பொன்று மில்லை. இரவில் சிரித்து விளையாடும் வெண்ணிலவும், தருக்கள் தாங்கும் பன்னிற மலர்களும், பெண்மணிகளின் மோகனமான புன்னகையும் பங்கிம் சந்திரருக்கு அன்னையின் திருமேனி ஒளியினை நினைப்பூட்டுகின்றன. முப்பது கோடி மக்கள் வாழும் நாடு, திறமை யற்ற நாடென்று கருதப்படுவது பங்கிம் சந்திரரது உள்ளத்தைப் புண்படுத்தியது. அவர், அம் மூட நம்பிக்கையை மறுத்து,

"முப்பது கோடிவாய் நின்னிசை முழங்கவும்
அறுபது கோடிதோள் உயர்ந்துனக் காற்றவும்,
'திறனிலாள்' என்றுனை யாவனே செப்புவன்!"

என்று பெருமிதத்தோடு அறை கூவி வினவுகின்றார். இது வன்றோ உண்மையான சுய மரியாதை! கம்பீரமான தன் மதிப்பு!! தேசிய மான வாழ்க்கையின் அடிப்படையினை வங்க நாட்டில் உறுதியாக அமைத்த பங்கிம் சந்திரர் இந்திய அன்னையை நோக்கி,

"அறிவுநீ, தருமநீ, உள்ளம்நீ, அதனிடை
மருமம்நீ, உடற்கண் வாழ்ந்திடும் உயிர்நீ
தோளிடை வன்புநீ, நெஞ்சகத் தன்புநீ
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம் தேவி இங்குனதே"

என்று போற்றி வழிபடுகின்றார்.

இத்தகைய தேச பக்தி—மதம், தென் இந்தியாவிலும் ஒருவாறு பரவத் தொடங்கியது. இதற்கு முக்கிய காரணராக விளங்கிய பெரியார், காலஞ்சென்ற தேசபக்த ஆசு கவியான சுப்பிரமண்ய பாரதியார் ஆவர். தமிழுக்குப் புத்துயிரும் தமிழகத்திற்குப் புது வாழ்வும் அருளிய கவி யரசு, தேச பக்த ஆசு கவியாக விளங்கியது நமது தமிழ் நாட்டின் நல்லதிர்ஷ்டமே யாகும். பாரதியாரின் தேச பக்தி, அவரது கவிதா சந்நதத்திற்கு உயிர் நிலையாக அமைந்துளது. தேசிய கீதங்கள் மாத்திரம் தேச பக்தி வாய்ந்தன என்பதில்லை.

'பாஞ்சாலி சபதம்' போன்ற பிற பாடல்களிலும் நூல்களிலுங் கூடத் தேச பக்தி, உலகத்துறையும் உயிர் போல, உள்ளுறை பொருளாக அமைந்துலவுகின்றதெனின், பாரதியாரின் தேசாபிமானத்தை என்னென்று கூறுவது?

தேச பக்தியை ஓர் மதமாகக் கொண்ட பாரதியார், அதனை அன்னையர், தீம்பாலோடு மக்களுக்கு ஊட்டுதல் வேண்டுமென்னும் கருத்துடையராவர். தமிழ்த் திரு நாட்டினைப் பெற்ற தாய் என்று கும்பிடுதல் வேண்டுமென்றும், இந் நாட்டின் அருமை பெருமைகளை உணர்ந்துகொள்ளுதல் வேண்டுமென்றும் "பாப்பா"ப் பாட்டில் நமது கவிஞர் பெருமான் குழந்தைகளுக்கு உபதேசிக்கின்றார். இவ்வாறு குழந்தை மனத்தில் விதைக்கப் பெறும் வித்து, முளைத்துச் செழித்து வளர்ந்தோங்குதல் கூடும். இத்தகைய குழந்தைகள் பின்னாளில் இந்திய அன்னையின் உண்மைக் குழந்தைகளாக வளர்ந்தோங்கி,

"வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்"

என்று தோள் கொட்டுதல் கூடுமன்றோ?

இத்தகைய தேச பக்தி வெள்ளத்திலே, பொருளற்ற சாதி பேதங்களெல்லாம் மறைந் தழிகின்றன. பக்தியே முக்திக்கு வித்தென்று பண்டை அறிஞர் கருதுகின்றார். தேச பக்தியே தேசிய ஒற்றுமைக்கு வித்தென்று பாரதியார் கூறுகின்றார். முதற்கண் வேண்டுவது சமுதாய சீர்திருத்தமா அல்லது அரசியல் சீர்திருத்தமா என்னும் கேள்விக்குப் பாரதியார் கொள்கையில் ஒரு சிறிதும் இடமில்லை. தேச பக்தர், தேச பக்த ரல்லாதவர் என்னும் இரண்டு சாதிகளையே பாரதியார் ஒப்புக்கொள்ளுகின்றார். எனவே, சமுதாய சீர்திருத்தத்தை இன்றியமையாத ஓர் ஜீவ அம்சமாகக் கொண்ட தேச பக்தி-மதமே பாரதியாரது தனிப் பெருங் கொள்கை என்பது உய்த்துணரப்படும்.

பாரதியாரின் தேச பக்தியில் வேற்றுமை யுணர்ச்சிக்கு இடமில்லாததுபோல், பலவீனத்திற்கும் இடமில்லை. தமது அருமைத் தாய் நாட்டினர் வறுமைப் பயம் கொன்று, துயர்ப் பகை வென்று, செயற்கருஞ் செயல் செய்து, வீரப் பெரு வாழ்வு வாழவேண்டு



மென்பது பாரதியாரின் பேரவா. எனவே, அச்சமென்னும் பூதத்தை அடியோடு வீழ்த்தி மிதித்தல் வேண்டுமென்று பாரதியார் பல பாடல்கள் வாயிலாக அறிவுறுத்துகின்றார். அச்சமற்ற உள்ளத்திலே தான் உண்மையான பக்தி விளங்குதல் கூடுமென்பது பகவத் கீதையின் கருத்து. அச்சமும் கவலையும் துறந்த வீரவுள்ளமே தீவிர தேச பக்திக்குரிய கோவிலாகு மென்பது பாரதியாரின் தேர்ந்த கொள்கை.

பாரதியாரின் தேச பக்தியில் 'இழி குலம்' என்பதற்கு இடமில்லாதது போலவே, 'பழி தொழில்' என்பதற்கும் இடமில்லை. ஒரு குலத்தை இழிகுல மென்பதும் ஒரு தொழிலைப் பழி தொழிலென்பதும் பெரும் பாதகமாகும். இரும்பைக் காய்ச்சி உருக்குவதும், இயந்திரங்கள் வகுப்பதும், பாட்டும் செய்யுளும் கோத்து அமைப்பதும் எல்லாம், பரா சக்தியின் வழிபாடாகக் கருதத்தக்க புனிதப் பெரும் தொழில்களே யாகும்.

இத்தகைய பெருங் கொள்கை வாய்ந்த தேச பக்தர்களே சுதந்திர தேவியின் வழிபாட்டிற்கு உரியவராவர். இத்தகைய தேச பக்திக்கு, நமது பாரதியாரே நம் தமிழ் நாட்டில் ஓர் இலக்கியமாக விளங்கினார். அவரது சொல்லும், செயலும், பேச்சும் மூச்சும் எல்லாம், தேச பக்தி மயமாகவே திகழ்ந்தன. அவரது தேச பக்தி, உள்ளத்திலூறி, உதிரத்தில் ஒரு வகைக் கள் வெறியாகவே கலந்திருந்தது.

நமது நாட்டில் சமீபத்தில் ஏற்படப்போகும் சுதந்திர சூரியோதயத்திற் குரிய சுந்தரமான அருணோதய அறி குறியினை, நம் தமிழ் மக்களுள் முதன் முதற் கண்டறிந்தவர் பாரதியாரே யாவர். இவ் வுதய சூரியனது அற்புதக் காட்சியினை நம் தமிழ் மக்களுக்கு உற்சாகத்தோடு முன் கூட்டி வருணித்துக் காட்டுவதற்குப் பாரதியார் பட்ட அரும் பெரும் பாடுகளெல்லாம், கல் நெஞ்சையும் கரைந்துருகச் செய்யும் என்பது திண்ணம். பல வேறு தியாகங்களையும் அநாயாசமாகப் புரியும்படி அவரைத் தூண்டிய தேச பக்திப் பெருங் காதல், அவரது உள்ளத்தி னின்றும் பொங்கி யெழுந்த வீரப் பாடல்களில் கோயில்கொண்டு நிலவுகிறது. பாரதியார் வாழ்க. தேச பக்தி நீடு வாழ்க.

# எனது காதலின் வெற்றி.

ஸ்ரீமதி ஆ. சத்தியவதி அம்மையார்.

வேத வானில் தோன்றும் குறி, நாளடைவில் நட்சத்திரமாகவும் சுக்கிர குருவாகவும் சந்திரனாகவும் மேலும் சூர்யனாகவும் பிரகாசித்து வருவது போலவே, மனிதப் பிறவி யெடுத்தவர்கள் யாவரும் காலத்தையும் தேயத்தையும் அனுசரித்து வாழ்ந்து வரல் வேண்டியதென்பதுவே எனது தற்காலக் கல்வி யறிவின் பயனாகும். ஆனால், காலதேச வர்த்தமானங்கள் எப்போதும் கடவுளின் தர்மத்திற்குச் சிறிதேனும் மாறுபாடா யிராவே யிராது. இதற்குச் சான்றாக, நம் நாட்டில் மட்டும் தீண்டாமை யென்னும் பாழும் பேய்வழக்கம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்து வருகிறதெனப் பலர் சொல்லி வரினும் அதற்கு அந்திய காலம், சுமார் 10 வருடங்களுக்கு முன்னரே உதித்துவிட்டதென்னலாம். தற்காலக் கல்வியறிவு நாகரீக வளர்ச்சியின் பயனாக இயற்கை நெறி, அற நெறிகளில் ஏதோ சிற்சில காரியங்கள் ஆங்காங்கு நடைபெற்று வந்தாலும், உலகில் இன்னும் மூடமதங்களும் மௌடீகக் கொள்கைகளும், அதர்ம அநியாய அநாகரீகங்களைத் தர்ம நியாய நாகரீகங்களென்று கொள்ளும் மயக்க உணர்ச்சிகளும், இவைகளை இழந்தால் உலகமே அடியோடு அழிந்துவிடு மென்று சாபமிடும் கூற்றுக்களும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஆனால் ஓர் பெரிய நதியில் பிரவாகம் வந்தால் அங்கே மலிந்து கிடக்கும் மலின பதார்த்தங்களை அடித்துக் கொண்டு போவது போலவே, இப் பாமரரின் கொள்கைகளும் நடைகளும் கூற்றுக்களும் இனி யெதிர்கால உலகில் இடம் பெறு மென்று கூற இடமில்லை. நான் இவ் வுண்மைகளை யெல்லாம் எனது அநுபவ பூர்வமாக இயன்றவரை கண்டறிந் திருக்கிறேன். என்றாலும் என்றன் இச் சின்னஞ் சிறு பிராயத்தில் எதையும்



வடிகட்டி அறியும் அறிவைக் கைவரப் பெறாதவளா யிருந்தாலும் அத்துணை உலகானுபவம் பெறாதவளா யிருப்பினும் இந்தச் சொற்ப அறிவையேனும் பெற்றதற்குக் காரணம் மகாத்மா காந்தியடிகளின் அறவுபதேசங்களேயாம்.

நான், எனது பிறப்பு வளர்ச்சி மணம் ஆகிய வரலாற்றை வரிசையாய்க் கவனித்து வெளியிட விரும்பாதவளாயினும் இப்போது இதில் எழுதும்படி என்னை யேவுகிற இந்தச் சந்தர்ப்பத்தை நான் மனமுவந்து வரவேற்கின்றேன்.

முதல் முதல் சென்னையில் நடந்த நீல் சிலைச் சத்தியாக்கிரகமே, உறங்கிக் கொண்டிருந்த என்னைத் தட்டி யெழுப்பியதென்று சொல்வேன். நீல் சிலை நிகழ்ச்சிகளும் நீலனின் காரியங்களும், சத்தியாக்கிரகிகளின் பிரசுரங்களும் பிரசாரங்களும், அச்சமயம் காந்தியடிகள் தென்னாட்டுப் பிரயாணத்திற் செய்த பிரசங்கங்களுமே என்னைத் தேச பக்தி கொள்ளும்படி செய்ததென்று சொல்லுவேன். நான், உலகம் போற்றும் உத்தமராங் காந்தி மகான் ஜீவியத்தை முதல் முதல் ஓர் இளைஞரிடமிருந்து பெற்று வாசித்தேன். ஓர் குடும்பத்தில், அதிலும் பெற்றோர்கள் பாட்டன்மார்கள் ஆகிய உற்றார் உறவினர் நிறைந்த இடத்தில் என்னைப்போன்ற கன்னிகையர் கல்வியைக் கற்கவோ தேச விஷயத்தை அறியவோ இக் காலத்தில் இலகுவில் இயலுகிறதா?

காந்தியடிகளின் ஜீவிய சரிதையை எனக்களித்த அந்த இளைஞரே அவ்வப்போது வெளி வரும் விஷயம் நிறைந்த பத்திரிகைகளையும் எனக்குக் கொடுத்து உதவி வந்ததால், எப்படியோ சிரமப்பட்டு அவைகளையும் இடைவிடாது வாசித்துவரலானேன். ஆனால் நான் தமிழ்ப் பாஷையில் அத்தனை விர்ப்பன்ன முடையவ ளல்ல. நானோ, தெலுங்கு பாஷை பேசும் க்ஷத்திரிய (ரெட்டி) வம்சத்துப் பெண். இருப்பதோ செங்கற்பட்டு ஜில்லா, மதுராந்தகம் தாலுகா, பொறையூர்க் கிராமம். இக் குக்கிராமத்திலுள்ள எனக்கு எவ்வித சௌகர்யமும் கிடையாது. ஆதலால் என் சிறிய தாயாரின் வீட்டை யடைந்து சிறு வயது முதல் வசித்து வரும்போதுதான்

தமிழ் தெலுங்கு பாஷைகளையும் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டேன். பிறகு ஹிந்தியையும் வட மொழியையும் எப்படியோ தெய்வ தயவால்தான் பயின்றேன் என்று சொல்லலாம்.

நெப்போலியன், ஆபிரகாம் லிங்கன், மாஜினி, சித்தரஞ்சன்ர், சரோஜினி தேவியார், மகான் அரவிந்தர், வீர ஸாவர்க்கார் முதலிய உன்னத மேதாவிகளின் ஜீவிய வரலாற்றைப் பற்றி முறையே படித்ததன்றி ஆர்ய சமாஜத்தின் தலை நூலாகிய சத்தியார்த்தப் பிரகாசத்தையும், ஹிந்தியில் பல கற்பரசிகளின் கதைகளையும் முறையே பார்த்தேன். இதன்பேரில்தான் எனக்குச் சுதந்திரத்தில் விஸ்வாச முண்டாயிற்று. இன்னும் அநேக நூல்களையும் மேலும் மேலும் கற்கவேண்டு மென்ற எண்ணமும் என்பால் எழுந்தது.

இவ்வித மிருக்கையில் என் பெற்றோர் முதலானோர் என்னை விவாகம் செய்யவேண்டிய ஏற்பாடுகளைத் தேட ஆரம்பித்தனர். அதைப்பற்றி நானாகவே ஓர்வித தீர்மானம் செய்துகொண்டு அவர்கட்குச் சில சமாதானங்களை எடுத்துரைத்து முதல் ஆண்டைக் கடத்திவிட்டேன். ஆனால், எனக்கு ஓர்வித எண்ணம் எழுந்தது. அதனால் என்னை ஓர் தேச பக்தருக்கே அர்ப்பணஞ் செய்துவிட வேண்டிய தென நிச்சயங்கொண் டிருந்தேன். அதன் பிரகாரமே எல்லா வகையாலும் என் சித்தத்தைப் பரிசோதனை செய்து பறிமுதல் பண்ணத் தக்கவராய் ஓர் வாலிபர்— கூறிய அறிவினர்— உத்தம தேச பக்தர்— உயரிய வீரர்— உண்மைத் தியாகி— ஊக்கமுள்ள தேசத் தொண்டர் எனது கண் முன் எப்படியோ காணப்பட்டார். அவரது கல்வி அறிவு ஒழுக்கம் ஆதிய நற்குண நற்செய்கைக ளெல்லாம் எனது பரிசோதனையிற் பன்னெடுநாள் கிடந்து வந்தன. இச் சோதனையில் உத்தம தேச பத்திமை வாய்ந்த பரிசுத்த புருடராய் விளங்கிய அவர் பக்கம் நாளடைவில் என் சித்தம் சிறிது சிறிதாய்ச் சென்று சென்று முடிவில் முற்றிலும் பதிந்துவிட்டது.

இப்போதுதான் காதல் கால்கொள்ளவும் தொடங்கியது. அப்பால் அக் காதல் நாளாவட்டத்தில் சன்னம் பருவமாய் வளர்ச்சி



பெற்று முதிர்ச்சி யுற்றது. என் சித்தத்தைக் கவர்ந்துவிட்ட அக் காதலர் மீது என் மனம் பிரேமை அடைந்துவிட்டது. அக ஒழுக்கத்திற் கிடந்து வந்த இவைக ளெல்லாம் புற ஒழுக்கத்திலும் புலப்படாமல் எத்தனை நாள்தான் மனதிலேயே உறைந்து மறைந்து கிடக்கும்? ஆதலால் எப்படியோ என் மனம் தக்கதோர் வரனை— மணமகனைத் தேடிக்கொண் டிருக்கிறது என்பதை எவ்விதத்தாலோ அறிந்துகொண்ட என் தாய், என்னை விவாகம் செய்து கொடுத்துவிட வேண்டுமென எண்ணி அதற்குரிய முயற்சியையும் மேற்கொண்டு என்னையும் கேட்க ஆரம்பித்தார்கள். அதற்கு நான் என் மனதை வாஞ்சித்து நிற்கும் காதலரைக் குறித்துக் காட்டாது மனதில் மறைத்துவிட்டு, எனக்கு மணமகனாய் இருக்கக் கூடியவர் ஓர் ஒப்பற்ற தேசிய வாதியாகவும் தேசிய சீலம் தேசிய ஞானமெல்லாம் பொருந்தியவராகவும் சத்தியவந்தராகவும் பல பாஷைகளில் விற்பன்ன மிக்க விவேகியாயும் காந்தியடிகளின் ஆணைவழி நின்று கடமை செய்பவராயும் இன்னும் உத்தம நற் குணங்களுக்கெல்லாம் உறை விடமாயும் இருக்கவேண்டும் என்றும் என் அன்னையாரிடம் எடுத்துரைத்தேன். இவைகளை யெல்லாம் கேட்ட எனது தாய் முதலானோர் ஒன்றுமே வாய் திறவாது தீர்க்காலோசனையில் ஆழ்ந்து மவுனப்பட்டு விட்டனர்.

நான் வாஞ்சித்திருக்கும் என் காதலர் என்னைக் காதலிக்கிறாரா இல்லையா என்பதை யிதுவரை சரிவர அறிந்துகொள்ளாத நான், அதனை அறிய ஆவலுண்டாகிப் பிரயத்தினம் செய்தேன். அகமே புறமாயிருப்பதால் அகத்தினிடமா யுதிக்கும் நல்ல நினைப்பும் நன்னம்பிக்கையும் நன் முயற்சியும் நற் பலனையே கொடுக்கு மல்லவா? நல்ல நினைப்புகளையே நினைக்கின்றவர்கள் நன்மையே அடைவார்களன்றோ? அது போலவே எனது நல்ல எண்ணங்களின் பலனாக என் காதலரும் என்மேல் அளவற்ற அன்பு கொண்டு உள்ளுள்ளே மனம் கரைந்து உருகிக்கொண் டிருப்பதை அறிந்து, யான் எல்லையற்ற மகிழ்ச்சியால் எதிர் கால நிலைமை என்ன செய்யப் போகிறதோ என்பதை எண்ணிக்கொண் டிருக்கையில் எனது எண்ணங்களும் விருப்பங்களும் எனது பெற்றோர்களுக்குப் பலவித

அடையாளங்களால் புலப்பட்டுவிடவே, அவர்கள் என்னைப்பற்றிப் பெரிதும் சந்தேகப்பட்டு விட்டார்கள்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்" என்ற பெரியாரின் சொல்
பிழைபடுமா?

இவர்களின் இச் சந்தேகத்திற்கு இடம் செய்தது எனது முகக் குறியும் எனது காதலருக்கு எழுதும் கடிதங்களின் மேல் விலாசமும் அன்றி வேறில்லை. இவ் வழியில் அவர்கள் சந்தேகம் வர வர வலுவாய் ஊன்றி விட்டது. இப்படி யிருக்கையில் இவைகளை முற்றிலும் காதலர்பால் விபரித்து அவரது மனோ சம்மதத்தை நான் வேண்டவே, அவர் உன் பெற்றோர்களின் சம்மதமே யிதில் பெரிதென்றும் அவர்களிடம் உண்மையை உள்ளபடி யிதுவரை வெளியிடா திருப்பது பிசகென்றும் உண்மையை ஒழிக்காது சொல்லிவிட வேண்டியது உன் கடமை யென்றும் அப்பால் அவர்கள் சம்மதத்தை எவ்வளவு தூரம் முயன்று அடைய வழியுண்டோ அதுவரை பார்த்துத்தான் அதன் பேரில் நம் காதல் ஒழுக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்றும் அப்பால் கடவுள் இருக்கிறார் எனவும் எனக்கு அறிவித்தார். எனவே விபரத்தை முற்றிலும் அறிவிக்க, எனது அன்னையாரிடம் மெள்ள வாய் திறந்தேன். இச் செய்தி செவியில் நுழைந்ததும் அன்னை வேறு என்செய்வார். அப்படியே மூர்ச்சை யுற்று வீழ்ந்து விட்டார். அதனை யறிந்த மற்றையோரும் ஏதோ இடியோசை கேட்ட அரவம்போல் ஆர்வமொடுங்கி விட்டார்கள். ஒரு வாரம் வரை என்னுடன் எவருமே உரையாட வில்லை. யானோ ஒருத்திக்கு ஒரு மகளென்று உலகில் சொல்கிற பழமொழிபோல் நானும் என் குடும்பத்திற்கு ஒரு மகளா யிருப்பதினால் எனக்காக வேண்டிய சௌகரியங்கள் குடும்பத்தில் நடைபெறாமல் இல்லை.

இப்போதுதான் மகாத்மா காந்தி யடிகளுக்கும், ஸ்ரீமதி. இந்திரா பாய்க்கும், ஸ்ரீமதி. முத்துலெட்சுமி அம்மாளுக்கும், இவர்கள் போன்ற இன்னும் பலருக்கும் எனது விருப்பத்தையும் மனோ நிலைமைகளையும் பெற்றோரின் போக்கையும் விபரமாய்த் தெரிவித்து



அவர்களின் அனுமதியை—ஆசியை யாசித்து நின்றேன். அதற்கு அவர்களும் "உன் காதல் மணத்தைக்— கலப்பு விவாகத்தைக்— கற்பொழுக்கத்தை எவ் வகையிலும் காப்பாற்றியே தீரு" என்று பற்பல நீதி முறைகளுடன் எனக்கு விபரமாய்க் கடித வாயிலாக அறிவித்தார்கள்.

என் தாயார் என்னை யெப்படியாவது வசியப்படுத்தித் தன் நோக்கப்படி யிழுக்க யத்தனித்தார். அதற்கு மகாத்மா காந்தி யடிகளின் அழகிய அபிப்பிராயங்களை யெல்லாம் காட்டினேன்; சொன்னேன்; கெஞ்சினேன். என்ன பண்ணியும் கேட்டாரில்லை.

எனது அம்மையார், தான் பிறந்த மதமாகிய வைணவத்தில் அதி தீவிர பக்தியுடையவர்; மகா உயரிய கற்புக் கரசி; கபட சூது அறியாதவர்; மேலானவிரதி; உப வாசத்தில் பேராத பற்றுடையவர்; தர்ம சிந்தனையும் அதர்மத்தில் பயமும் உடையவர்; எவரிடமும் எதிர் பேசமாட்டார். ஆதலால் அவருக்குத் திருப்பதியில் பெருமாள் துலுக்கப் பெண்ணை யேன் மணந்தார்? குமரக் கடவுள் வள்ளியை யெதற்காக மணம் புரிந்தார்? சுகன்யா குருடரே யாயினும் தான் காதலிக்கப் பட்டவரை யன்றி வேறு எவரையுமே மணக்க மாட்டே னென்று ஏன் வீர மொழி புகன்றார்? என்று இவை முதலிய காதல் மணம் கலப்பு மணங்களில் உள்ள மர்மங்களையும் அதனை அனுஷ்டித்த பெரியாரின் மகத்துவங்களையும் வகுத்து வகுத்து உரைத்தேன்.

அது மட்டுமா? மணற் பாவையை விளையாட்டாக மணாளன் என்று எண்ணி விட்டுப் பின் ஆயுள் பரியந்தம் அதைவிட் டகலா திருந்த கற்பணங்கின் கதையையும், கரிகாற் சோழன் மகள் ஆதிமந்தி யென்பாள் தன் கணவனைக் கடல் கொண்டு போயும் தான் விடாது பின் தொடர்ந்தே சென்று கணவனை அழைத்து வந்த கற்புக் கடவுளின் வரலாற்றையும், மற்றொருத்தி தன் முகம் தன் கொழுநனுக்கு மட்டும் சந்திர வதனமாயும் அயல் மனிதருக்கோ குரங்கு முகமாகவும் இருக்க, வரம் பெற்றுக் கொண்ட மாதர

சியின் பெருமையையும் இவர்கள் போன்ற எத்தனையோ பற்பல கற்பின் மடவார்களின் மகாத்மியங்களெல்லாம் எடுத் தெடுத்து உரைத்து எனக்குத் தெரிந்த உபாயங்களினால் எல்லாம் மன்றாடிப் பார்த்தேன். என்னதான் செய்தும் எல்லாம் விழலுக் கிறைத்த நீராயிற்று. யாது கூறலாம்? "கொடினும் பேதையும் கொண்டது கைவிடா" தல்லவா?

நற்குண நற் செய்கையுடைய என் தாயின் செவிக்கே யிவை யனைத்தும் இப்படியானால், அக் குணங்களுக்கு முழுதும் மாறான என் தந்தையைப் பற்றிச் சொல்ல வேண்டியதே யில்லை.

எனது இந்த இதோபதேசங்களாலும் வேண்டுகோள்களினாலும் முடிபாய் நேரப்போன பலனென்ன வென்றால், என்னை எவ் வழியிலாயினும் பலாத்காரமாய்க் கட்டி உருட்டியாவது தாங்கள் கோரிய ஒருவருக்கு விவாகம் புரிந்து விடுவதே யாகும். இதனை யறிந்ததும் என்னை எவர் கோரி மணக்க முற்பட்டு வந்தாரோ அவருக்கு ஒரு காகிதம், எனது சகோதரரே! என்று தொடங்கி "உமது சகோதரியா யிருக்கும் என் போன்றாரை நீர் விவாகிக்க முற்படுவது தருமமல்ல, நீதியல்ல, தகாது, தகாது" என்று எழுதி முடித்து அனுப்பிய எனது கடிதத்தைப் பார்த்ததும் அவரும் ஓடிப் பதுங்கி விட்டார். விவாகமும் தடைபட்டு விட்டது.

அன்றுமுதல் வீட்டில் எனக்குப் பல வழிகளிலும் தொந்தரவு கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். என் காதலருடன் சம்பாஷணைக்கும் இடைஞ்சல் ஏற்பட்டு, அவரது அழகிய முகத்தைத் தரிசிப்பதும் தடைபட்டு, அன்னவருக்கு எழுதும் கடிதங்களுக்கும் தடங்கல் நேர்ந்து, என்பாடு பெரியதொரு நிர்ப்பந்தத்தில் தகையப்பட்டு விட்டது. கஷ்டமும் தினே தினே மென்மேலும் பெருகிக்கொண்டே யிருந்தது. என் காதலரைப் பல நாளாய்க் காணாதிருக்கவே அவர் மீது கொண்ட காதல் வெள்ளம் கரைபுரண் டோட ஆரம்பித்தது. அவரைக் காண வேண்டுமென்ற தாகம் பொங்கியது. அவரது தரிசனை கார்த்திகைப் பிறையாயிற்று. தெய்வமே எத்தனை நாள் பொறுப்பேன்? எத்தனை யிடர்களைத்



தான் தவிர்ப்பேன்? என்று கலங்கித் தவித்துக்கொண் டிருக்கும் போது இறைவனருளால் எப்படியோ என் காதலரைச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். அத் தருணம் எனது காதலர், தான் டில்லிக்குச் சென்று வருவதாயும் வருவதற்கு 6 மாதங்கள் வரை ஆகலாம் என்றும் சொல்லி ஆசியும் வளங்கினார். இதனைக் கேட்ட வுடன் என் மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதை யிங்கே எவ்விதம் விபரிக்கப் போகிறேன்!

என் காதலர் டில்லிக்குச் செல்கிறார் என்பதை ஒருவாறாகக் கேள்விப்பட்ட என் பெற்றோர்கள், அவர் பிரிவால் நான் மனம் பேதலித்து விடுவேன் என்றும் தங்கள் எண்ணம் போல் விவாகத்தையும் செய்துவிட வேண்டு மென்ற நோக்கத்தாலும் இப்பால் என்னைப் பிரியமாகவே பாராட்டி வந்தார்கள். இவர்களது இவ் வித அபிப்பிராயத்தைக் காதலருக்குத் தெரிவித்தேன். அவர் டில்லிப் பிரயாணத்தை நிறுத்தினார். பெங்களூருக்கு இருவருமாகவே புறப்படுவதெனத் தீர்மானித்தோம். இத் தீர்மானத்தை யிரண்டு நாட்களுக்கு முன்னதாகவே எனது குடும்பத்தார் அனைவரும் அறியும்படி துணிந்து பகிரங்கஞ் செய்து விட்டேன். இதற்கு அவர்கள் எவ்வித தடங்கலான ஏற்பாடுகளையும் செய்யாது பேசாது ஆர்ப்பாட்ட மின்றி யிருந்து விட்டனர். குறித்த தினமே தவறாது என் காதலரும் யானுமாய்ப் பெங்களூர் பிரயாணமானோம். அங்கே சென்று ஓர் விவாக தினத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு ஓர் வக்கீலின் மூலம் என் பெற்றோர்களுக்கு அறிவித்தோம். எவரேனும் வரமாட்டார்களா என்றும் வழிபார்த்து மிருந்தோம்; வரவில்லை. அதன் பேரில் அக் குறித்த தினத்திலே நாங்கள் தங்கி யிருந்த இடத்திலேயே அக்கினியின் முன்பாக மனையறத்துக்கு மாட்சியாகிய மங்கல அணியை, யென் காதலர் தமது கரங்களால் தொட்டு அணிய அணிந்தேன்.

மலரும் மணமும் போல எள்ளும் எண்ணையும் போல நகமும் சதையும் போல கண்ணும் இமையும் போல, காதலரும் யானும் கருத்தொருமித்த வாழ்க்கை நடத்திக் கொண்டு வரும்போது 3 மாதம் சென்று, எனது சிறிய தந்தையார் பெங்களூர் வந்தவர்

எங்களைப் பார்க்காமலேயே சென்றனர். அதன் பின்னர் இரு முறை என் தாய் தந்தையருடன் வந்தனர். என்றாலும் இவர்கள் அனைவரும், எங்களை எப்படியேனும் பிரித்து என்னைக் கைப்பற்றி ஊருக்குக் கொண்டுபோய் விடவேண்டுமென்ற கெடு நினைவால் ஒரு வக்கீலை அடைந்தார்கள். அவர் ஏதேதோ சூழ்ச்சி செய்து காரியம் பார்த்து விடுவதாகக் கூறி அவர்களை யேமாற்றிப் பணம் பறிமுதல் செய்ததைத் தவிர வேறு அவரால் எங்களை என்ன செய்துவிட முடியும்? அது விஷயத்தை முற்றும் விவரித்தால் விஷயம் பெருகிக் கொண்டே போகுமாதலால் இதனை யிம்மட்டோடு விட்டு விட்டு மேலே செல்கின்றேன்.

இனி வக்கீலாலும் எவராலும் யாது மாகாது என்பதை முடிபாகக் கண்ட என் பெற்றோரும் சிறிய தந்தையாரும் எங்களை யடைந்து எனக்கு இனி யாதொரு இடைஞ்சலையும், எந்தவித தப்பான அபிப்பிராயங்களையும், எள்ளளவு தீமைகளையும் செய்வதே யில்லை யென்று பிரதிக்ஞை செய்து கொடுத்ததின் பேரில், என் காதலரின் அனுமதி பெற்று அவர்களோடு கிராமம் வந்து சேர்ந்தேன். என்றாலும் எனக்கேற்பட்ட கஷ்டங்கள் இன்னும் முற்றிலும் தீர்ந்தபாடா யில்லை. என்னை மறுபடியும் விவாகம் செய்து கொள்வதாய் எங்கள் ஜாதியில் பலர் வந்து கேட்கின்றனர். நான் ஒருவரைக் காதலித்து எத்தனையோ இன்னல்களை யெல்லாம் அடைந்து அவரையே நாயகராகப் பெற்று அவரையே எனது உயிரினும் இனிய துணைவராகக் கொண்டு வாழ்ந்து வருகையிலும்கூட, "அம்மா இது உனக் கழகல்ல; மேலும், நம்மள் ரெட்டி ஜாதிக்கு இது வழக்கமு மல்ல. ஆகையினால் நமது இனத்தில் ஒரு கல்யாணம் செய்துகொள்" என்று சொல்லுகின்றனர். இவர்கள் கேவல புத்தியும் அருவருக்கத்தக்க குணமும் மகா இழிவான செய்கையும் மிகவும் ஒழுங்கீனமான நடை முறையும் இருந்தவாறென்ன! என்ன கொடுமை!! என்ன அதர்மம்!!! சகோதரர்களே, காதல் மணத்தினால் என் போன்ற பெண்களுக் கேற்படும் கஷ்ட நிஷ்டூரங்களைக் கவனித்துப் பாருங்கள்.



"காதலின்றி மானிடர் வாழ்வு சாதல் ஒக்கும்", "காதல் மணமே கங்குலுக் குறைவிடம்" "கற்பும் காதலும் காரிகைக் கழகு", "மனத்தை யறிந்து மணத்தை முடி" என்றல்லவா முறையிடுகின்றது இயற்கை மறை.

ஆனால், இப்போது இயற்கையில் மலராது செயற்கையால் பிடித்துப் பிணைத்துச் சேர்த்து வைக்கும் மனை வாழ்க்கை எத்தன்மையதா யிருக்கிறது? அது உலகியல் ஒழுக்கத்திற்கு உயிர் போல்வதாகிய காதலன்பின் வழிச் செல்கின்றதா? இல்லை, இல்லை. கொடும் ஜாதி வேற்றுமை யென்னும் பிசாசானது காதலன்பின் கழுத்தை யிறுக்கிக் கொன்று பழி வாங்குகின்றது. காதலிற் சிறந்து கற்பொழுக்கத்தில் முதிர்ந்து மறுவற்ற மதிபோல் விளங்கத் தக்கவரான பெண்மணிகளின் நிலைமையை எண்ணுங்கால் பரிதாபம்! பரிதாபம்!! எந்தப் பெண்மணிகளாவது தாங்கள் காதலித்த ஒரு புருடனை மணந்து கலந்து வாழ உரிமை யுண்டா? இல்லையே. ஏன்? ஒரு ஜாதிக்குள்ளேதான் ஒரு பத்து வீடுகளேயுள்ள ஓர் இனத்திலேதான் அவள் ஒருவனை மணக்க வேண்டும். அவள் கயல் மீனை யொத்த கண்ணழகியா யிருந்தா லென்ன? இரதியை நிகர்த்த கட்டழகியா யிருந்தாலுந்தா னென்ன? கண் குருடான விகாரத் தோற்றமுடைய ஒருவனைத் தவிர வேறு மணமகன் தன் இனத்தில் கிடைத்திலனாயின், அவள் அவனையேதான் மணந்து தீர வேண்டும்! அவள் முத்துக் கோத்தாலொத்த பல்லழகியா யிருந்தா லென்ன? தன் இனத்தில், பாழும் ஒரு பொக்கை வாய்க் கிழவனைத் தவிர வேறு மணமகன் இல்லை யென்றால், அவள் அவனையேதான் மணந்து தீர வேண்டும்.

இவ் விதத்தில் பொருளற்ற—பொருத்தமே யற்ற இச் சாதி வேற்றுமைக் கொடுமையால் அருமந்த பெண்மணிகள் படும் துயர் மலையினும் பெரிதோ! கடலினும் பெரிதோ!! அன்றி மாநிலத்தினும் பெரிதோ!!! யாதென் றியம்புவேன்.

இதுவன்றி, பல நலன்களால் நிறைந்த சிறந்த ஓர் ஆண் மகனும் ஜாதியின் துயரால் நலஞ் சிறிது மில்லா ஒரு பேதைப்

பெண்ணை மணந்து துன்புற வேண்டியவனா யிருந்தாலும் அவனது நிலை, ஒரு சிறந்த பெண்ணின் நிலைமை போல் அத்துணைக் கொடிதன்று, அன்று என்றே கூறலாம். ஏனென்றால் அவன், தான் விரும்பியபடியே வேறு மகளிரைக் கூடிக் களித்தாலும் அவனை மிகுதியாய்க் குற்றம் சொல்வாரில்லை. ஆனால், பெண்ணாகப் பிறந்தோர்களின் நிலையோ அத் தகையதன்றே. அவர்கள் எவரோடு வெறும் பேச்சுப் பேசினாலும் குற்றம், பார்த்தாலும் குற்றம், கேட்டாலும் குற்றம். அப்பால் சொல்வானேன்.

எனது காதல் இலட்சியமாய் என் வாழ்க்கை நற்றுணையாய் என்றன் நெஞ்சை வாஞ்சித்த பதியாய் நின்ற எனது காதலர் திரு. ஆதிநாராயணா அவர்கள், ஆந்திர தேசத்துப் பிராமண வம்சத்தில் பிறந்தோராவர். ஆனால், ஜாதி மத பேதச் சழக்கை அறுத்து உதறித் தள்ளியவர். எனவே ஆர்ய சமாஜத்தை அதி அன்போடு அடைந்தவர். அன்றியும் அதி தீவிர தேசாபிமானி. மேலும் தான் பிறந்த தேசத்திற்காக எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்யும் மகா தியாகி. அத்தோடு தமது தாய் பாஷையாம் தெலுங்கிலேயும் அன்றி வங்காளம், வட மொழி, கன்னடம், ஹிந்தி, தமிழ், ஆங்கிலம் முதலிய பல பாஷைகளிலும் நல்ல விற்பன்னர். சிறந்த சுதந்திரத் தோற்றமுடையவர். மகாத்மா காந்தி யடிகளின் ஆணை திறம்பாத சிலர். இவரது தவத் தந்தையாரோ வட மொழி, தமிழ், தெலுங்கு பாஷைகளில் அரும் பெரும் காவியங்கள் பல இயற்றி உதவி யிருக்கிறார். காந்தி யடிகளின் சரிதத்தைத் தெலுங்கில் மனங் கவரும் பாடல்களாகப் பாடி யிருக்கிறார். தந்தை அறிஞர் புத்திரர் சிலர் என்றால், எவ்வளவு தூரம் இவர்களைப்பற்றி சிலாகிக்க வேண்டி யிருக்கின்றது! ஜாதி ஜாதி என்ற அந்த ஒன்றிற்காகவே மணக்கலாகாது என்று தடைசெய்யும் இடைக்காலத்தில் புகுத்தப்பட்ட பொருந்தாத அறிவற்ற சட்டத்தை யென்னென் றியம்புவது?

ஆறறிவுடைய மக்களாப் பிறந்து அறிவையும் அழகையும் நற்குணங்களையும் கண்டு பாராட்டிக் காதலன்பு கொள்ளத்தக்க ஆண் பெண் மக்களா, இடையே புகுந்த ஜாதி வேற்றுமை யென்னும் பாழான கொலைக் கருவியால் வெட்டி யழிக்கப்படுவது? ஆண் பெண்



ணும் உயிரைக் கொலை புரிந்துவிட்டு இழிந்த காமப் பிண வாழ்க்கையிற் காலங் கழிக்கும் படியாகக் கட்டாயப் படுத்தப்பட்டால் இனி இதனிலும் வேறு கொடுஞ் சித்திரவதையான கொலையு முண்டோ? அறிஞர்களே கூறுங்கள்.

உலகியலின் அற ஒழுக்கத்திற்கு அடிப்படையான காதல்— அன்பை அடியறுத்து விட்டால், அதன் மேல் நிற்கும் வாழ்க்கை கீழ் விழுந்து நொறுங்கா தொழியுமோ? ஆதலின், சகோதர சகோதரிகளே! வேதம் போற்றுங் காதல் மணமே நீதிக்கும் அறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் உகந்ததென அறிந்து கடைப்பிடிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

---

குறிப்பு:—

“எனது காதலின் வெற்றி” என்ற இந்த வியாசத்தை எழுதிய திருமதி. சத்தியவதி அம்மையாரைப் பற்றியும் அவர்தம் காதலரைப் பற்றியும் வாசக நேயர்களுக்காகச் சிறிது குறிப்பிட வேண்டியது அவஸ்யமாகும்.

சென்ற ஜனவரி௴ (“பாரதி” மலர் 2. மணி. 1.) சஞ்சிகையில், “எனது கலப்பு மணம்” என்ற விஷயத்தை எழுதி யிருக்கும் திரு. க. ஆதிநாராயணா அவர்களே, இந் நாரீ மணியின் கொழுநராகு மென்பதை யறியலாம். இவர் தற்போது தேசியப் போரிலீடுபட்டுச் சிறைவாசத்திலிருந்து வருகின்றார். இச் சதிபதிகளின் இன்றைய நிலை வெளி உலகத்தவருக்கு வருந்தத் தக்கதாகவே தோன்று மெனினும், உண்மைக் காதலர்களாகிய இவர்களின் மனம் மட்டும் கலங்காது சிதறாது தளராது முன்னிலும் திடங் கொள்ளவும் சாந்தியின் உண்மையையும் காதலின் உயர்வையும் நன்கறியவும் சாதகமாயிருந்து வருமென்றே சொல்லலாம்.

இவ் விருவர்களும் தங்கள் தங்கள் விஷயத்தை அனுபவித்த உண்மையை மிகவும் விளக்கமாக் கூறி, தங்கள் போன்று கஷ்டமுற்றுக் காதலை நிலை நாட்ட முற்படுவோருக்குப் பெருந் துணையாயும் அல்லாதவர்களுக்குக் காதலைப் பற்றி முன்னிலும் திட நம்பிக்கை கொள்ளவும் காதலராவோருக்குத் துணை செய்யவும் உதவியாக நிற்கும்படி செய்த, இவர்களுக்கு மனமுவந்த நன்றி பாராட்டுகின்றோம். காதலரிருவரும் ஒருமித்த மனத்தினராக வாழ்ந்து நாட்டுக்கும், கொண்ட கொள்கைக்கும் பயன் தரத்தக்கவர்களாக நின்று நிலவ பரமன் அருள்புரியுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆசிரியர்.

# இந்திய அரசர்களும் இராஜ்யங்களும்.

**திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)**

(முன் 47-ம் பக்கத் தொடர்ச்சி.)




## அரசர்களின் வாழ்க்கை

௯௨௰ அக்டோபர்மீ வைட் ஆனரபில் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் கொச்சின் நகரத்தில் கீழ் வருமாறு தன் உபந்யாசத்தில் கூறியிருக்கிறார்:—

“.........ஒரு உண்மையை நான் எடுத்துக் காட்டுகிறேன் கடந்த பத்துப் பன்னிரண்டு வருஷங்களாக இந்திய கவர்ன்மெண்டார் இந்திய அரசர்களின் தர்பார் முதலிய ஆடம்பரங்களில் தடுக்கத் தலையிட்டுக் கொள்ளாததால் அவர்கள் நியமித்த ஏஜெண்டு, அரசர்கள் ஆளுகை முற்றிலுந் தவறு யிருந்தாலொழிய மற்ற விஷயங்களில் தலையிடுவதில்லை............... அநேக அரசர்கள் அவர்கள் அரண்மனைகளில் காணப்படுவதே யில்லை. அவர்களின் ஜனங்களின் திரவியங்களால் எங்கு சந்தோஷ சாகரத்தி லாழ்ந்திருக்க முடியுமோ அங்கே அவர்களைக் காணலாம். லண்டனுக்குச் செல்லுங்கள், பாரீஸ் நகருக்குச் செல்லுங்கள், மற்றெந்த (நவீன) நாகரீக நகர்களுக்கும் செல்லுங்கள். அங்கே தங்களருகில் வருவோரைக் கெடுத்தும், ஐரோப்பிய ஜனங்களின் கண்களைக் கவரக்கூடிய ஆடையாபரணங்களுடன் திரியும் சில இந்திய அரசர்களைப் பார்ப்பீர்கள்.”

இந்திய அரசர்கள் தங்கள் தேக சௌக்கியத்திற்காக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதாகத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இது எவ்வளவு தூரம் உண்மை என்பது எல்லோருக்குந் தெரியும். சமீபத்தில், அநேக அரசர்கள் இங்கிலாந்திற்குச் சென்று சில காலம் வசித்துவர சாக்குப் போக்குகளுக்கு அநுகூலமாய் பட்லர் கமிட்டி சிபார்சு செய்திருக்கின்றது. இவர்களுக்கு,



இந்தியாவின் திரவியங்கள் இங்கிலாந்திற்கு, இவ் வரசர்கள் மூலமாகவும் வந்து சேரட்டு மென்னுங் கருத்துப் போலும். கடந்த மகா யுத்தத்திற்கு முன் இந்திய அரசர்கள் இந்தியா கவர்ன்மெண்டின் உத்தரவின்றித் தங்கள் நாடுகளை விட்டுப் போகக் கூடாதவர்களா யிருந்தனர். சண்டைக்குப் பின் அது மாறிவிட்டது.

ஒரு அரசருடைய அடாத செய்கைகளை விசாரித்தறிய இந்திய கவர்ன்மெண்டார் தலையிட்டால் அதற்கு அவ் வரசர் சரியான காரணங் காட்டித் தப்பித்துக்கொள்ள வழியில்லாவிட்டால் தன் அரசாட்சியை இழந்து விடுகிறார். இப்படி இராஜிநாமா செய்வதிலும் அவர்களுக்குப் பெருத்த இலாபமுண்டு. அரசாட்சியினின்றும் நீங்கிய அரசர்களுக்குப் பெருத்த உபகாரச்சம்பளம் கிடைத்து விடுகிறது. அதைக் கொண்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பெருந்தன்மைக்குப் பிரார்த்தித்து, மீதியான தன் ஆயுளை பாரீஸ் முதலிய சுகங்களனுபவிக்கும் நகரங்களில் கழித்து வருகின்றனர். அதற்கப்பால் சிம்மாசனத்திற்கு வரும் அவருடைய புதல்வரும் தன் தந்தை எந் நெறி பற்றிச் சென்றாரோ அந் நெறி பற்றிச் செல்லுகிறார். இதற்குத் திருஷ்டாந்தமாக இந்தூர் (Indore) அரசர்களைக் கூறலாம். இங்கு அடுத்தடுத்து மூன்று அரசர்களும் இதே விதமாய் நடந்திருக்கின்றனர். கடைசியான துக்கோஜி ராவ், மும்தாஜ்பீகம் என்ற மாதின் சம்பந்தத்திலும், நான்ஸி மில்லர் என்ற அமெரிக்கா மாதின் சம்பந்தத்திலும் உலகத்திற்கு மிகவும் அறிமுகப்பட்டார். இவர் சிம்மாசன மிழந்தும் வருஷத்திற்கு 50,000 பவுன் தரித்திரத்தி லாழ்ந்துகிடக்கும் தன் குடிகளிட மிருந்து உபகாரச் சம்பளமாகப் பெற்று வருகிறார். ஓர் இராஜ்யம் தரித்திரமடைய இதைவிட வேறு வழியும் வேண்டுமோ? தர்பார்களும், கலியாணங்களும் ஜனங்களின் வறுமையைப் பாராமல் ஏராளமாகச் செலவு செய்து நடை பெறுகின்றன.

அரசர்களுக்கு அன்புள்ள ஒரே மனைவியில் நம்பிக்கை யில்லை. கலியாணஞ் செய்து சில காலமாகுமுன் தாங்கள் காதலித்த மனைவி

யின் மேல் கசப்படைந்து மறு விவாகஞ் செய்கிறார்கள். இதிலும் ஏராளமான செலவு ஏற்படுகிறது. இரண்டாம் மனைவி வந்தவுடன் முதல் மனைவியின் கெதி கொஞ்சம் உபகாரச் சம்பளத்துடன் அரண்மனையி லோர்பாகத்தி லிருக்க வேண்டியதுதான். வெகு சீக்கிரத்தில் இரண்டாம் மனைவியும் அதே கெதி யடைய வேண்டியதாகிறது. அப்படியே மூன்றாவதும். இப்படிக் கலியாண முறையில் வைத்துக் கொள்ளும் மனைவிகளைத் தவிர வேறு வைப்பாட்டிகளுக்கோ கணக்கில்லை. இஃதன்றி, ஐரோப்பா தேச யாத்திரையிலும் அநேக விவாகங்கள் நடைபெறுகின்றன. இந்தூர் மகா ராஜா அமெரிக்கா தேசத்திலும், கபூர்தாலா மகா ராஜா ஸ்பெய்ன் தேசத்திலும், காலஞ் சென்ற புதுக்கோட்டை மகா ராஜா ஆஸ்திரேலியா தேசத்திலும், இப்படியே இன்னும் இரண்டொருவர் தங்களுக்கு நவீன நாகரீக நாட்டிலிருக்கும் அருமைக் காதலிகளைக் கண்டெடுத்திருக்கின்றனர்.

கடந்த ஆகஸ்ட் மீ 23௳ பாடியாலா மகா ராஜா இங்கிலாந்துக்குப் புறப்படப் போவதாகத் தெரிந்த அநேக ஜனங்கள், கப்பல் துறைமுகத்தில் கூடித் தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொள்ளத் தயாரா யிருந்ததைக்கண்ட மகா ராஜா, கப்பல் ('மாஸிடோனியா') பிரயாணப்பட்டபிறகு வேறோரிடத்திலிருந்து ஒரு மோட்டார் படகிலேறிக் கப்பலை யடைந்தா ரென்றால், ஜனங்கள் எவ்வளவு தூரம் அரசர்கள் மீது அபிமானமுள்ளவர்களா யிருக்கிறார்க ளென்று தெரியவருகிறதல்லவா? நமது இந்திய அரசர்கள் தங்கள் ஆளுகையில் அதிகக் கவனஞ் செலுத்துகிறதில்லை யென்று பின் வரும் சம்பவத்திலிருந்து நன்கு தெரியும்.

ஒரு முதல் தரமான இராஜ்யத்தில் தலைமைச் சுகாதார அதிகாரி யொருவரிருந்தார். அவர் எப்படியோ மந்திரியின் கோபத்திற் காளானார். வெகு காலம் உத்தியோகத்திலிருந்த இவர் திடீரென்று வேலையினின்றும் நீங்கும்படி, அரசரின் கையொப்பமிட்ட உத்திரவு வந்தது. அதனால் அவர் வேலையை விட்டு வேறோரிடஞ் சென்று சுயமாக வேலை பார்த்து வந்தார். இரண்டு வருஷங்களுக்குப் பின் இவர், தான் முன் வேலை பார்த்துவந்த இராஜ்யத்தின்



அரசரை ஓர் ஸ்டேஷனில் எதிர்பாராமல் சந்தித்தார். அரசர் ஆச்சரியமுற்று, அவர் (டாக்டர்) ஏன் அங்கு வந்திருந்தார் என்று வினவ, அதற்கு டாக்டர் அதிக ஆச்சரியமடைந்து, நடந்ததைச் சொன்னார். அரசர் திடுக்கிட்டு தான், அப்படி உத்திரவு பிறப்பிக்கவில்லை யென, உடனே டாக்டர் அரசர் கையொப்பமிட்ட உத்திரவைக் காண்பித்தார். அதற்கு அரசர் தனக்கு உண்மை விஷயந் தெரிவிக்காமலே தனது கையொப்பம் வாங்கப்பட்டிருக்க வேண்டுமென்று வருத்தப்பட்டு, அவரை மறுபடியும் வந்து சேர்ந்துகொள்ளும்படி உத்திரவு கொடுத்தார். இந்த உத்திரவும் முன் செய்த உத்திரவைப் போலத் தெரியாமல் போய்விட்டால் தன் கெதி மிகவும் ஆபத்தென் றெண்ணி, டாக்டர் புத்திசாலித் தனத்தோடு வேலையை மறுத்துவிட்டார்.

## அன்றும் இன்றும்

பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் அதிகாரஞ் செலுத்து முன், நம் இந்திய அரசர்கள் தங்கள் குடிகளுக்கே உத்திரவாதிகளா யிருந்தனர். அவர்களின் நீடித்த ஆளுகை பெரும்பாலும் ஜனங்களின் நல்லெண்ணத்தைத் தழுவி நின்றது. முற் காலத்தில் "மஹாஜனம்" என்ற பெரியோர்களால் கூடப்பட்ட சங்கங்க ளிருந்தன. இச் சங்கத்திற்குப் பலஜாதிகளிலும் அறிவு வாய்ந்த பெரியோர்களை அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட் டிருந்தது. இக் கூட்டத்தார் ஜனங்களின் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பூரணமாய்ப் பெற்றவர்கள். இக் கூட்டம் சகல அதிகாரமுங் கொண்டதாய் ஜனங்களின் க்ஷேமத்திற்குப் பாடுபட்டது. சண்டை, சச்சரவு முதலிய விவகாரங்களையும் தீர்த்து பொதுவாக ஒரு கவர்ன்மெண்டின் வேலையில் பெரும் பாகத்தைப் பார்த்து வந்தது. அரசர்கள் இக் கூட்டத்தை மீறி யொன்றுஞ் செய்யக் கூடாது. அரசர்கள் குடும்பத்தில் சச்சரவுக ளேற்பட்டாலும் இக் கூட்டத்தாரே தீர்ப்புச் செய்தனர். அரசர் ஏதாவது விரோதமாக நடந்துகொண்டால் உடனே இக் கூட்டத்தார் சகல வேலைகளையும் நிறுத்தி நியாயங் கிடைக்கும்வரை அரசரோடு எதிர்த்துப் போராடுவர். ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய ஆயுதங்களைக் கேள்விமுறையின்றி

வைத்திருந்தனர். அன்றிருந்த பெருமை யெல்லாம் மறைந்து இன்று ஜனங்கள் அடிமைகளாய்க் கஷ்டப்படுகின்றனர்.

கடந்த பத்து வருஷங்களாக ஜனங்கள் முன்னிருந்த உரிமைகளை யெல்லா மிழந்து மிகவும் கேவலமாய் நடத்தப்பட்டு வருகின்றனர். ஆனால் இப்பொழுது இந்தியா சுதந்திரத்திற்குப் பாடுபட்டு வெற்றிபெருந் தருவாயி லிருப்பதைக் கண்டு, இவர்களுக்கு ஒரு வகையில் முன்னிருந்த உரிமைகள் பெறக் காலம் வந்துவிட்டதென்று மகிழ்வுறுகின்றனர். ஒருவன் மற்றொருவன் உடலை அடிமை கொள்ளலாம். ஆனால் அவன் ஆத்மாவையும் அடிமை கொள்ள முடியுமா? அக் காலத்தில் வேலை யில்லை என்ற சொல்லே கிடையாது. ஒவ்வொரு வர்க்கமும் தன் தன் சுய வேலைகளை வெளியிலும் வீட்டிலும் பார்த்து யாதொரு குறைவுமின்றி யிருந்த காலமும் மறைந்து விட்டது. அக் காலத்தவர்களுக்கு வேலைகள் கிடைத்து, ஆகாரங்கள் திருப்தியுட னருந்தி, வெகு திடகாத்திரர்களாய், பலசாலிகளாய், வைத்தியர் முகம் பாராமல் வெகு நாளைக்கு ஜீவித்திருந்து வந்தனர். ஆனால், இன்றோ! மேனாட்டார் இந்தியாவில் இயந்திரங்களையும், மலிவான சாமான்களையும் கொண்டு வந்து நிறைத்து சுறு சுறுப்பாய் பாடுபட்டவர்களை, எப்படி அலைகளில்லாக் குளம் துர்நாற்றமடைந்து விடுமோ அப்படி, சோம்பலாக்கி வேலை கிடையாமல் தரித்திரர்களாய் உண்ண உணவின்றி மாய்க்கின்றனர். அக் காலத்தில் எட்டடியுள்ள மனிதர்களை எங்கும் பார்க்கலாம். இன்று ஆறடி மனிதரைக் காண்பதரிது. இந்த க்ஷீண திசைக்குக் காரணம் நமது அடிமைத்தன மல்லவா? இவைகளை யெல்லாம் ஒருவர் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், நம் மகாத்மா காந்தி யடிகளின் "சர்க்கா"வின் உண்மையும் சுதந்திரப் போரின் தன்மையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கும்.

இந்திய அரசர்களின் ஆட்சிகள் ஒவ்வொரு வைசிராயின் கீழ் அநேக மாறுதல்களடைந்து வந்திருக்கின்றன. லார்ட் டெல்ஹௌஸி (1853) வரை பின் சந்ததி யில்லாத இராஜ்யங்களை பிரிட்டிஷார் சேர்த்துக் கொண்டனர். ஈஸ்ட் இந்தியா கம்பெனியிடமிருந்து சகல உரிமைகளையும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் ஏற்றுக்



கொண்டவுடன், அப்படிச் சேர்த்துக் கொள்ளும் கொள்கை நிறுத்தப்பட்டது. ஆகவே பிள்ளை யற்ற அரசர்கள் பிள்ளைகளெடுத்து வளர்த்து உரித்தாக்க உரிமை ஏற்பட்டது. அக் காலத்தில் அரசர்கள் கொடூரமாய் அரசாட்சி செய்தால் இந்திய கவர்ன்மெண்ட் வேண்டியபோ தெல்லாம் தலையிட்டுக் கண்டித்து வந்தது. ஆனால் கடந்த மகா யுத்தத்திற்குப் பின் (1914—19) எல்லாவற்றையும் அரசர்களை நம்பி அவர்கள் பொறுப்பாக விடப்பட்டன. கடந்த யுத்தத்தில் இந்திய அரசர்கள் பிரிட்டிஷாருக்கு இராணுவமும், பணமும் ஏராளமாய்ச் சேகரித் துதவியதால் பிரிட்டிஷார் பிரதி உபகாரமாக அரசர்களுக்கு அநேக உரிமைகளைக் கொடுத்து விட்டனர். ஆனால் மகாத்மா காந்தியிடம், சண்டையில் ஒத்தாசை செய்தால் சண்டை முடிந்த வுடன் இந்தியாவுக்குச் சுதந்திரங் கொடுப்பதாய் வாக்குறுதி செய்த பிரிட்டிஷ் மந்திரி (லாய்ட் ஜபார்ஜ்), இந்தியாவின் ஒப்பற்ற உதவியடைந்து சண்டை முடிந்தவுடன் மௌனஞ் சாதித்து விட்டது அவர்களின் வாக்குஞ் செயலும் ஒன்றா யிராததை தெற்றென விளக்கிற்று. இந்திய அரசர்களுக்குச் சிறிது சுதந்திரங்கள் கிடைத்த வுடன் குடிகளின் சுதந்திரத்தைப் பறிக்கவாரம்பித்தனர். இந்தியாவுக்குப் பூரண சுதந்திரங் கிடைத்து விட்டால் தங்கள் நிலைமைக்கு ஆபத்து நேரிடுமெனக் கருதி இவர்கள் அதற்கு நேர் விரோதமாய்ப் பாடுபடுகின்றனர். இந்திய அரசர்கள் சுயநலப் புலிகளா யிருக்கச் சுதந்திரங்களைக் கொடுத்து ஜனங்களை வருத்த ஏதுவா யிருந்தது இந்திய கவர்ன்மெண்டென்று கூறாமலிருக்க முடியாது.

## இந்திய அரசர்கள் சங்கம்
## (The Chamber of Princes)

1921ஆம் பிப்ரவரிமீ 8உ இந்திய அரசர்கள் சங்கம் டில்லி நகரில் கான்னாட் இளவரசரால் (H. R. H. Duke of Connaught) திறந்துவைக்கப்பட்டது. இந்திய அரசர்கள் ஒன்றுகூடி யோசித்துத் தங்கள் குறைகளை நீக்க வழிதேடி தாங்களும் தங்கள் குடிகளும் க்ஷேமமடைய இச் சங்கம் உண்டாக்கப்பட்டது, இச் சங்கத்தில் 118 முதல்தரமான இராஜ்யங்களில் 108 மாத்திர

சேர்ந்து கொண்டன. ஹைதராபாத், மைசூர், திருவாங்கூர், கொச்சின், இந்தூர் முதலியவை சேரவில்லை. இங்குள்ள அரசர் தங்கள் இஷ்டம்போல் குடிகளின் நிலைமை சரிவரத் தெரியாது சேர்ந்து கொண்டு அவர்களுக் குண்டான உண்மையான குறைவுகளை எடுத்துரையாமல் இருப்பதைவிட அங்கத்தினர்களாய்ச் சேராமலிருப்பது மேலெனக் கருதினார்கள் போலும். இச் சங்கத்தில் 127 இரண்டாந்தரமான ஸ்டேட்ஸ்கள் தங்களுக்காக 12 பிரதிநிதிகளைச் சேர்த்தனுப்புகின்றன. ஆதலால் இச் சங்கத்திற்கு அங்கத்தினர்கள் 120.

இச் சங்கத்தில் சேராத இராஜ்யங்கள் அநேகமாய் ஜனங்களின் பிரதிநிதிகளடங்கிய சபைகளுடன் ஆளப்படுகின்றன. இவைகளின் மொத்த விஸ்தீரணம் 145,328 சதுர மைல். ஜனத் தொகை 27,396,597. வரி வருமானம் ரூ. 172,851,000. ஆனால் மேல் குறித்த சங்கத்தில் சேர்ந்திருக்கும் இராஜ்யங்களின் மொத்த விஸ்தீரணம் 446,404 சதுர மைல். ஜனத் தொகை 40,454,803. வரி வருமானம் சுமார் ரூ. 29 கோடி. ஆகவே இச் சங்கத்தின் கருத்து எல்லா இந்திய அரசர்களின் கருத்தெனக் கொள்வது கூடாது. அங்கு நிறைவேறும் தீர்மானங்களெல்லாம் ஒவ்வொரு அரசர்களின் சுயநலங் கருதியே யன்றி அவர்களின் குடிகளின் க்ஷேமத்திற்கன்று. ஒரு கூட்டத்தில் கூடும் பிரதிநிதிகளோ 40-க்கு மேலாகாது. இவர்களில் வெகு சிலரே விஷயங்களை எடுத்துப் பேசும் வல்லமை வாய்ந்தவர். மற்றவர்கள் தங்கள் வாய்களைத் திறவாமல் பொம்மைகள் போல் சோபாவில் அமர்ந்திருப்பார்கள். தொடங்கிய காலந் தொட்டு இன்றுவரை இச் சங்கத்தின் நிகழ்ச்சிகள் யாவும் தாராளமாய் வெளியிடப்படவில்லை. கடந்த ஒன்பது வருஷக் காலமாய் நடந்த நிகழ்ச்சிகளில் வைசிராய் இச் சங்கத்தைச் சமீபத்தில் திறந்து வைத்தபோது பேசிய விஷயங்களே வெளிவந்துள்ளன.

கடந்த நூறு வருஷங்களாகத் தங்களுக்கும் இந்தியா கவர்ன்மெண்ட் சம்பந்தத்தால் ஏற்பட்ட 23 குறைவுகளில் சென்ற ஒன்பது வருஷங்களில் குறைகளை மாத்திரம் நீக்கிக் கொண்டனர்.



இந்தியாவில் என்றுமில்லாத் தேசாபிமானம் தாண்டவமாடி தங்கள் தேசம் விடுதலை யடைந்து சுதந்திரம் பெற ஒவ்வொருவரும் பாடுபட்டு சித்தி பெறும்படியான நிலைமையைக் கண்டு, இந்திய அரசர்கள் தங்கள் வேலையைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டு மென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை தங்கள் குறைவுகளை விசாரித்தறிந்து சீக்கிரம் நீக்கிவிடும்படி முன்னிலும் பதின் மடங்காய் முறையிட்டனர். 1927ஆு மேமீ சிம்லாவில் வைசிராயிடம் அநேக அரசர்கள் சென்று கூடிப் பேசித் தங்கள் குறைவுகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும்படியான நிலைமைக்கு வர, விஷயங்களை விசாரித்தறிய பட்லர் கமிட்டி யொன்றை ஏற்படுத்த வழி தேடிக்கொண்டனர்.

அநேக இந்திய அரசர்கள் இந்தியா எப்பொழுதும் பூரண சுதந்திரம் பெறக்கூடா தென்னும் எண்ணமுடையவர்களா யிருக்கின்றனர். அப்படிச் சுதந்திரங் கிடைத்து விட்டால் தாங்கள் எப்பொழுதும்போல பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்தே வரப்போவதாயுங் கூறுகின்றனர். பிரிட்டிஷார் இந்தியாவுக்கு எவ்விதமான சுதந்திரங் கொடுக்க உத்தேசித்த போதிலும் இந்திய அரசர்களின் நிலையைப் பாகுபடுத்த முடியாது திகைக்கின்றனர். இங்கிலாந்தில் நடந்துவரும் வட்ட மேஜை மகா நாட்டுக்கு அநேக இந்திய அரசர்களும், அவர்கள் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுச் சென்றிருக்கின்றனர். இந்திய அரசர்கள் மாத்திரம் சுயநலங் கருதாது இந்திய ஜனங்களின் விருப்பத்திற்கு முட்டுக் கட்டைகளா யில்லாவிட்டால் இந்தியாவுக்கு வெகு சுலபமாய் கேட்ட சுதந்திரம் கிடைத்துவிடுமென்பதில் யாதொரு ஐயமுண்டோ? இவர்களுக்கு, என்று இந்தியாவின் உயர்வும் உண்மையும் தெரியப்போகிறதோ தெரியவில்லை. எப்படியும் இந்தியா வெகு சீக்கிரம் சுதந்திரம் பெற்றுவிடும். அன்று "அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டவர்"களின் நிலைமையையே இவர்களும் அடையப் போகிறார்களென்று மிக வருத்தத்துடன் அறிவுறுத்துகின்றோம்.

# பெண்களும் பௌத்தமதப் பிரசாரமும்.

**(மனோகரனார்.)**

இந்தியர்கள், கிறிஸ்து மதப் பிரசாரகர்களைப் பார்த்தே தங்கள் மதத்தைப் பற்றிப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டுள்ளார்களென மேல் நாட்டுப் பண்டிதர்களும், ஆங்கிலம் படித்த இந்தியர் சிலரும் சாதாரணமாகக் கூறுகின்றனர். அவர்களுக்கு இந்தியாவின் புராதனமான சரித்திர ஆராய்ச்சியில் அறிவில்லாமையே அதற்குக் காரணம். இந்து மதமானது (வேதாந்த மதம்) உலகில் தோன்றியுள்ள மதங்கள் எல்லாவற்றிலும் மிகவும் பழமையானதென்பதை அறிஞர் யாவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். அப்படிப்பட்ட பழமையான மதத்தை உலகில் பரப்பியவர்கள் காற்றையும், காய்ந்த இலை சருகுகளையும், காட்டில் கிடக்கும் காய் கனி கிழங்குகளையும் உணவாகக் கொண்டு வாழ்ந்த தவத்தின் மிக்க முனிவர்களென்பதை யாரே மறுக்க வல்லார்? அவர்கள் இப் பரத கண்டத்திலேயே யன்றி உலகத்தின் நாலு பக்கங்களிலும் நம் இந்து மதத்தைப் பரவச் செய்திருக்கின்றனர். பௌத்த மதமென்பதை இந்து மதத்தின் ஒரு கிளையென்றே ஆராய்ச்சியாளர் அங்கீகரித்துள்ளார். நமது புராணங்களும் அப்படியே கூறுகின்றன. மஹா விஷ்ணுவே பௌத்தராக அவதரித்தாரென்பது இந்தியரின் கொள்கை. போக்கு வரவுக்குரிய சாதனங்கள் பல ஏற்பட்டுள்ள இக் காலத்தில், அதிலும் அதிகாரமும், அரசியல் பாதுகாப்பும், பண வலிவும் படைத்துள்ளனவாகிய மகம்மது, கிறிஸ்து முதலிய மதங்களின் போதகர்கள், தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக எந்தத் தேசத்திற்குச் சென்றாலும் அங்கு அதற்கு முன்னரே பௌத்த மதமானது பரவி யிருக்கின்றதைக் காண்கின்றனர்.

பௌத்த மதமானது ஒவ்வொரு பிராணியி னிடத்திலும் அன்பு செலுத்துமாறு பணிக்கிறது. மகம்மதிய மதமோ தன்னைப் போன்ற



பிற மகம்மதிய ரிடத்திலும், கிறிஸ்து மதமோ தன்னைப் போன்ற பிற சகோதர மக்கட் பிறப்பின ரிடத்திலும் மாத்திரமே அன்பு செலுத்துமாறு கட்டளையிடுகிறது. இவ் விஷயத்தில் இந்து மதமோ வெனில் பௌத்த மதத்தையுங் கடந்து முன் சென்று செடி கொடிகளுக்கும் உயிருண்டென்பதை ஒப்புக்கொண்டு அவற்றினிடத்தும் இரக்கங் காட்டுமாறு அறை கூவுகிறது.

இந்து மதமானது அயல் நாடுகளுக்கு எவ்விதம் பரவச் செய்யப்பட்டது என்று நிலையாகக் கூறுவதற் கேற்ற சாதனங்கள் தென்படவில்லை. ஆயினும் இந்து மதக் கொள்கைகளும், இதன் நாகரீகமும் அமெரிக்கா போன்ற அதி தூர நாடுகளிலும் பரவி யிருப்பதைக் காண்கிறோம். ஜாவா, சிங்களம் முதலிய தீவுகளில் இற்றைக்கும் இந்து சமயச் சார்பான வெகு புராதனமான கோவில்கள் காணப்படுகின்றன. அமெரிக்காவில் பூர்வ குடிகள் இப்பொழுதும் ஆங்காங்கே சீதா ராமர்களின் உற்சவங்களை நடத்தி வருகின்றனராம். இதைப் போன்ற பல உதாரணங்கள் கிடைப்பதால் இற்றைக்குச் சில ஆயிர வருடங்களுக்கு முன்னரே இந்து மதமானது பல தேசங்களிலும் பரவி நிலை கொண்டிருந்த தென்பதை உறுதிப்படுத்தலாம். அயல் நாட்டார் பலர் நம் நாட்டுக்குப் போந்து, நம் மதத்தின் உண்மைகளை உணர்ந்து சென்றார்களென்றுந் தெரிகிறது. மகம்மதிய, கிறிஸ்து மத போதகர்களைவிட முன்னாலேயே பௌத்த மதப் பிரசாரகர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று, தங்கள் மதத்தைப் போதித்து, அந்நிய மதஸ்தர்களைத் தங்கள் மதத்திற் சேர்த்திருக்கிறார்கள். (இந்து மதத்தின் கிளையாகிய) பௌத்த மத போதகர்களைப் பார்த்தே கிறிஸ்து, மகம்மது முதலிய சமயத்தார் சமயப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டார்களென்று ஆராய்ச்சியால் அறிகின்றோம்.

பௌத்த மதப் பிரசாரம் செய்தவர்களில் ஆடவர்களே யன்றி பெண்டிரு மிருந்தார்களென்பது குறிப்பிடத் தக்கதாம். ஸ்திரீகளுக்குச் சம சுதந்திரங் கொடுக்க வேண்டுமென்று பிரபலமாகப் பேசப்படும் இக் காலத்திலும், ஸ்திரீகள் யாரேனும் மத போதனை செய்ய

முன் வருவாராயின் அதிசயப் படக்கூடிய நாம், அக் காலத்தில் பெண்களும் பௌத்த மதப் பிரசாரம் செய்தார்க ளென்பதைப் பற்றிப் பெரிதும் வியப்படைவோம். பௌத்த மத ஸ்திரீகள் தாய் நாட்டிலேயே யன்றி அயல் நாடுகளுக்கும் சென்று மதப் பிரசாரம் செய்து மாத ருலகத்திற்கு வழிகாட்டிக ளாயினர். ஸ்திரீகள் பௌத்த சமய தீக்ஷைகளை எவ்வாறு பெற்றார்க ளென்பதையும், புத்த பகவான் அப் பெண்களுக்கு எவ்வித நிபந்தனைகளை ஏற்படுத்தி யிருந்தா ரென்பதையும் இங்கே சிறிது கூறுவோம்.

புத்த பகவானுடைய தந்தையாராகிய சுத்தோதனர் தேகவியோக மடைந்ததன் பின்னர் புத்தரின் தாயாராகிய கௌதமி தேவியார் பௌத்த மத தீக்ஷையைத் தனக்கும் கொடுக்கும்படி புத்திரனை வேண்டினார். அது காறும் ஸ்திரீகளுக்கு மத தீக்ஷை கொடுக்கப்பட வில்லை யாதலால், அச் சமயத்தில் என்ன செய்வ தென்பதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டி வந்தது. அதைப் பற்றி பௌத்த நூல்களில் கீழ்க் குறித்தவாறு எழுதப்பட்டுள்ளன.

“கௌதம ரானவர் ஞானோதயம் பெற்று புத்த ரானதன் பின்னர் நான்கு ஆண்டுகளில் அவரது தந்தையாராகிய சுத்தோதனர் (தமது 94-வது பிராயத்தில்) பரலோக மடைந்தார். அத் துக்க சமயத்தில் புத்தரானவர் தந்தையாரின் பதிக்குச் சென்று, உறவின் முறையா ரனைவருக்கும் ஆறுதல் கூறித் தேற்றினார். அங்கு அவர் சின்னாள் தங்கி யிருந்து, மீண்டும் தாம் வசித்துவந்த விசால க்ஷேத்திரத்திற்குப் புறப்பட்டார். அப்பொழுது அவரது அன்னையாராகிய கௌதமி தேவியாரும், கௌதமரின் மனைவியாராகிய யசோதரை யம்மையும், மற்றுஞ் சில அரச குமாரிகளும் அவருடன் கூட வந்தனர். அது காலையில் கௌதமி தேவியானவர் பௌத்த மத தீக்ஷையைப் பெற்றுக் கொள்ளத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். ஆனால் புத்தர், இன்று இவ் வம்மைக்கு தீக்ஷை கொடுத்தோமானால் மற்றும் பல ஸ்திரீகள் தீக்ஷை பெற்றுச் சந்நியாசினிக ளாவார்க ளென்றும், அதனால் பௌத்த சமூகத்தில் பல குறைபாடுகள் நேரலா மென்றுங் கருதி, தீக்ஷை கொடுக்க மறுத்து விட்டார். ஆயினும் கௌதமி தேவியானவர் தான் கொண்ட எண்ணத்தினின்றும் சிறிதும் வழுவாமல், தானே தலை



மயிரைக் கழித்துக் காஷாய வஸ்திரத்தை யணிந்து கொண்டார். அவ் விஷயத்தைச் சீடர்கள் புத்தருக்குத் தெரிவித்தனர். புத்தரானவர் அவ் வம்மையின் வைராக்கியத்தைக் கண்டு, களித்து, தீக்ஷையைக் கொடுத்து அவரை பௌத்த சங்கத்தில் சேர்த்துக் கொண்டார். ஏற்ற சமயத்தை யெதிர் பார்த்துக்கொண் டிருந்த யசோதரை யம்மையும், மற்ற ஸ்திரீகளும் உடனே பௌத்த சங்கத்தில் சேர்ந்தனர்.” அத்துடன் பௌத்த சங்கத்தில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. பௌத்த சங்கத்தில் சேர்ந்த பெண்கள் கீழே குறித்த எட்டு நிபந்தனைகளைக் கட்டாயமாக அனுசரிக்க வேண்டுமென்று புத்தர் கட்டளையிட்டார்.

1. பிக்ஷுணிகள் (ஸ்திரீ சந்நியாசினிகள்) பிக்ஷுக்களுக்கு நமஸ்கரிக்க வேண்டும்.

2. வர்ஷ ருதுக் காலத்தில் பிக்ஷுக்க ளில்லாத இடத்தில் பிக்ஷுணிகள் வசிக்கலாகாது.

3. பிக்ஷுணிகள் உபதேச காலத்தி லன்றி மற்ற சமயங்களில் பிக்ஷுக்களுடன் வார்த்தையாட லாகாது.

4. பிக்ஷுணிகள் வர்ஷ ருது முடிந்த வுடனே பிரவாரண மென்ற விரதத்தை யனுஷ்டிக்க வேண்டும்.

5. ஏதேனும் தவறிழைத்தால் சங்கத்தின் முன்னால் பிக்ஷுணி சிக்ஷிக்கப் படுவாள்.

6. தீக்ஷை பெற்ற பிறகு இரண்டு வருட காலம் சமயக் கடமைகளைச் சரிவர அனுசரித்தா லன்றி பிக்ஷுணி யென்ற தீக்ஷை கொடுக்கப் பெற்று சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

7. பிக்ஷுணியானவள் எந்த பிக்ஷுவையாகிலும் எப்பொழுதும் நிந்திப்பதும், அவமானப் படுத்துவதும் கூடாது.

8. பிக்ஷுக்களாகிய பௌத்த சங்கமானது பிக்ஷுணிகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த நிபந்தனைகளின்படியே ஸ்திரீகளை பௌத்த சங்கத்தில் சேர்த்து வந்தனர்.

இராஜ கிருகம் என்ற நகரத்தை முக்கிய ராஜதானியாகக் கொண்டு பிந்து சாரன் அரசாக்ஷி செய்து வந்தான். புத்தர் மத போதனை செய்ய வேண்டி அந் நகரை யடைந்தார். பௌத்த மத உண்மைகளைக் கேட்டு மகிழ்ந்து அவ் வரசன் புத்தருடைய சீடரானார். அவ் வரசன் தன் பட்டத்து மனைவியாகிய கேமா தேவியை புத்தரைக் கண்டு தரிசிக்கச் செல்லுமாறு கூறினார். ஆயினும் அவ் வம்மை அதைப் பொருட்படுத்தினாரல்லர். பிந்து சாரன் "என் மனைவி தன்னுடைய வடிவழகுக்கும், செல்வச் சிறப்புக்கும் கர்வ முற்றுத் தங்கள் தரிசனத்திற்கு வர மறுக்கிறாள்" ளென்று புத்தருக் கறிவித்தார். புத்தரானவர் அப் பெண்மணியின் கர்வத்தைப் போக்குவதற் கோர் உபாயஞ் செய்தார். ஒரு சித்திரப் படத்தில் ஒரு பெண்ணின் யௌவனம், வியாதி நிலை, விருத்தாப்பியம் ஆகிய மூன்று நிலைகளைக் காட்டுமாறு சித்திரம் வரையச் செய்து, அதை யவ் வரசன் மனைவிக்குக் காட்டச் செய்தார். அம் மூன்று நிலைகளையுங் கண்ணுற்ற கேமா தேவியானவர் வைராக்கிய மடைந்து பௌத்த பிக்ஷுணியாய் விட்டார். கேமா தேவியானவர் நல்ல பாண்டித்ய முடையவர். எனவே அவர் இராஜப் பிரசேனர் முதலிய பண்டிதர்களோடு ஜன்மாந்தர நிலையைப் பற்றிச் சாஸ்திர வாதஞ் செய்துள்ளார். அந்த சாஸ்திர விசாரணைகள் அனைத்தும் "சம்புக்த நிகாய" என்ற பௌத்த நூலில் காணப்படுகிறது.

புத்தரிடத்தில் தாங்கள் கொண்ட விரோதத்தினால் அக் காலத்திலிருந்த பிராமணர்கள் "சிஞ்சா" என்ற பெயரை யுடைய கர்ப்பிணியாகிய விபசார ஸ்திரீ யொருத்தியை புத்தரிடத்திற்கு அழைத்துச் சென்று, அவராலேயே கர்ப்பம் ஏற்பட்டதெனச் சொல்லச் செய்தனர். அவதார புருஷராகிய புத்த தேவர் அச் சமயத்தில்,

"ஏகம் தம்மம் பிரதீதஸ்ஸ முஸா வாதிஸ்ஸ ஜந்துனோ
விதண்ட பர லோகஸ்ஸ நத்தி பாபம் அகாரியம்"

"எந்த மனிதன் சத்தியத்தைத் தவறி நடப்பானோ, பரலோகத்தைப் பாராட்ட மாட்டானோ அவன் பாவி யாவான். அத்தகைய மனிதன் பாவமான காரியங்கள் அனைத்தையும் செய்யத் துணிவான்" என்ற சுலோக மொன்றைக் கூறினார். புத்த பகவானுடைய இந்த அரிய போதனையானது துஷ்ட ஸ்திரீயாகிய சிம்சா என்பவளுக்குச் சிறிதும் பயன்பட வில்லை.



புத்தருக்கு கௌதமி யென்ற ஸ்திரீ யொருத்தி சீடரா யிருந்தார். அவளுடைய தேகம் மிகவும் மெலிந் திருந்தது. அவள் சிராவஸ்தி யென்ற நகரத்தைச் சேர்ந்த ஓர் ஏழை வீட்டுப் பெண்மணி யாவள். ஆயினும் அதிர்ஷ்ட வசத்தால் பணக்காரனும், வாலிபனும், சுந்தரனுமாகிய ஒரு கணவனை மணந்து கொண்டாள். அவ் விருவரும் மனமொத்து இல்லறம் நடத்தி வருகையில் அவர்களுக்குப் பாலச் சந்திரனைப் பழித்த வடிவழகை யுடைய புத்திரன் ஒருவன் பிறந்தான். அக் குழந்தையை மிக்க ஆர்வத்தோடு வளர்த்து வருகையில், ஒரு நாள் விஷ சர்ப்பத்தால் கடி யுண்டு அக் குழந்தை இறந்துபட லாயிற்று. அதைக் கண்ட அன்னை மனம் பொறாளாய், இறந்து போன குழந்தையை எடுத்துக் கொண்டு, மருத்துவ சிகிச்சைகளை விரும்பி வீடுகள் தோறும் அலைந்து பார்த்தும் பயன் பெறாமல், அழுதுகொண் டிருக்கையில், சிலர் புத்தபிரா னிடத்திற் சென்றால் ஏதாவது பயனுண்டாகலா மென்று கூறினர். அதைச் செவியுற்ற கௌதமியானவள் புத்தரிடத்திற் சென்று "என்னருங் குழவியைப் பிழைப்பித் தருளவேண்டு மென்று" வேண்டிக் கொண்டாள். அதைக் கண்ட புத்தரானவர் அவளை நோக்கி "நீ எப்பொழுதும் யாரும் மரண மடையாத வீட்டுக்குச் சென்று ஒரு பிடி தானியத்தைப் பெற்று வந்தால் உன் குழந்தையைப் பிழைப்பிக்கின்றேன்" என்றருளினர். அதை நம்பிய அப் பெண்ணானவள் பல வீடுகளுக்குச் சென்று அலைந்து பார்த்தும் ஒருவரும் இறக்காத இல்லம் ஒன்றுகூடக் காணாது புலம்புகையில், ஆங்காங்கே கண்டோர் பலரும் "இவ் வுலகமே துன்பக் கடலாகும், இதில் இறவாதவரும் உண்டோ, அவரவர் செய்த நல்வினைப் பயனுக்கேற்ற அளவுக்கே உயிர் வாழ்வார்கள், இதை யறியாமல் வீணில் அழுவது அறியாமை யல்லவா?" யென்று பலவாறு கூறினார்கள். அவற்றைச் செவி மடுத்த அப் பெண்ணானவள் மீண்டும் புத்தரை யடைந்து, நடந்தன யாவையும் நவின்றாள். அப்பொழுது புத்தர் வாழ்க்கை நிலையாமையின் உண்மைகளை யெடுத்துக் கூறி, பல தருமங்களை யுபதேசித்தார். அவற்றைச் செவியுற்ற கௌதமியானவள் வைராக்கியத்தை யடைந்து உடனே பௌத்த சங்கத்தில் சேர்ந்து புத்தரின் சீடரானார். அவரே பிற் காலத்தில் பிரசித்தி யடைந்த பௌத்த பிக்ஷுணியானார். பிக்ஷுணி விரதத்தைப் பத்து வருடங்கள்

கிரமமாக அனுசரித்து வந்து “தேரீ” யென்ற பதவியைப் பெற்றார். தேரீ என்ற பௌத்த காதையில் இவ் வம்மை யெழுதிய சுலோகங்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று வருமாறு;

“நகாம் தம்மோ நோ நிகமஸ்ஸ தம்மோ, நகாபியம் ஏக குலஸ்ஸ தம்மோ
ஸர்வ லோகஸ்ஸ ஸதேவ கஸ்ஸ, ஏஸேவ தம்மோ யதிதம் அநித்யதாதி”

இதன் பொருள் ஒரு கிராமத்திற்கோ, ஒரு நகரத்திற்கோ, ஒரு குலத்திற்கோ மாத்திரம் உரிமையான தர்மம் அநித்தியமானது. சகல லோகங்களுக்கும், தேவர்களுக்கும், யாவருக்கும் பொதுவான நித்தியமான தருமம் ஒன்றுண்டு. அந்தத் தருமத்தினின்றும் எவரும் தப்பித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதாம்.

புத்தரின் சீடராகிய ஸ்திரீகள் பல பேர் உண்டு. உத்பல வர்ணை யென்பவள் பிரசித்தமான சீடரில் ஒருவர். அவரும் சிராவஸ்தி நகரத்தைச் சார்ந்தவரே. தனவந்தரின் புதல்வி. அவளுடைய வடிவழகையும், நற் குணங்களையுங் கண்டு பலபேர் பிரபுக்களும், அரசிளங் குமாரர்களும் விவாகம் செய்துகொள்ள விரும்பினார்கள். ஆனால் அவளது தந்தை அவர்களில் யாருக்கேனும் மகளைக் கொடுத்து மண முடித்து வைத்தால், மற்றையோர்கள் ஒன்று சேர்ந்து கோபத்தால் தம்மை எதிர்ப்பார்களோ என்றஞ்சி, மண முடிக்காமல் காலந் தாழ்த்தி வந்தார். விவாகத்தைப் பல நாள் எதிர்பார்த்த அப் பெண்மணி ஏமாற்ற மடைந்து, வைராக்கியத்தைப் பெற்று பௌத்த சங்கத்தில் சேர்ந்தார். பிக்ஷுணி விரதத்தை வெகு நியமத்துடன் கைப்பற்றி யொழுகி “அர்ஹத” என்ற பதவியைப் பெற்று மத போதனைகளைச் செய்து வந்தார்.

பௌத்த மதப் பிரசாரத்திற்கு “விசாக” என்ற பெண்மணி இல்லறத்தினின்றே வெகு தூரம் துணை புரிந்து வந்தார். இப் பெண்மணி பத்திப நகரத்தில் தன் தாய் வீட்டில் சிறு வயதா யிருக்கையிலேயே, அந் நகரத்திற்கு வந்து தரும உபதேசங்களைப் புரிந்துகொண்டிருந்த புத்தரின் அரிய உரைகளைக் கேட்டு, பௌத்த மதத்தில் மாறாத அன்பு கொண்டார். பிறகு தனக்கு விவாகமாகி சிராவஸ்தி என்ற நகரத்தை யடைந்து கணவனுடன் கூடி இன்புற்று வாழ்ந்து வருங் காலத்தில் பௌத்த பிக்ஷுகளுக்கு உணவு, உடை, மருந்து முதலி



யவை வழங்கி வந்ததுடன், அந் நகரத்தில் தமக்குச் சொந்தமான உத்தியான வனத்தை பௌத்த சங்கத்திற்கு இலவசமாகக் கொடுத்தும் பௌத்த சமய வளர்ச்சிக்குத் தம்மாலான வழிகளி லெல்லாம் உழைத்து வந்தார்.

தேரீ காதை என்ற பௌத்த நூலினால் ஸ்திரீகள் பலர் பௌத்த சங்கத்தில் சேர்ந்து சமய வளர்ச்சிக்கு வேலை செய்துள்ளார்க ளெனத் தெரிய வருகிறது. அவர்களில் கீழ்க் குறித்தவர்கள் முக்கியமானவர்களாகும். 1. பூர்ண, 2. திஸ்ய, 3. தீர, 4. மித்ர, 5. பத்ர, 6. சீல, 8. சுமேத, 8. சுஜாத, 9. அபய, 10 சுமன, 11. சுமங்கல மாத, 12 நந்த, 13. மித்ர காளி, 14. சஞ்சா தேவி, 15. பால, 16. உபபால, 17. அம்பபாலி என்பவர்களாவர். அவர்களில் பலர் இல்லறத்தினின்றே பௌத்த மதத்தைத் தழுவி, அம் மத வளர்ச்சிக்கு வேலை செய்து வந்துள்ளார்கள். பலபேர் சந்நியாசினிகளாகி இந்தியாவிலும் இதர தேசங்களிலும் சென்று ஸ்திரீகளுக்கு பௌத்த தர்மங்களை உபதேசித்து வந்துள்ளார்கள். புத்தரின் மனைவியாராகிய யசோதரா தேவியும், அவரது அன்னையாராகிய கௌதமி தேவியாரும் சந்நியாசினிகளாகித் தீவிரமாக மதப் பிரசாரம் செய்து வந்தனர். யசோதரா தேவியார் புத்தருக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்னரே தேகவியோக மடைந்தார்.

அசோக சக்கிரவர்த்தி யானவர் சாருமதி, சஞ்சா மித்திரை என்ற தம் இரண்டு புதல்விகளுக்கும் பௌத்த பிக்ஷுணி தீக்ஷையைக் கொடுப்பித்து, அவர்களை சமய வளர்ச்சிக்கு உழைக்கச் செய்தார். சாருமதி யென்பவர் மதப் பிரசாரத்திற்காக நேபாளத்திற்குச் சென்றார். அங்கே விரிவாக மத போதனைகளைச் செய்து, அந் நாட்டில் அதிக செல்வாக்குப் பெற்று, அங்கே ஒரு பெரிய பௌத்த மடத்தை ஏற்படுத்தினார்.

பாரத கண்டத்தில் அசோக சக்கிரவர்த்தி அரசாக்ஷி செய்து வருகையில், இலங்கைத் தீவில் திஷ்ய ராஜன் என்பவர் அரசு புரிந்து வந்தார். ஒரு முறை திஷ்ய ராஜன், சிநேகத்தை முன்னிட்டு அசோகரிடத்திற்குத் தூதரை யனுப்பினா ரென்றும், அதற்குச் சந்தோஷித்த அசோகர் தமது புதல்வராகிய மகேந்திரனையே நேரில் இலங்கை நாட்டுக்கு அனுப்பித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தா ரென்றும், அம் மகேந்திரன் மூலமாகப் பௌத்த மத உண்மைகளை யறிந்த திஷ்ய ராஜன் பௌத்த மதத்தைத் தழுவினா ரென்றும் தெரிகிறது. அதன் பிறகு சின்னாளில் அசோகரின் புதல்வியாராகிய சஞ்சா மித்திரையும் மதப் பிரசாரம் செய்வதற்காக சந்நியாசினியாக அந் நாட்டுக்குச் சென்றார். அவ் வம்மை அங்கு செல்லுகையில் இந்தியாவினின்றும் போதி விருக்ஷத்தின் கிளை யொன்றைக் கொண்டு சென்று திஷ்ய ராஜனிடம் கொடுத்தார். அதை அவர் ஆவலோடு

வாங்கி * அநிருத்தபுரம் என்ற இடத்தில் நட்டுப் பயிர் செய்வித்தாராம். அஃது சின்னாளில் வளர்ந்து பெரிய விருக்ஷ மாகியதாம். அம் மரம் இப்பொழுதும் அங்கே இருந்து வருகிறதெனச் சொல்லப்படுகிறது.

புத்தர் பிக்ஷுணிகளுக்கு எவ்வாறு எட்டுவித கடின நிபந்தனைகளை ஏற்படுத்தி யிருந்தாரோ அவ்வாறே பௌத்த பிக்ஷுக்களுக்கும் சில நிபந்தனைகளை ஏற்படுத்தி யிருந்தார். அவற்றுள் "எந்த பிக்ஷுவாவது எந்த ஸ்திரீயோடும் ஓரிடத்தில் உட்கார்ந் திருந்தாலும், உறங்கினாலும், ஏகாந்தமாக ஓரறையில் வசித்தாலும், மற்றொரு ஞானியின் சாக்ஷியமின்றி ஐந்தாறு வார்த்தைகளுக்கு மேல் ஸ்திரீகளுக்கு தரும உபதேசங்களைச் செய்தாலும் சிக்ஷிக்கப்பட வேண்டியவ ராவர். மேலும் எந்த பிக்ஷுவாவது பௌத்த சங்கத்தின் அனுமதி பெறாமல் ஸ்திரீ பிக்ஷுணிகளுக்கு மத போதனைகளைச் செய்தாலும், சங்கத்தின் அனுமதியைப் பெற்றிருப்பினும் சூரியாஸ்த மானத்திற்குப் பிறகு மத போதனைகளைச் செய்தாலும், காரணமின்றி பிக்ஷுணிகளின் இருப்பிடத்திற்குச் சென்றாலும் தண்டிக்கப் படத்தக்கவ ராவர்" என்பது போன்றவை முக்கியமானவையாம்.

இதனால் புத்தர், மதப் பிரசார விஷயத்தில் பௌத்த சங்கத்தில் ஸ்திரீ புருஷர்களுக் கிடையில் எங்கே ஒழுக்கத்திற்கு ஊறு ஏற்படுமோ வென்றஞ்சி, இரு பாலாருக்கும் எத்துணைக் கடுமையான நிபந்தனைகளை ஏற்படுத்தியிருந்தா ரென்பது நன்கு விளங்கும். எனவே இக் காலத்தில் நாகரீகத்தில் மிகுந்தவர்க ளென்று சொல்லிக் கொள்ளும் எந்தச் சமயத்தார் தம்முள் ஸ்திரீ புருஷர்களின் ஒழுக்கங்களையும் பாதுகாக்கத் தனி முயற்சிகளை எடுத்துக் கொண்டுள்ளார்க ளென்பதைக் கூறுங்கள்? ஆகவே அக் காலத்தே யன்றி இக் காலத்திலும் வேறெந்தச் சமயத்தைக் காட்டிலும் பௌத்த சமயத்தாரே உலகில் அதிக தொகையின ரா யிருப்பதற்குக் காரணத்தை ஊகித்துப் பாருங்கள். ஆயினும் இக் காலத்தில் தக்க மேற்பார்வை யில்லாத காரணத்தாலும் அந்நிய சமயத்தாரின் தாக்குதலாலும் பௌத்த சமயத்திலும் அநேக மூட வழக்கங்களும், தீய பழக்கங்களும் புகுந்து அச் சமயத்திற்கு ஊறு உண்டாக்கி வருகின்றன வென்பதை இங்கே கூறி முடிக்கின்றோம்.

---

குறிப்பு:—

* இப்பொழுது அநுராதபுர மென்று வழங்கப்பட்டு வருகிறது.

இஃது ஆந்திர "பாரதி"யில் திரு. இராமஸ்வாமி சௌத்ரியாரால் எழுதப்பெற்ற கட்டுரையின் சுருங்கிய மொழிபெயர்ப்பாகும்.

ஆசிரியர்.

# ஆலனின் அமுத மொழிகள்.

திரு. A. சுருளியாண்டி அவர்கள்.

(63-ம் பக்கத் தொடர்பு.)

**81.** மனிதனது அகத்தின் நிலைமையினின்றும் அவனது புறத்தின் நிலைமைகள் தோன்றுகின்றன. அவனது நினைப்புக்கள் செயல்களாக மலர்ந்து ஒழுக்கம், புற நிலைமைகளாகிய கனிகளைத் தருகின்றன.

**82.** பூமியின் அகத்தினின்றும் மரம் வெளிப்பட்டுக் கொண்டிருத்தல் போன்றே, மனிதனது அகத்தினின்றும் வாழ்வு வெளிப்பட்டுக்கொண்டே யிருக்கிறது.

**83.** மறைபட்டுள்ள ஊற்று வாய்களினின்றும் ஊற்று நீர் வெளிப்படுதல் போன்றே, மனிதனது வாழ்வும் மறைபட்டுள்ள அவனது அக மூலங்களினின்றும் வெளிப்படுகின்றது.

**84.** மனிதன், தனது மனத்தை அதிகப் பிரயாசையோடு பாதுகாத்துச் சுத்தப்படுத்திக் கொள்ளக் கூடும்; நியாயமற்ற நினைப்புக்களை நினையாது தன்னைக் காத்துக்கொள்ளல் கூடும். இஃது அறிவு விளக்கத்திற்கும் இன்பப் பேற்றிற்கும் மார்க்கம். இதற்கு மாறாக, அவன் தனது ஒழுக்கத்தைத் திருத்துவதாகிய மேலான கடமையைச் செய்யாது எச்சரிக்கையும் திருத்தமுமின்றி வாழக் கூடும். இஃது அறிவு மயங்குதற்கும் துன்ப மடைவதற்கும் மார்க்கம்.

**85.** மனம் வாழ்வை விதிக்கும் நியந்தா; நிலைமைகளைச் சிருஷ்டித்துத் திருத்தும் கர்த்தா; தமது சொந்த பலன்களை அநுபவிக்கும் போக்தா. பொய்யைச் சிருஷ்டிக்குந் திறனும் மெய்யைக் காணும் திறனும் மனத்திற் குண்டு.

86. மனிதன் மனத்தை யுடைய உயிராகையால் மனத்தின் சகல சக்திகளையும் உடையவனா யிருக்கிறான். தான் விரும்புவனவற்றை யெல்லாம் அடைதற்குத் தக்க கருவிகளைக் கொண்டிருக்கிறான். அவன் தனது அனுபவத்தினால் கற்கிறான். அவன் தனது அனுபவத்தை மிகுக்கவும், குறைக்கவுங் கூடும்.

87. தனது சொந்த நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொள்வதற்கும், தன் வாழ்க்கைக்குத் தகுந்த நிலைகளைத் தெரிந்து கொள்வதற்கும் ஏற்ற சக்தி மனத்தி னிடத்தில் உண்டு.

88. மனம் பல நிலைமைகளை ஒன்றன் பின் ஒன்றாக அனுபவித்து அவற்றின் ஞானத்தை அடையுங் காலையில் தனது நிலைமைகளை ஒன்றன் பின் ஒன்றாக மாற்றிக் கொண்டும் கைவிட்டுக் கொண்டு மிருக்கிறது.

89. பழக்கமும் பலவீனமும் பாவமுமாகிய தளைகள் தன்னாலேயே உண்டு பண்ணப் படுபவை. அவை தன்னால் மாத்திரமே அழிக்கப்படக் கூடும். அவை ஒருவனது மனத்திலன்றி வேறெங்குமில்லை. அவை புறப் பொருள்களோடு சம்பந்தப்பட் டிருப்பினும், உண்மையில் அப் புறப் பொருள்களின்கண் இல்லை.

90. துன்பமும் கவலையும் புறப் பொருள்களிலும், வாழ்வின் சம்பவங்களிலும் ஒட்டிக்கொண் டிருக்கவில்லை. ஆனால், அப் பொருள்களையோ அல்லது சம்பவங்களையோ பற்றிய மனத்தின் ஓர் ஒழுங்கீன நிலைமையில் ஒட்டிக்கொண் டிருக்கின்றன.

91. புறம் அகத்தின் நிழல்; அகத்தின் காரியம். அகம் சுத்தமா யிருப்பின் புறத்திலுள்ள சகல காரியங்களும் சுத்தமா யிருக்கும்.

92. ஒரு சிற்பி அப்பியாசத்தினால் தன் தொழிலில் தேர்ச்சி யடைதல் போன்று, ஒரு மனிதன் அப்பியாசத்தினால் நல் வினையில் தேர்ச்சியடைதல் கூடும்

93. சரியான நினைப்புக்களை நினைத்தலும் சரியான செயல்களைச் செய்தலும் சுலபமாகவும், பிசகான நினைப்புக்களை நினைத்த



லும் பிசகான செயல்களைச் செய்தலும் பிரயாசையாகவும், எவனுக்குத் தோன்றுகிறதோ, அவன் எல்லாவற்றினும் உயர்ந்த ஒழுக்கத்தையும் ஒப்புயர்வற்ற தூய ஆத்ம ஞானத்தையும் அடைந்து விட்டான்.

94. திரும்பத் திரும்ப நினைத்துத் தீய பழக்கங்களை உண்டு பண்ணி யிருப்பதால், மனிதருக்குப் பாவங்களைச் செய்தல் சுலபமாகவும் இயற்கையாகவும் இருக்கிறது.

95. அமைதியும் பொறுமையு முள்ள ஒரு நினைப்பைப் பிரயாசைப்பட்டுக் கிரகித்து, ஆத்திரமும் வெகுளியும் வேரோடு நீங்கும் வரையில் அதனை யிடைவிடாது நினைத்துக் கொண்டு வருதலால், அமைதியும் பொறுமையும் சுபாவங்களாய் விடும். இங்ஙனமே, ஒவ்வொரு பிசகான நினைப்பையும் மனத்தை விட்டகற்றி விடலாம்; ஒவ்வொரு பொய்ச் செயலையும் ஒழித்து விடலாம்; ஒவ்வொரு மாவத்தையும் வென்று விடலாம்.

96. சரியான வாழ்க்கையை அடையக் கோருகிற மனிதன், கருங் கல்லில் வேலை செய்யும் பொறுமையுள்ள சிற்பியைப் போன்று, தனது மனமாகிய கருங் கல்லிலிருந்து தனது மிகவும் அருமையான கனவுகளின் இலட்சியத்தை அடையும்வரை ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக வேலை செய்து வரல் வேண்டும்.

97. மேலான காரிய சித்திக்கு வேலைசெய்யும் ஒரு மனிதன், மிகத் தாழ்ந்தனவும் மிகச் சுலபமாக ஏறக்கூடியவைகளுமான படிகளினின்றும் புறப்பட்டு, அவற்றினின்றும் சிறிது உயர்ந்தனவும் சிறிது பிரயாசையுடன் ஏறத்தக்கனவுமான படிகளின் மூலமாக மிக உயர்ந்ததும் மிக்க பிரயாசையுடன் ஏறத்தக்கவையுமான நிலைகளுக்குச் செல்லல் வேண்டும்.

98. ஒரு பெரிய காரியத்தை அறியுமுன்னர், அதற்குரிய சிறிய காரியத்தைப் பூரணமாகக் கிரஹித்தறிய வேண்டும். எப்பொழுதும் அப்பியாசம் உண்மை ஞானத்திற்கு முற்பட்டது.

99. ஒழுங்கற்ற நிலைமைகள், வாழ்க்கையின் மெய்யான நோக்கத்தையும் பிரயோஜனத்தையும் மனம் சிறிதும் அறியவில்லை

யென்பதைக் காட்டும் அறிகுறிகள். அவற்றின் நீக்கம், ஒழுக்கமும் உறுதியும் அறிவுமுள்ள ஒரு வாழ்க்கையின் தொடக்கத்தைக் காட்டும் அறிகுறி.

100. ஒவ்வொரு வேலையையும் கடமையையும், எவ்வளவு அற்பமானதா யிருப்பினும் உடனுக் குடனே ஊக்கத்தோடும் சுறுசுறுப்போடும் செய்து முடிப்பீர்களாக.

101. மனிதன், உறங்குவதற்காகப் படுக்கைக்குச் செல்ல வேண்டுமே யன்றி, யோசிப்பதற்காகப் படுக்கைக்குச் செல்லுதல் கூடாது.

102. சிந்திப்பதற்கும் வேலை செய்வதற்கும் படுக்கையை விட்டெழுந்திருக்க வேண்டுமே யன்றி, திரும்பவும் உறங்குவதற்காகப் படுக்கையை விட்டெழுந்திருத்தல் கூடாது.

103. ஓர் ஒழுங்கீன மனத்தினின்றே, பயனற்ற பேச்சு வெளிப்படுகின்றது.

104. பிறரை நிந்திக்கிற அல்லது பிறர் மேல் குற்றம் சாற்றுகிற மனிதன், சரியான மார்க்கத்தை விட்டுத் தவறி வெகு தூரம் போய் விட்டவனாவான்.

105. ஒழுக்கமுள்ள மனிதன், பிறரை நிந்தித்தலையும் பிறரோடு சச்சரவு செய்தலையும் நிறுத்தி விடுகிறான்; பயனும், அவசியமும், நன்மையும், உண்மையுமுள்ள உரைகளை மட்டுமே அவன் பேசுகிறான்.

106. அடக்கம், பெருந்தன்மை, மதிப்பு இவற்றைப் பேச்சை விட்டும் நடத்தையை விட்டும் பிரித்த பொழுது மெய்ப்பொருள் இழக்கப் பெற்றது.

107. பிறரை மடக்கும், அல்லது பிறர் பேச்சிற் குற்றங் காணும் நோக்கமாகப் பேசுதலை ஒழிப்பீர்களாக.

108. எவன், பிறரை மறுப்பதற்காகவும் எதிர்ப்பதற்காகவும் அவரது வார்த்தைகளில் நழுவுவனவற்றைக் கவனத்தோடு பார்த்துக்கொண் டிருக்கிறானோ, அவன் தூய்மையாகிய உயர்ந்த



மார்க்கத்தையும் அழுக்கற்றவாகிய மெய் வாழ்க்கையையும் காண மாட்டான்.

109. எவன், தனது சொற்களை இனிமையாக்கவும் சுத்தமாக்கவும் கருதி அவற்றை அடக்குதற்கு எப்பொழுதும் கவனமாயிருக்கிறானோ அவன் உயர்ந்த மார்க்கத்தையும் மெய் வாழ்க்கையையும் காண்பான்.

110. எவன், அற்பத் தன்மையையும் நாள்தோறும் செய்யக்கூடிய குற்றங்களையும் களைந்து விட்டானோ, எவன் தனது சரீரத்தையும் மனத்தையும் ஆள்வதற்குப் பலத்தையுடையவனாயிருக்கிறானோ, எவன் அசையாத நடுவு நிலைமையும் அருமையான ஒழுக்கமுமாகிய மார்க்கத்தில் மன வுறுதியோடு செல்கிறானோ, அவனே வெற்றி பெறுதற்கும் காரிய சித்தி அடைதற்கும் தகுதி யுள்ளவன்.

111. ஒவ்வொரு பாவமும் மடமையே; அது, இருண்டதும் முதிர்ச்சி யடையாததுமான ஒரு நிலைமை.

112. மனிதன், பாவங்களை வெல்லாத காலமெல்லாம் துக்கத்தினின்றும் தப்ப முடியாது.

113. வாழ்க்கையானது தொடர்ச்சியான பல பாடங்களைக் கொண் டிருக்கின்றது.

114. மன நேர்மையே சுகம்; மனக் கோணலே துக்கம்.

115. துன்பம், மடமையில் வேரூன்றியுள்ளது; இன்பம் அறிவில் ஒட்டிக்கொண் டிருப்பது.

116. தனது மடமையையும் குற்றத்தையும் மயக்கத்தையும் ஒழிப்பதனாலேயே, மனிதன் வீட்டை அடைவான்.

117. எவ் விடத்தில் பிசகான மனோ நிலைமைகளுளவோ, அவ் விடத்தில் பந்தமும் அமைதி யின்மையும் இருக்கின்றன. எவ் விடத்தில் சரியான மனோ நிலைமைகள் இருக்கின்றனவோ, அவ் விடத்தில் மோக்ஷமும் அமைதியு மிருக்கின்றன.

118. தீமை ஒரு சக்தி யன்று; அது, நன்மையை அறியாதிருத்தலும் பிசகாக உபயோகித்தலுமேயாம்.

# ஐரோப்பாவின் ஐக்கிய நாடுகள்.

திரு. ஸி. எ. பெருமாள் அவர்கள்.

உலக மகா யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்களுக்கு மேலாகியும் ஐரோப்பிய நாடுகளின் அந்நிய நாட்டு வியாபாரங்கள் யாவும் விசேஷ அபிவிருத்தி யடையவே யில்லை. ஆனால் அமெரிக்க தேசம் இன்று வியாபார உலகிற்குத் தனி நாயகம் வகித்துத் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லை யென்னும்படி உலக நாடுகளின் வியாபாரங்களை யெல்லாம் தமது செல்வாக்கின் கீழ் அடக்கி வருகிறது. ஆகவே வியாபாரத்தையே பிழைப்பாகக் கொண்ட ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவின் போட்டியில் எதிர் நிற்க முடியாது திண்டாடும் நிலைமைக்கு உள்ளாகி வருகின்றன. பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற தேசங்களின் பொறுப்புடைய அரசியல் தலைவர்கள் இந் நிலைமையை நாளா விருத்தியில் நன்கு கவனித்து இன்னது செய்வதெனத் தெரியாது திகைக்கின்

---

**119.** உயர்தர வாழ்வை அடையக் கோரும் மனிதன்—காரியங்களின் உண்மையான ஒழுங்கையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் தெளிவாகக் காண்பதற்கு விரும்பும் மனிதன், சகல பிசகான அக நிலைமைகளையும் விட்டு நன்மையைச் செய்வதில் இடைவிடாது முயல்க.

**120.** மெய்ப் பொருளின் மாணவர்களே! ஒழுக்கத்தை நேசிக்கிறவர்களே! ஞானத்தை நாடுகிறவர்களே! சுய நல வாழ்வின் வெறுமையை அறிந்து துக்கமுறுகின்றவர்களே! பேரழகும் பேரின்பமும் பொருந்திய வாழ்வைக் கோருகின்றவர்களே! நீங்கள் இப்பொழுதே ஆயத்தமாகி ஒழுக்க வழியில் நடந்து நல்ல வாழ்வை அடையுங்கள்.



றனர். இதனிடையில் அமெரிக்காவின் புதிய சுங்க வரித் திட்டங்கள் "வாஷிங்டன்" நகரில் முடிவு செய்யப்படவே ஐரோப்பிய அரசியல் ஞானிகள், ஐரோப்பாவின் வியாபாரம் அழிந்துவிட்டதென்றும் இனி ஒரு காலத்திலேனும் ஈடேறுவதற்கு வழியே யில்லை யென்றும் கூக்குரலிட்டுப் பலவித ஆலோசனைகள் செய்து வருகின்றனர். அமெரிக்காவோடு ஐரோப்பிய நாடுகள் சென்ற இருபது வருடங்களாகப் போட்டி யிட்டுப் பார்த்தும் ஒரு பலனும் ஏற்படவில்லை. எவ்வளவோ தந்திரங்களும் முயற்சிகளும் செய்தும் நாளுக்கு நாள் பிற்போக்கு அடைந்திருப்பதே யன்றி வேறொரு பலனும் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. இத்துடன் அமெரிக்கா தனக்குச் சேர வேண்டும் யுத்தக் கடன்களை வசூல் செய்வதற்கு அந் நாடுகளைப் பெரிதும் நெருக்கி வருகின்றது. எனவே ஐரோப்பிய நாடுகளின் வியாபாரச் சீர் குலைவும் பணக் கஷ்டமும் அந் நாடுகளைப் பல விதத்தில் பாதித்து வருவதால் அங்குள்ள அரசியல் ஞானிகளிற் பெரும் பாலோர் அமெரிக்க நாடுகளைப் போன்று அவைகளையும் ஒன்று படுத்தி ஐரோப்பாவை ஐக்கிய நாடுகளாக இலங்கச் செய்வதற்குப் பெரு முயற்சி யெடுத்து வருகின்றனர்.

### புதிய கருத்தன்று

ஐரோப்பிய நாடுகளை ஒன்று சேர்க்க வேண்டு மென்ற இக் கருத்து அங்குள்ள தற்காலத் தலைவர்களிடம் புதிதாகப் பிறந்ததன்று. நூறு வருடங்களுக்கு முன்னிருந்த அரசியல் ஞானிகள் தத்துவ ஞானிகள் கவிஞர்கள் கலை வல்லார்கள் ஆகியவர்களின் உள்ளத்திலேயே இஃது குடிகொண் டிருந்தது. ஜெர்மனியின் கவி யரசாகிய "காத்தே" (Goethe) என்பாரின் பெரிய தகப்பனாரான "மிச்சல் வான் லோயன்ஸ்" (Michael von Loens) என்பார் 1760-ம் வருஷ இக் கருத்தை வெளி யிட்டார். அவர் கூறியதாவது:— "ஐரோப்பாவிலுள்ள வலிமை சிறந்த நாடுகளின் ஓர் ஒற்றுமை யமைப்பு, சில அரிய காரியங்களைச் செய்து முடிக்கக் கூடும். அப்பொழுது நாடு பிடிக்க வேண்டு மென்ற ஆசை, இராணுவத் திமிர், பொறுப்பற்ற இராஜரீக முறை யாவும் வீணாகிவிடும். ஏனென்றால் அந்நிய நாடுகளை மனம் போல் கைப்பற்ற இராணுவ வீரர்களை உபயோகிக்க முடியாது.

ஐரோப்பிய நாடுகளின் தலைச் சங்கத்தில் ஒருநாட்டரசரது மரணத்துக்குப் பின், பட்டவுரிமை நியாயமாக யாருக்குச் செல்ல வேண்டுமென்பதை முன்னதாகவே எல்லா அரசர்களின் முன்னிலையில் தீர்மானித்துக் கொள்ளலாம்.'' இத்துடன் அவர் இவ்விதக் கூட்டுறவினால் ஏற்படக் கூடும் கஷ்டங்களையும் எடுத்துக் கூறியதோடு சர்வதேச சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு ஐம்பது நீதிபதிகளடங்கிய ஓர் ஐரோப்பிய நாட்டு அரசியல் மன்றம் "ஹாலண்டு," தேசத்தில் அமைக்கப்பட வேண்டுமென்றும் சட்ட திட்டங்களை மீறி நடக்கும் ஒவ்வோர் நாட்டின் குற்றங் குறைகளை விவாதித்து முடிவு செய்ய ஓர் தனி ஐரோப்பிய நாடுகளின் நீதிமன்றம் நிறுவப்படல் வேண்டுமென்றும் மொழிந்தார். தற்காலச் சரித்திரப் பேரறிஞர்களிற் சிலரும் ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இக் கிளர்ச்சிக்குச் சாதகமாக, ஐரோப்பிய சரித்திரத்தின் மத்திய காலத்தில் ரோம ராஜ்யத்தின் கீழ் ஐரோப்பிய நாடுகள் யாவும் இணைக்கப்பட்டு ஒற்றுமையாகவே இருந்தனவென்றும் கூறி வருகிறார்கள். ஆனால் தற்போது அந் நாடுகளை ஒன்றுபடுத்த வேண்டுமென்ற கருத்து கலாபிவிருத்தியையோ அல்லது அரசியல் முன்னேற்றத்தையோ குறிக்கோளாகக் கொள்ளாது வெறும் பொருளாதார நிலையைச் சீர்படுத்துவதற்கென்றே அதன் தலைவர்கள் கூறிவருவது காண்கிறோம்.

### தலைவர்களின் ஊக்கம்

இவர்களில் பிரான்ஸ் தேசத்து அந்நிய நாட்டு மந்திரியாகிய மிர். "பிறயாண்ட்" என்பவரே இவ் விஷயத்தில் பூரண கருத்துச் செலுத்தி சென்ற வருடம் ஐரோப்பாவிலுள்ள 27 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பி ஜினீவாவில் பல தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து வந்தார். அப்பொழுது இவரது வார்த்தைகளுக்குச் செவி சாய்த்த பல நாடுகளின் பிரதிநிதிகள் இக் கருத்துப் போற்றத்தக்கதென்றும் ஆனால் அதனை நிறைவேற்றுவதற்கு முதன் முதலில் ஓர் திட்டம் தயாரிக்க வேண்டுவது அவசியமென்றும், அப்பால்த் தான் அதனைப் பற்றி விவாதித்து ஓர் முடிவுக்கு வரக்கூடுமென்றும் அபிப்பிராயப்பட்டனர். அத்துடன் அக் கூட்டம் கலையலாயிற்று. பத்திரிகாசிரியர்களும் அதனைப் பற்றி பலவாறாக எழுதி வந்தனர். இப்பொழுதோ



அத் தலைவர்களிடம் புதிய ஊக்கம் பிறந்திருப்பதாகத் தெரிகிறது. பல தலைவர்கள் மிர். பிரயாண்ட் அவர்களின் கருத்தை ஆதரித்து வருகின்றார்கள். அமெரிக்காவின் வியாபாரம் நாளொரு வண்ணமாக வளர்ந்தோங்கி வருவதைக் கண்டு ஆச்சரியம் ஒரு புறமும் திகில் இன்னொரு புறமுமாக மலைத்து விட்டதுமன்றி, ஐரோப்பாவிற்குப் பொருளாதார ஆபத்து ஏற்படுவதற்கு அதிக நாள் ஆகிவிடாதென்றும் உணர்ந்து வருகின்றனர். அக் காலத்தில் ஐரோப்பிய நாடுகள், ஆபத்துக்கிடமாகக் கிடப்பதை அனுசரித்தும், எதிரிகள் இலகுவில் உள் நுழையத் தகும் எல்லைப் புறங்களைப் பற்றியுமே பெரும் பீதி யடைந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பலவித உபாயங்களைத் தேடி வந்தன. இப்பொழுதோ சூதும் தந்திரமும் நிறைந்த ஒவ்வொரு நாடுகளின் வியாபாரப் போட்டியில் எதிர் நிற்க முடியாது நாட்டின் பொருளாதாரத்திற்கே பெரும் ஆபத்து ஏற்பட்டு வருகிறது. பிழைப்புக்கே மோசம் வந்துவிட்டதென அந் நாட்டுத் தலைவர்களெல்லாம் உணர்ந்து வருகின்றனர். மிர். பிரயாண்ட் எவ்விதமும் ஐரோப்பிய நாடுகளை இச் சந்தர்ப்பத்தில் ஒன்றுபடுத்திவிட வேண்டுமெனப் பெருங் கிளர்ச்சி செய்து வருகிறார். பல தலைவர்களும் இவர்களுக்கு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். இவர்களிடையும் ஒரு கூட்டத்தார்கள் முன்னணியில் நின்று விசேஷ முயற்சியெடுக்கப் பெரும் வேலை செய்து வருவதாய் அறிகிறோம். இக் கூட்டத்தாருக்குத் தலைமை வகித்து ஊக்கமளித்து வருகிறவர் ஆஸ்த்ரியா (Austria) தேசத்தைச் சேர்ந்த "கௌண்ட் றிச்சர்ட் கௌடன் ஹோவ் கெலார்க்கி" (Count Richard Cowden hove Kalargie) என்பவராவர். இவரே தற்காலவுலகில் இதன் அவசியத்தைப் பற்றி நன்குணர்ந்து முதன் முதலில் "ஒன்றுபட்ட ஐரோப்பா" என்ற ஓர் நூலையும் இயற்றி 1926-ம் வருஷம் வியன்னா (Vienna) நகரத்தில் இது சம்பந்தமாக ஓர் காங்கிரசும் கூட்டி வைத்தார்.

### 'ஒன்றுபட்டா லுண்டு'

1925-ம் வருடத்தின் பிறகு 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற ஒரே தத்துவமே ஐரோப்பிய நாடுகளுக்குக் கதி மோட்சம்

அளிக்கவல்லது என்ற எண்ணத்திற்கு அத் தலைவர்களெல்லாம் வந்துவிட்டார்கள். ஆனால் இக் கருத்தை எவ்விதம் நிறைவேற்றுவதென்பதே அவர்களின் நோக்கமாக இருந்து வருகிறது. இதனை நன்கறிந்து வரும் அமெரிக்கப் பத்திரிகைகள், அமெரிக்காவின் செல்வப் பெருக்கையும் படைப் பலத்தையுமே கண்டு இந் நாடுகள் ஒன்றுசேர ஆரம்பிக்கிறதெனக் கூறி வருகின்றன. ஐரோப்பாவிலும் இந் நோக்கம் அமெரிக்காவுக்கு முற்றிலும் எதிரான ஓர் அரசியல் தந்திரம் எனப் பலர் அபிப்பிராயப்பட்டிருப்பினும் சென்ற 20 வருடங்களாக அமெரிக்காவால் விளைந்து வரும் திகிலே இதற்கு மூல காரணமென்றும் ஆனால் இந் நோக்கம் ஈடேறினாலன்றி ஐரோப்பா சிறிது காலத்திற்குள் அழிந்துபோகுமென்றும் பொறுப்பு மிக்க அருந்தலைவர்கள் உணர்ந்து இதற்கு ஆதரவு நல்க எப்பொழுதும் தயாராயிருப்பதாக அறிகிறோம். இவர்களில் மிகவும் முக்கியமானவர்கள், பெல்ஜியம் தேசத்துப் பிரதம மந்திரியாகிய மிர். "ஜாஸ்ப்பர்," சிஸோ சிலோக்கியா தேசத்து அரசியல் தலைவராய் விளங்கும் மிர். "மாசிறிக்," பிரான்ஸ் தேசத்திலுள்ள மிர். "பிறயாண்ட்" ஆகியவர்களாவர். ஆனால் இங்கிலாந்திலுள்ள பிரபல அரசியல் ஞானிகள் இதில் கலந்திருப்பதாகத் தெரியவில்லை. இந் நாடுகளும் இங்கிலாந்தைத் தன்னோடு சேர்த்துக் கொள்ளுவதற்கும் விரும்பவில்லை யென்று தெரிய வருகிறது.

## அமெரிக்காவின் திகில்

மிர். பிறயாண்ட் அவர்களின் கிளர்ச்சி இப்பொழுது அமெரிக்கப் பத்திரிகை யுலகைப் பெரிதும் கவர்ந்து வருகின்றது. பொருளாதாரத்தை மட்டும் உத்தேசித்து ஆரம்பிக்கப்படும் இவ் வைக்கிய உறவு அரசியலைப் பாதிக்காமலிருக்க முடியாதென்றும், அமெரிக்காவுக்குப் பெரும் ஆபத்து விளைவிப்பதற்கே நோக்கமாகக் கொண்டதென்றும் அந் நாட்டுப் பத்திரிகைகள் முரசொலிக்கின்றன. ஜெர்மனியின் அந்நிய நாட்டு மந்திரியாகி யிருந்த மிர். "ஸ்டெறெஸ்மான்" அவர்கள் அமெரிக்காவுக்கு விரோதமாக ஆரம்பிக்கப்படும் எந்த விதமான ஐரோப்பிய நாடுகளின் கூட்டுறவிலும் ஜெர்மனி கலந்து கொள்ளாது என்று கூறியதை இப்பொழுது வலுப்படுத்திக் கூறி வருகின்றன. மிர். ஸ்டெறெஸ்மான் அவர்கள், இறக்கும் தருவாயில் 'பொருளாதாரக் கூட்டுறவு என்பது ஒரு நாட்டுக்கு விரோதமானதன்று, ஆனால் உலக தேசங்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்பதே அவர் விடுத்துப் போன அபிப்பிராய மாகும். இதனையே அப் பத்திரிகைகள் எதிரொலி செய்து ஆரவாரித்து வருகின்றன. ஐரோப்பிய ஐக்கிய நாடுகளென்பது உலக சமாதானத்திற் கேற்றதோர் நேரிய முறை யல்லவென்றும், அமெரிக்காவை எதிர்ப்பதற்கு இது ஓர் உபாயமாகுமென்றும், அரசியல் முறிவுக்கு இது ஆதாரமாகுமென்றும், பொருளாதாரத்திற்கும் அரசியல் முறைக்கும் பல வழிகளிலும் பெருங் கேடு விளைவிக்குமென்றும், இது ஒரு காலத்திலும் சாத்தியப்படாதென்றும், கூறி வருகின்றன. இதனைப் பார்த்து மிர். பிறயாண்ட் அவர்கள் மொழிவதாவது:— "இத் திட்டம் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு விரோதமான கருத்துக் கொண்டதாகாது. இக் கூட்டுறவு பெரும்பாலும் பொருளாதாரத்தை மட்டுமே பொறுத்து நிற்கும். இதனால் ஒருவரோடொருவர் ஏற்றதோர் சமரச முடிவுக்கு இலகுவில் வரக்கூடும். சமூக விஷயமாகவோ அல்லது அரசியல் விஷயமாகவோ இது ஒருபோதும் பாதிக்கவே மாட்டாது" என்பதாகும். எவ்விதமாயினும் இக் கருத்து அமெரிக்க வியாபாரத்தைக் கவிழ்ப்பதற்கு ஏற்றதோர் நோக்கமென நாம் சந்தேகமற நினைக்கலாம்.



## வியாபாரத் தடைகள்.

தற்போதுள்ள முறையில் ஐரோப்பாவின் ஒவ்வொரு நாட்டு வியாபாரங்களுக்கும் பலவிதத் தடைகள் ஏற்பட்டிருப்பது உண்மையே. வியாபாரக் கப்பல்களும் ரெயில் தொடர்களும் பல நாடுகளின் சுங்க வரியையிட்டுப் பல விடங்களில் நிறுத்தப்படுகின்றன. கப்பல்கள் உள் நாடுகளில் இலகுவில் நுழைவதற்கேற்ற பெரும் நதிகள் ஒரு தேசத்திற்கு அனுகூலமாக இயற்கையாகவே அமைந்திருந்தாலும் அவ் வழியாக இதர நாட்டுக் கப்பல்களைச் செலுத்துவதற்கு அந் நாடு அனுமதிப்பதில்லை. இத் தடையால் அந்நிய நாட்டுப் பொருள்கள் ரெயில் மார்க்கமாய் மிகவும் சுற்றுப் பிரயாணம் செய்து பல சுங்க வரிகளையும் கொடுத்துப் பெருத்த பணச் செலவில் வேறு நாடுகளுக்கு இறக்குமதி செய்ய வேண்டி யிருக்கிறது. உதாரணமாகத் தற்போதுள்ள நிலைமையில் பாரிஸ் நகரத்திலிருந்து சுவீடன் தேசத்தைச் சேர்ந்த ஸ்டாச்

கோம் (Stockholm) பட்டணத்திற்கு இறக்குமதி செய்ய வேண்டுமாயின் அப் பொருளை எடுத்துச் செல்வோர் பெல்ஜியம், ஹாலண்டு, ஜெர்மனி, டென்மார்க் ஆகிய தேசங்களைக் கடந்து, ஆறு வித நாணய மாற்று விகிதங்களுக்கும் உட்பட்டு, ஐந்து வித பாஷைகளையும் கற்றுத் தேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். அத்துடன் இந் நாடுகள் யாவும் அந்நிய நாட்டுப் பொருள்களுக்கு வரைகடந்த சுங்க வரித் திட்டங்களும் இட்டிருக்கின்றன. இதனால் வியாபாரம் முன்னேறுவதற்குப் பெருந் தடை ஏற்பட்டிருக்கிறது. சில நாடுகளுக்கு இலகுவாய்ப் போகத்தகும் கப்பற் றுறை முகங்கள் ஏற்பட்டிருப்பினும் யுத்தத்தில் தோல்வியுற்ற ஒரே குறையால் அந் நாடுகள் அத் துறை முகங்களை உபயோகப் படுத்துவதற்கு விதியில்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவைகளுக்கும் பெருத்த பணச் செலவும் நெடுந் தூரப் பிரயாணமும் அவசியமாய் இருந்து வருகிறது. தவிர ஒவ்வோர் நாட்டு நாணய மாற்று விகிதங்களும் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு நிலைமைக்கு வந்து விடுவதால் வியாபாரம் ஒரு சூதாட்டமாகவே முடிகிறது. எனவே ஐரோப்பாவிலுள்ள 26 நாடுகளையும் ஒன்று சேர்த்து ஒரேவித நாணயப் பழக்கத்திற்கும் தபால் விகிதங்களுக்கும் கட்டுப்பாடு அமைக்க வேண்டுமென இத் தலைவர்கள் கூறி வருகின்றனர். ஆனால் இக் கூட்டுறவோடு இங்கிலாந்தையும் ரஷ்யாவையும் சேர்த்துக் கொள்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. இங்கிலாந்து தனது எண்ணிறந்த குடியேற்ற நாடுகளில் பூரண கருத்து வைத்திருப்பதாலும், ரஷ்யா பெரும்பாலும் ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்திருப்பதாலும், ரஷ்யாவின் அரசியல் மாற்றம் ஐரோப்பிய நாடுகளின் நிலைமைக்கு முற்றிலும் மாறாக விளங்குவதாலும் அவைகளைத் தனியே விட்டுவிட வேண்டுமென இவர்கள் கூறுகின்றனர். இவ்விதம் இவ் விரண்டு நாடுகளையும் புறக்கணித்து இதர நாடுகளை ஒன்றுசேர்ப்பதானால் ஐரோப்பா தேசம், அமெரிக்க ஐக்கிய நாடுகளைவிட மகா பெரிய தேசமாக விளங்குவதோடு 32 கோடியே 20 லட்சம் மக்களையும் தன்னகத்தே கொண்டு இலங்குமாம். ஜனத் தொகையிலும் விஸ்தீரணத்திலும் பிரிட்டிஷ் ராஜ்யங்களுக்கு மேலாகி விடுவதோடு இங்கிலாந்தைவிட அதிகமான நிலக்கரியையும், அமெரிக்காவைவிட அதிகப் படியான கோதுமையையும் கம்பளியையும், அமெரிக்காவின் உற்பத்தியில் ஐந்தில் நான்கு பங்கு எஃகை



யும், மூன்றில் ஒரு பங்கிற்கு மேலான இரும்பையும், மிகவும் சிலாகிக்கத்தக்கதான பெட்ரோல் எண்ணெயையும், அமெரிக்காவைப் போன்ற மாமிஸ உணவையும், உலக உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு ரப்பரையும் உற்பத்தி செய்யக்கூடுமாம். தவிர வியாபாரக் கப்பல்களில் பிரிட்டிஷ் கப்பற் கூட்டங்களையும் எஞ்சி நிற்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஐரோப்பிய ஐக்கிய நாட்டமைப்பு இந் நிலை காணுமாயின் இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் எளிதில் வென்றுவிடுமென்பதில் சந்தேகமில்லை.

## ஒற்றுமை சாத்தியமா?

இத் தலைவர்களின் கருத்துப்படி ஐரோப்பிய நாடுகள் இச் சந்தர்ப்பத்தில் தகுந்த பரிகாரம் தேடாவிடின் ஐரோப்பாவின் பொருளாதாரத்திற்கும் அரசியல் திட்டத்திற்கும் பெருங் கேடு விளையுமென்பது நிச்சயமே. அந் நாடுகள் ஏற்கனவே யுத்தக் கடன்களால் பெருந் துன்பம் அனுபவித்து வருகின்றன. அந் நாடுகளின் பொருளுற்பத்திகளில் பெரும்பான்மை அந்நிய நாடுகளுக்கு வெகு காலம்வரை ஈடாகவே வைக்கப்பட்டிருக்கிறது. உலக சம்பந்தமாகவும் உள் நாட்டு விஷயமாகவும் மகா யுத்தத்தின் பிறகு உடன்படிக்கைகளின்படி அரசாங்க முறைகளில் அவைகள் மிகுந்த கட்டுப்பாடுகளுக் குள்ளாக்கப்பட்டிருக்கின்றன. நெடுங்கால யுத்தத்தினால் அவைகள் சீரழிந்து கிடக்கும் தங்கள் தொழிற் சாலைகளையும் ஆராய்ச்சிக் கழகங்களையும் இப்பொழுதுதான் ஒருவாறு பலப்படுத்தி வருகின்றன. இவைகளை நன்கு கவனித்தே மிர். கெலார்கி என்பார் அமெரிக்க நாடுகளின் கூட்டுறவே அவைகளின் செல்வ அபிவிருத்திக்கு மூல காரணமென்றும், ஐரோப்பிய நாடுகளின் பிரிவினையே தமது வியாபாரப் பிற்போக்கிற்கு ஆதி காரணமென்றும் வற்புறுத்தி வருகிறார். பொதுவாக நோக்குமிடத்து அமெரிக்காவை ஐரோப்பிய நாடுகள் பின்பற்றுமாகில் அவைகளின் கருத்து உரம் பெறுமென்பதில் சந்தேகமில்லை. ஐரோப்பிய நாடுகளும் உண்மையில் அமெரிக்காவைப் போன்று ஒரேவித சீதோஷ்ணத்தையுடையதாகி, ஒரே ஜாதி மக்களும் ஒரே வாழ்வு நடத்துவோரும் ஒரே அறிவு படைத்தோருமே நிறைந்து விளங்குகின்றன. யுத்தத்தால் முறிவுண்டு சிதறிக் கிடக்கும் ஒரு குறையேயன்றி இயற்கை

கலன்கள் யாவும் ஐரோப்பிய நாடுகளில் ஏகதேசம் அமெரிக்காவுக்குச் சமமாகவே காணப்படுகின்றன. ஆனால் அமெரிக்காவின் நிலவளம் போன்று ஐரோப்பிய நாடுகள் அவ்வளவு வளஞ் சிறந்து விளங்குவதில்லை. இதற்கு மாறாக அமெரிக்காவைவிட ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர்கள் எங்கணும் மலிந்து கிடக்கின்றனர். எனவே கெலார்கி என்பார் இக் கூட்டுறவு இரண்டு விதத்தில் சாத்தியப்படுமெனக் கூறுகிறார். பொருளாதாரக் கூட்டுறவாலும் படைப் பலத்தை உண்மையாகவே குறைப்பதற்கு இணங்குவதாலும் இது எளிதில் கைகூடுமென்பது அவர் கருத்து. ஐரோப்பாவில் தற்போது புதிய இயந்திர முறைகளை வைத்து நடாத்தப் போதிய பணமில்லை. ஆதலால் அழிந்துபோன தொழிற் சாலைகளைப் புதுப்பிக்கவும் முடியவில்லை. எனவே உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு அதிக விலையாகி வருகின்றன. தவிர, தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகின்றன. அந்நிய நாடுகளுக்குப் பொருள்களை இலகுவிற் கொண்டு போகவும் சாத்தியப்படவில்லை. யுத்தக் கடனாலும், சுங்க வரியாலும், தொழிலில்லாக் குறையாலும் தாங்கமுடியாத சுமை அதிகரித்து விட்டன. எனவே சமீப காலத்தில் இதற்கோர் நேரிய வழி காணாதிருந்தால் ஐரோப்பிய நாடுகளில் மிக இலகுவில் பஞ்சம் குடி புகுந்து விடுமென அரசியல் ஞானிகள் அஞ்சுகின்றனர். ஆதலால் இவர்களது கருத்து எதிர் காலத்திலேனும் வீண் போகுமென்று சொல்வதற்கில்லை. ஆகவே மிர். பிரயாண்ட் அவர்களைப் பின்பற்றி மிர். கெலார்கி தீவிர முயற்சி எடுத்து வருகிறார். இவரைத் தொடர்ந்து அநேக தலைவர்களும் வேலைசெய்து வருகின்றனர். ஆனால் ஐரோப்பிய நாடுகளின் பரம்பரை விரோதங்களை யிட்டும், தற்கால அரசியல் மாற்றங்களை யிட்டும், பல திறப்பட்ட பழக்கங்கள் பாஷைகள் அரசியல் எண்ணங்கள் இவைகளை யிட்டும் நாம் தற்போது இவர்களது கருத்து முற்றுப் பெறுமென்று சொல்ல முடியாது.

## தற்கால நிலைமை

மிர். பிரயாண்ட் அவர்களது ஆதிக் கருத்தின்படி அந் நாடுகளை ஐக்கியப் படுத்துவதற்குத் தற்கால நிலை ஒருபோதும் இடம் கொடாது. ஜெர்மனி பிரான்ஸ் ஆகிய இரு தேசங்களின் அரசியல் சம்பந்தம்



மிகவும் கவலைக் கிடமானதாய்க் காணப்படுகிறது. ஸ்டெறெஸ்மான் காலத்திலிருந்த ஜெர்மனியின் அமைதியை மிக்கவாறு நம்பி ஆரம்பித்த மிர். பிரயாண்ட், சமீபத்தில் நடந்தேறிய ஜெர்மனியின் தேர்தலில், இராணுவ பலத்திலும் சர்வாதிகாரத்திலும் இறுமாந்து நிற்கும் தேசியக் கட்சியும் சம தர்மக் கட்சியும் அடைந்த வெற்றியால் திடுக்குற்றதுமன்றி, இனி ஒரு போதும் அவரது கருத்து நிறைவேற மார்க்கமில்லையென அரசியல் ஞானிகள் யாவரும் ஒரு முகமான அபிப்பிராயத்திற்கு வந்து விட்டார்கள். அன்றியும் பிரான்சுக்கும் இத்தாலிக்கும் ஏற்பட்டிருக்கும் நிலைமையும் கவலைக் கிடமான சந்தேகத்தை உண்டுபண்ணக் கூடியதா யிருக்கிறது. லண்டன் கப்பற் படை மகாநாடு இவ் விரண்டு தேசங்களையும் ஒன்றுபடுத்த இயலாது அவைகளின் படைக்கலத் திட்டத்தை அவைகளே தமக்குள் முடிவு செய்து கொள்ள வேண்டுமென விட்டுவிட்டதானது, லண்டன் மகா நாட்டின் தோல்வியை நன்கு வெளிப்படுத்துவதாகும். பிரான்சு விரும்பும் அதிகப் படியான படைக்கலத்தை இத்தாலி ஒப்புக்கொள்ளா திருப்பதையும், இத்தாலியின் தற்கால இராணுவ முறையையும், முஸோலினியின் வீர மொழியையும் கண்டு பிரான்ஸ் நடுக்குறுவதையும் கவனிக்குங்கால் இவர்களுக்குள் சமீபத்தில் ஓர் சமாதான ஒப்பந்தம் ஏற்படுவதென்பது இயலாத காரியம். தவிரவும், பிரான்ஸ் தேசத்திற்குச் சார்தகமாக விருக்கும் "யூகோசுலோவிக்யா" தேசத்திற்கு இத்தாலி அடிக்கடி இடுக்கண் விளைவித்துக்கொண் டிருப்பதும், ஜெர்மனியின் தளகர்த்தரான "ஜெனரல் குரோனர்" (General Groener) என்பார் ரஷ்யாவின் செந் துருப்புக்களோடு (The Red Army of Russia) நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண் டிருப்பதும் பிரான்ஸ் தேசத்திற்குப் பெருங் கவலையையே அளித்து வருகிறது. எனவே மிர். பிரயாண்ட் அவர்களின் ஐரோப்பிய ஐக்கிய நாட்டுத் திட்டம் தற்கால வுலகில் வீண் கனவாகவே முடியுமென்று நாம் நினைக்கக் கூடும். என்றாலும் இவர்களது இப் புதிய நோக்கம் எதிர் காலத்தில் ஐரோப்பிய அரசியல் ஞானிகளுக்கும் அறிவாளிகளுக்கும் புதியதோர் உணர்வு ஊட்டி வருமென்பதில் சந்தேகமில்லை. எவ்விதமாயினும் இக் கருத்துச் சாலவும் சிறப்புடையதே. உண்மையில் உலக நாடுகளின் சமாதானத்திற்கும் நியாய நிபந்தனைகளுக்கும் பாடுபட்டு வரும் சர்வ தேச சங்கம், கெல்

# ஓ ஹிமாலயமே!

## ஜனாப் சையது அகமது அவர்கள்.

ஓ ஹிமாலயமே! எமது நாட்டுப் பாதுகாவலனே!! உன்னை யியற்கை யரசி, என்ன அழகுபட அமைத்துள்ளாள்! நீ தொண்டு கிழவனாயினும் எத்துணைக் கெம்பீரத்துடன் வீற்றிருக்கின்றனை! உன் கவர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுகிறது. இதோ பார்! யாவற்றினும் உயர்ந்து மிகக் கர்வத்துடன் பரந்து விளங்கும் வானமும் உனது அன்பின் வலையிற் சிக்கிக் குனிந்து உன் பிரகாசமான முகாரபிம்பத்தை முத்தமிடுகிறது. "பாரதகண்டமே சிறந்தது, அது ஏனைய நாடுகளினும் உயர்ந்தது" என இதர தேசத்தினர்க்குக் காண்பிப்பான் வேண்டி நீ மற்றப் பர்வதங்களினும் உயர்ந்து மலையரசனாய் விளங்குகின்றாய். நாடு பிறரால் கவரப்பட்டு அடிமையாகிக் கிடப்பினும் நீ இன்னும் ஜெயிக்கப்படாமல் வீற்றிருக்கின்றனை. எத்துணை அன்னியர் உன்சிரசில் ஏறி உன்னை ஜெயித்துவிடலாமெனக் கருதினர் கருதுகின்றனர். ஆனால் வீரக்கிழவா! நீயா அடிமைப் படுபவன்?

---

லாக் உடன்படிக்கை, உலக் நீதி மன்றம், போர் ஒழிக்க முயற்சித்து வரும் பலதிறப்பட்ட மகா நாடுகள் ஆகியவைகள் உலகில் போரை அறவே ஒழிப்பதிலோ அல்லது போர் அடிக்கடி நிகழாமல் பார்த்துக் கொள்வதிலோ வெற்றி பெறுமாயின், இது போன்ற பல நாடுகளின் கூட்டுறவு முறைகளுக்குப் பெருத்த ஆதரவு கிடைக்குமென்பது திண்ணம். ஐரோப்பிய நாடுகள், தற்கால நிலைமையில் இம் முறை தழுவுவதில் வெற்றி பெறுமாயின், உண்மையில் ஐரோப்பாவிலுள்ள பல சிற்றரசுகளேனும் எதிர் காலத்தில் சுக வாழ்வு பெறுமென்று நாம் நினைக்கக்கூடும்.



நினது உயரிய சிகரமாகிய கிஞ்சின் ஜங்கா மீது இன்றும் ஜர்மானிய குழுவினர் ஏற முயன்றுகொண் டிருக்கின்றனரன்றோ? நீ அவர்களையும் கீழே தள்ளித் தள்ளிக்கொண் டிருக்கின்றனையன்றோ? என்னே நினது சுதந்திர உணர்ச்சி! என்னே நின்றன் வீரத்தோற்றம்!!

ஓ ஹிமாலயமே! இவையாவும் சரியே. ஆனால் அந்தோ! ஒரு விஷயம் மட்டும் நினைத்து நினைத்துப் பெருமூச்சு விடவேண்டி யிருக்கின்றதே! இதோ உன் உயர்வைப் பார்! அதன் பின்னர்ப் பாரத கண்டத்தின் தாழ்வைப் பார்! ஆ! என்ன வித்தியாசம்!

நீ முன்னர் எங்ஙன மிருந்தனையோ அதே கெம்பீரத்துடனும் புகழுடனும் இன்றும் விளங்குகின்றாய். அன்று உனக்குச் சமமா யிருந்த பாரதகண்டமோ இன்று கெம்பீரம் புகழ் செழிமை யாவும் இழந்து இன்னது செய்வதெனத் தோன்றாது நின்று, முன்னேற்ற மென்னும் பாதையில் மற்ற நாடுகளினும் எவ்வளவோ பின்னால் புழுவைப் போல நெளிந்து நெளிந்து மிக ஆயாசத்தோடு சென்று கொண் டிருக்கின்றது. இதில் வதியும் மக்களோ, உண்ண உணவின்றி உடுக்க ஆடையின்றித் தவிக்கின்றனர். ஏனையோருக்கு உணவளித்த இந்தியா, இன்று தன் மக்கள் உணவின்றி அயல் நாட்டினரை யணுகி அவர்களுக்காக நெற்றி வியர்வை நிலத்தில் விழ அரும் பாடுபட்டுக் கொடுமைக் காளாகி வடிக்கும் கண்ணீரை நினைந்து உன்னி உன்னிப் பெரு மூச்சு விடுகின்றது.

ஓ எமது பாதுகாவலனே! இவை யாவும் நீ பார்த்துக்கொண்டு தானே வாளா விருக்கின்றாய்! உன்னை இதற்காகத்தானா ஆண்டவன் எமது காவலனாகப் படைத்தான்? நன்று நன்று; நீ இதற்குப் பதிலாக உன் இருப்பிடத்தை விட்டும் உருண்டு வந்து இந்தத் துர்ப்பாக்கிய இந்தியர் அனைவரையும் நசுக்கி விட்டால் துன்பம் சீக்கிரம் தீர்ந்து விடுமே! உனக்குக் கோடி புண்ணியமாகுமே! நீ செய்வது துரோகம்! துரோகம்!!

ஆ! இல்லை; இல்லை; நான் ஊகிப்பது தவறு. ஆம்! நீ அங்ஙனம் செய்ய மாட்டாய்; நீ அவ்விதம் கல் நெஞ்சமுடையவனல்ல.

இதோ ஓடி வரும் கங்கை யமுனை முதலிய நதிகள் நீ பாரத மாதாவை நினைந்து நினைந்து விடும் கண்ணீரே யாகும். உன்னில் குடிகொண் டிருக்கும் நிசப்தம், உனது இருதயத்திலுள்ள ஆழ்ந்த யோசனையையும் துக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

ஓ எமது நண்பனே! இன்று இந்தியா எய்தியுள்ள நிலை இதர நாடுகள் எய்திய துண்டா? சுதந்திரம் தாண்டவ மாடும் நாடுகளில் மெச்சத் தகுந்த பாராளுந் திறனுடையோரும், அதிசயிக்கத் தக்க எழுத்து வன்மை படைத்தோரும், அரும் பெரும் நாவலரும், பாவலரும், பேரறிஞர்களும், பற்பல சாஸ்திர நிபுணர்களும், தனது 23 வயதுக்குள் இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு விமானத்தில் தன்னந்தனியே பறந்து சென்று உலக கவனத்தைத் தன்பால் ஈர்த்துக் கௌரவமடைந்த மிஸ். ஆமி ஜான்ஸன் போன்ற வீரப் பெண்மணிகளும் இன்னும் அபார சக்திகள் வாய்ந்த பிறரும் அபரிமிதமாய் மிளிர்வதற்குக் காரணம் யாது? பரத கண்டமெனப் படும் நமது இந்தியாவில் ஒவ்வொரு வகையிலும் ஏதோ எங்கோ ஓரிரண்டு பேர்கள் மட்டும் திகழ்வதற்குக் காரணம் யாது? சுதந்திர மின்மையே! சுதந்திர மின்மையே!! எத்தனை இந்தியப் பேரறிஞர்கள், எத்தனைச் சாஸ்திர நிபுணர்கள், எத்தனை வாலிப சிங்கங்கள், எத்தனை வீர தீரப் பெண்மணிகள் சந்தர்ப்பம் வாய்க்கப் பெறாது வனத்தில் மலர்ந்த அரும்பு போல் மணமடையாது புகழடையாது மறைகின்றனர்? பத்திரிகை விற்கும் சிறுவனாயிருந்து தான் பிறந்த நாட்டையே ஆளும் திறனுடையோனாய் விளங்குதற்குச் சுதந்திர மன்றோ காரணம்? ஒருவனுள் இயற்கையா யமைந்துள்ள அபார சக்திகளைப் பொழுதொரு வண்ணமாய் வளர்த்து உலகத்தாரை ஐயமுறச் செய்தது வீர சுதந்திர மன்றோ? அவ்வித சக்திகள் இயற்கையில் வாய்க்கப் பெறினும் அவைகளை வளர விடாது மழுங்க வைப்பது அடிமைத்தனமும் வறுமையு மன்றோ?

ஓ ஹிமாலயமே! இதை யுணர்ந்தும் எத்தனை பேர் தங்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ சுதந்திரத்திற்கு முட்டுக் கட்டையாய் அமைந்துள்ளார். இதை யாரிடம் எடுத்துரைப்பது?



இன்னும் பாரத மக்களில் ஒருவர் மற்றவர் தொண்டையை நெருக்கிக்கொண் டிருக்கின்றனரே. நம்பிக்கை யின்றிச் சந்தேகங் கொண்டு வேறுபட்டுத் திரிகின்றனரே. தன்னம்பிக்கை இவர்களிடம் முயற்கொம்பாக வன்றோ இருக்கின்றது. உணர்ச்சியே அற்ற இருதயங்களை யுடையவராக வன்றோ திகழ்கின்றனர்! புலிகளுக்கு முன் பூனைகளாக வன்றோ விளங்குகின்றனர்!!

இவை போதாவென ஒவ்வொரு விதத்திலும் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண் டன்றோ கொடுமை புரிகின்றனர்! நாகரீகம் உதிக்கு முன், வனங்களிலும் குகைகளிலும் வசித்துக்கொண் டிருக்கும் பொழுது உயர்வு தாழ்வும் ஏழை பணக்காரனென்ற வித்தியாசமும் மதச் சண்டைகளும் இருந்த துண்டா? ஆ! அந்த அநாகரீகம், இந்த நாகரீகத்தைக் காட்டினும் எத்தனையோ மடங்கு சிறந்ததாக வன்றோ தோன்றுகின்றது.

ஓ ஹிமாலயமே! இவர்களது அறியாமையை நீக்கு; விட்டுக் கொடுக்கும் மனப் பான்மையை உண்டாக்கு; நியாயம் எதுவென்று தோன்றுகிறதோ அதைத் தைரியத்துடன் செய்யும் ஆற்றலை யளி; சுதந்திர மென்னும் நெருப்பை ஒவ்வொருவர் ஹிருதயத்திலும் மூட்டி ஜ்வாலைவிட் டெரியச் செய். இதர நாடுகள் உள்ள நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கச் செய். அன்னியர் எள்ளி நகையாடுவதைக் கவனிக்கச் செய். பிறர் நம்மைத் துரும்பென மதித்துக் காலால் எட்டி உதைப்பதை உணரச் செய். ஆ! இவ் விஷயங்களை நினைத்தாலும் இரத்தம் கொதிக்கிறதே; இருதயம் துடிக்கிறதே.

நமக்கு முன்னேற்றம் வேண்டுமாயின், நமது மனோபாவத்திலும் பழக்க வழக்கங்களிலும் துரித மாறுதல் ஏற்படல் அத்யாவசியம். மாறுதலின்றி முன்னேற்றமில்லை. மரம் முளைக்க வேண்டுமாயின் விதை அழிந்தே தீரவேண்டும்.

இது நிற்க; இந்துக்களும் முஸ்லீம்களும் வீண் சந்தேகங்களுக் கிடங்கொடுத்துச் சின்னஞ் சிறிய விஷயங்களையும் பெரிதாக்கிக் கொண்டு ஒருவருக்கொருவர் வெறுப்பு கோபம் முதலிய பார்வைகளால் நோக்குகின்றனர். இந்தியா வென்னும் இரதம்,

# ஐரோப்பியரின் எழுச்சி.

## திரு. A. ராமசாமி அவர்கள்.

(முன் 40-ம் பக்கத் தொடர்பு.)

### இந்தியாவின் தரிசனம்

ஆப்பிரிக்காக் கண்டத்தின் மூலமாகவும் இந்தியாவுக்கு வழியிருக்க வேண்டுமென்ற ஆராய்ச்சியையனுசரித்து போர்த்துகீயர் தமது நாட்டினின்றும் தெற்கு முகமாகப் பிரயாணம் செய்து ஆப்பிரிக்காக் கண்டத்தின் குருக்கேயாவது, ஓரத்திலாவது சென்று இந்தியாவை யடையலாமென்ற எண்ணங்கொண்டு அநேக மாலுமிகளுக்கு உற்சாகமூட்டி ஏராளமான பணச் செலவு செய்து அவ்வழியாகக் கப்பல்களை அனுப்பிக்கொண்டே யிருந்தனர். இதுவும் முன் பின் பார்த்தறியாத புதியமார்க்கமே யாதலால் பிரயாணம் செய்யச் செய்ய மாலுமிகளுக்குப் பயமும், பின்னடையும் தன்மையு மேற்பட்டதோடு இந்தக் காரியத்தால் போர்ச்சுகல் அரசாங்கத்திற்குப் பொருள் நஷ்டமும் அநேகமாக ஏற்பட்டது. மேலும் 1492-ம் வருஷத்தில் முதன் முதலாகக் கொலம்பஸ் மேற்குத் திசை

---

முன்னேற்றமென்னும் பாட்டையில் விரைந்து சென்று ஏனைய நாடுகளை அடைய வேண்டுமாயின், இவ்விரு குழுவினரும் இரு சக்கரங்களாக அமைய வேண்டும். இவர்களது ஊக்கம் உற்சாகம் தன்னம்பிக்கை விடா முயற்சி முதலிய புரவிகளே இந்திய ரதத்தை விரைந்து இழுத்துச் செல்லல் வேண்டும். இன்றேல் இத் துர்ப்பாக்கிய தேசம், சக்கர மற்ற ரதம் போல் ஒருவரும் கவனிப்பாரற்றுக் கிடக்க வேண்டியதே யாகும். ஆதலால் ஹிந்து முஸ்லீம் சகோதரர்களே, இதில் ஏகோபித்த ஸ்பரஸ்பர நேச பான்மை கொண்டு இத் தருணம் செய்ய வேண்டிய அவசிய அவசர கடமையை மேற்கொள்வீர்களாக.

---



யாகச் சென்றிருந்தபடியால் எப்படியாவது கொலம்பஸ் இந்தியாவைக் கண்டு பிடித்துவிடுவா ரென்ற நம்பிக்கை யொன்று இவர்களுக்குப் பெலமாக விருந்தது. ஆனால், அந்தக் கொலம்பஸ் கண்டு பிடித்தது புதிய உலகம் என்பது தெரிந்த வுடனே ஓஹோ! இந்தியாவுக்கு, மேற்கே வழியில்லை போலும்! என்றும், தென் றிசையாகத்தான் பிரயாணஞ் செய்து இந்தியாவை யடைய வேண்டும் என்றும் கருதித் தமது முயற்சியில் பின்னும் இரு மடங்கதிகரித்தவர்களாகித் தைரியங்கொண்டு மீண்டும் ஆப்பிரிக்காக் கண்டத்தின் ஓரமாகப் பிரயாணஞ்செய்து வரலாயினர். இதன் பலனாக "வாஸ்கோடி காமா" என்னும் கப்பற் றலைவர் 1497-ம் வருஷத்தில் ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென் கோடியி லுள்ள (Good hope) நன் முனையை யடைந்தார். அங்கிருந்து இந்தியா, வடகிழக்கு மூலையி லிருக்கவேண்டு மெனப் பலவாறு யூகித்து 1498-ம் வருஷத்தில் தென் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். இவ் வமயம் அவருக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவுண்டெனக் கூற முடியுமா?

சகல வளங்களும் சிறந்து, பொன் விளையும் நாடெனப் பெயர் பெற்று, வந்தவர்களை ஆதரிப்ப தென்கின்ற சிறந்த பூடணத்தை யணிந்துள்ள பாரத நாட்டுடன் செய்து வந்த பழைய வர்த்தகத்தை உயிர்ப்பிக்க வேண்டி இந் நாட்டிற்குப் புதிய கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்ததினால், கனவிற் கண்ட அனுபவம் நனவிற் கண்டதுபோல அவ் வைரோப்பியருக் குண்டான மகிழ்ச்சிப் பெருக்கிற் களவேயில்லை. இவ்வாறு கண்டுபிடித்த கடல் மார்க்கமாகவே அந்தப் போர்த்துக்கீஸியர் பல வருஷங்கள் வரையில் இந்தியாவுடன் வர்த்தகம் நடத்திக் கொண்டிருந்தனர். "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித், தாழா துஞற்றுபவர்." என்ற திருவள்ளுவரின் மொழிக் கொப்ப, இந்திய ஐரோப்பிய வர்த்தகத்திற் குண்டான பேரிடையூற்றைக் கண்டு மனஞ் சலித்து நமது பிராப்தம் இவ்வளவுதான் என்றும், ஊழ்வினையைக் கடக்க யாரால் முடியும் என்றும் அவ் வைரோப்பியர் வாளா உறங்கிக் கிடக்காமல் அஞ்சா நெஞ்சுடனும், சலியா ஊக்கத்துடனும் உடல்

பொருள் ஆவிகளைப் பொருட்படுத்தாமல் இந்தியாவைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஓரே பிடிவாதத்துடன் பெரு முயற்சி செய்துவந்ததின் பலனாக அவர்கள் ஊழ்வினையை உதறித் தள்ளியவர்களானார்கள். இந்த ஐரோப்பியரின் பெரு முயற்சி அக் காலத்தில் இரு நாடுகளுக்கும் நன்மை பயப்பதாகவே யிருந்தது, ஏனெனில் அக் காலத்திய வர்த்தகமெல்லாம் இந்தியச் சரக்குகள் வெளி நாடுகட்குச் செல்வதே அதிகமாகவும், இந்தியாவுக்கு இறக்குமதியாகும் சரக்குகள் மிகச் சொற்பமானதாகவு மிருந்ததனால் இந் நாட்டிற்கு லாபகரமாயும், வெளி நாடுகளுக்கு உணவுப் பொருள்கள் செல்வதால் அவைகளுக்கு நன்மையாகவும் இருந்ததென்பதை ஞாபகப் படுத்திக்கொள்ளல் வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இந்த முறை தலைகீழாகப் பரிணமித்து விட்டது.

## செல்வப் பெருக்கு

இவ்விதமாக இந்தியாவுக்குப் புது வழி கண்டுபிடிக்கச் செய்த முயற்சியின் பலனாக அவ் வைரோப்பியர் இருவித பலன்களை யடையலாயினர். ஒன்று, முகம்மதியரின் சம்பந்த மில்லாத கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தது; மற்றொன்று பிரம்மாண்டமான அமெரிக்காக் கண்டம் அகப்பட்டது. அமெரிக்காவைக் கண்டு பிடித்த ஸ்பெயின் தேசத்தார் முதலில் அத் தேசத்தின் உட் பிரதேசத்தை யாராயாத குறைவால் இந்தியாவைக் கண்டுபிடித்த போர்த்துக்கீஸியரே பெரும் பாக்கியவான்களென்றும், அவர்களே பெருஞ் செல்வத்திற் குரியவர்களாயினர்களென்றும் நமது காரியம் வீண் சிரமமே யன்றி சிறிதும் பயனற்றதா மென்றும் தமது முயற்சியை இகழ்ந்துகொண்டும், போர்த்துக்கீஸியரைப் புகழ்ந்துகொண்டும் அநியாயமாக எழெட்டு வருஷங்களாக மேற்கே போய்ப் போய்க் காலத்தை வீணாகக் கழிக்கலானோமே யென்றும் எண்ணமிட்டுக் கொண்டிருந்தனர். நாளடைவில் அக் கண்டத்தில் சிலர் வாசஸ்தானத்தை யேற்படுத்திக் கொண்டு உள் நாட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்ததன் பலனாகச் சகல செல்வத்தோடுங் கூடிய அரசாங்கங்களும், நல்ல விவசாயத்திற்குரிய



பூமிகளும், பொன் வெள்ளி முதலிய உலோகங்கள் அகப்படக் கூடிய அநேக பிரதேசங்களும் அவர்களுக்குத் தென்பட்டன. உடனே அந்தப் பிரதேசங்களை யெல்லாம் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, இச் செய்தி தமது சொந்தத் தேசத்திற்குத் தெரிந்தவுடனே ஸ்பெயின் அரசாங்கம் சில சேனைகளை ஆங்கனுப்பி, அமெரிக்காக் கண்டத்தில் செல்வம் மலிந்த சிறிய சிறிய ராஜ்யங்களை யெல்லாம் தமது கைவசப் படுத்திக் கொண்டது. ஸ்பெயினர்கள், பல பொன் வெள்ளிக் கனிகளையும் அகப்படுத்திக் கொண்டனர். இதனால் ஆண்டுதோறும் அளவற்ற பொன், வெள்ளிப் பாளங்கள் ஸ்பெயின் தேசத்திற்கு வந்து குவிந்த வண்ணமா யிருந்தன. அதி சீக்கிர காலத்தில் ஸ்பெயின் தேசம் பெருஞ் செல்வமுடையதாகி, அமெரிக்காவின் பல ராஜ்யங்களுக்கு அதிபதியாகி, ஏராளமான நீராவிக் கலங்களைக் கட்டிக்கொண்டு, அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் சர்வ சாதாரணமாகப் போக்கு வரவு செய்து கொண்டு, தமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் முதலியவற்றை யெல்லாம் அமெரிக்காவி லிருந்தே தயார் செய்துகொண்டு, யாதொன்றிலும் குறைவில்லாதபடி பெரும் படைகளையும் தயார்ப்படுத்திக்கொண்டு பெரிய அரசாங்கமாக் (Empire) மாறிவிட்டது. சாதாரணமான ஒரு சிறிய அரசாங்கமாக இருந்த ஸ்பெயின் இவ்விதமாகப் பெரிய ராஜாங்கமாக மாறிவிட்டதையும், பெருஞ் செல்வத்தோடும், பெரும் படையுடனும் திகழ்வதைக் கண்டு ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளெல்லாம் அஞ்சத் தொடங்கின.

இந்தியாவுக்கு வந்த போர்த்துக்கீஸியரோ ஏற்கெனவே முகம்மதியர் மீது பகை கொண்டவர்களானபடியாலும், பெரும்பாலான முகம்மதிய ராஜ்யங்களோடு சம்பந்த மில்லாத புதிய வழியை யறிந்துகொண்ட தைரியத்தாலும் இந்தியாவிலும், மற்றக் கீழைத் தேசங்களிலும் வர்த்தகம் செய்து கொண்டிருந்த முகம்மதியரோடு போர் புரிந்து சிறிது காலத்தில் "ஜாவா", "மோலகஸ்", "ஏடன்" முதலிய இடங்களைத் தமது வசப்படுத்திக் கொண்டனர். நமது நாட்டிலுள்ள "கோவா" முதலியவையும், இலங்கைத் தீவும்,

மலாய் நாடுகளுங்கூட போர்த்துகீஸியர் கையி லகப்பட்டுவிட்டன. இவர்கள் இம்மட்டோடு நிற்காமல் ஸ்பெயின் தேசத்தார் கண்டு பிடித்த அமெரிக்காவின் செல்வ வளத்தைச் செவியுற்று அங்கேயும் சென்று ''ப்ரேஜில்'' முதலாகிய தேசங்களைக் கைப்பற்றிக் கொண்டு ஸ்பெயின் தேசத்தாரைப் போலவே ஏராளமான செல்வத்தைத் திரட்டலாயினர்.

ஐரோப்பாக் கண்டத்தில் பல தேசங்களிருக்க இவ்விரு தேசங்கள் மாத்திரம் இவ்வளவு முயற்சியும் பயனும் அடையும் போது மற்றத் தேசங்களெல்லாம் என்ன செய்துகொண் டிருந்தன வென்ற சந்தேகம் வாசகர்களுக் குண்டாகலாம். அக் கண்டத்தில் நார்வே, ஸ்வீடன், இங்கிலாந்து முதலிய ஒதுக்கி லிருந்த தேசங்கள் தவிர, மத்தியதரைக்கட லோரமா யுள்ள கிரீஸ், இத்தாலி முதலிய தேசங்கள் கிறிஸ்து முகம்மதிய கலகத்திற்கு முன் கீழைத் தேசங்களோடு வர்த்தகம் புரிந்து ஏராளமான செல்வத்தைத் திரட்டிக்கொண்டு சகல வைபவத்தோடு விளங்கின வென்பதை ஏற்கெனவே கூறினோம். மற்ற ஜர்மனி, ஆஸ்ட்ரியா முதலிய நாடுகள், கடலோர நாடுகளி லிருந்து சரக்குகளை வாங்கி யுபயோகித்து வந்தன. அவை சிறிது வர்த்தகத்திலும் சம்பந்தப் பட்டிருந்த போதிலும் கடலோர நாடுகள் முதற் பூசையாக ஏராளமான லாபத்தை யடைந்துகொண் டிருந்ததைப் போல அவ்வளவு லாபத்தை யடைய அவற்றால் முடியாமற் போயின. ஆகவே, இந்தியாவுக்குப் புதிய வழியைக் கண்டு பிடிக்க முயன்ற காரியத்தில், முற் கூறிய கடலோர நாடுகளுக்குக் கவலையில்லாமற் போனதோடு, மற்ற நடுத்தரமான நாடுகளுக்கு இப்படிச் செய்தால் இன்னது அடையலாம் என்ற எண்ணமும், யோசனையு மிருந்த போதிலும், இரு கடல்களுக்கும் நடுவி லுள்ள ஸ்பெயின், போர்ச்சுகல் தேசங்கள் விடா முயற்சியுடன் காரியத்தில் கண்ணுங் கருத்துமா யிருப்பதை யறிந்து ஒரு சமயம் இந்தியாவுக்கு வழி கண்டுபிடிக்கும் வேலையி லீடுபட்டுக் காரியம் ஆற்றிய போதிலும் முன்னாலிருக்கும் அவ்விரு தேசங்களுக்குந் தானே எல்லாச் சௌகரியங்களு மேற்படும்? நாமேன் வீணாக் அதில் தலையிட வேண்டு மென்று அவை வாளா இருந்து விட்டன.



## ஆங்கிலேயரின் உணர்ச்சி

ஆனால் இங்கிலாந்து தேத்திற்கு மாத்திரம் இக் காரியங்களை யெல்லாம் பார்க்கப் பார்க்க விழிப்பேற்பட்டு விட்டது. முன்பு மத்திய தரைக் கடல் எப்படி வர்த்தகத்திற்கு நல்ல வழியா யிருந்ததோ, அக் கடலின் ஓரத்திலிருந்த இத்தாலி, கிரீஸ், ஈஜிப்ட் முதலிய தேசங்கள் எப்படி ஏராளமான செல்வத்தைத் திரட்டிக் கொண்டனவோ அது போல, இப்போது அத்லாண்டிக் மகா சமுத்திரம், வர்த்தகத்திற்கு ராஜ பாட்டையாய் ஏற்பட்டு விட்ட படியால், அத்லாண்டிக் சமுத்திரத்திலேயே இந்தியாவுக்கு வழி யிருப்பதாகத் தெரிந்துவிட்ட படியால், அதன் ஓரத்திலுள்ள ஸ்பெயின் போர்ச்சுகல் தேசங்கள் நாளுக்கு நாள் செல்வத்திற் பெருத்துப் பொன்னாடுகளாக மாறி வருவதைக் கண்ட இங்கிலாந்து தேசம், தான் அத்லாண்டிக் மகா சமுத்திரத்தி னிடையிலேயே இருந்து கொண்டு, அச் சமுத்திரத்தின் வழியாக வர்த்தகம் நடத்திக்கொள்ளத் தனக்கு மற்றத் தேசங்களைவிட எவ்வளவோ சௌகரியங்க ளிருப்பதை யுணர்ந்து தானும் இந்தியாவோடு வர்த்தகம் செய்யத் தொடங்கியது. ஆனால், அக் காலத்தில் அந் நாடுகளில் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்திற்குப் புதிய மார்க்கத்தைக் கண்டு பிடித்தால், அந்த மார்க்கத்தில் பிரயாணம் செய்து பலனை யனுபவிக்க வேறு நாடுகளுக்கு உரிமை யில்லை யென்றும், வேண்டுமாயின் வேறு நாட்டினர், முதலிற் கண்டு பிடித்த தேசத்தாரின் அனுமதி பெற்று அவ் வழியில் யாத்திரை செய்து கொள்ளலா மென்றும் நிபந்தனைகள் ஏற்பட்டிருந்தன. இந் நிபந்தனைகளினாலேயே போர்த்துகீஸியர் கண்டு பிடித்த புதிய வழியில், தாம் சுயமாகச் செல்வதற் கில்லாமல் ஸ்பெயின் தேசத்தார், முன் கூறியதைப் போலச் சில காலம் எண்ண மிட்டுக்கொண் டிருந்தனர் என்பதை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் ஸ்பெயின் தேசத்தாரால் கண்டு பிடிக்கப்பட்ட அமெரிக்காவுக்கு போர்ச்சுகல் தேசத்தார் மாத்திரம் போகலாமா வென்றால், ஸ்பெயின் தேசத்தார் கண்டு பிடித்ததும் முதலில் அவர்கள் வாசஸ்தானத்தை யேற்

படுத்திக் கொண்டதும் சிலதீவுகளும் மத்திய அமெரிக்காவுமேயான தாலும், போர்ச்சுகல் தேசத்தார் பிடித்தது தென் அமெரிக்காவி லுள்ள "ப்ரேஜில்" தேசமானபடியாலும் அந்த நிபந்தனைகள் அவர்களைக் கட்டுப்படுத்த வில்லைப் போலும்.

ஆங்கிலேயர் அந் நிபந்தனைகளினால் பலவாறு யோசித்து இந்தியா கிழக்கேதானே யுள்ளது; நாம் அத்லாண்டிக் மகா சமுத்திரத்திலிருந்து வட கடல் வழியாகப் பிரயாணம் செய்து இந்தியாவின் சம்பந்தம் வைத்துக் கொள்ளலாமெனக் கருதி "ஆர்க்டிக்" சமுத்திரத்தின் கிழக்கு மார்க்கமாகச் சில கப்பல்களை யனுப்பினர். பிறகு மேற்கேயும் செல்லலாமெனக் கருதி அதே "ஆர்க்டிக்" சமுத்திரத்தின் மேற்கு முகமாகச் சில கப்பல்களையும் அனுப்பினர். ஆயினும் என்னவாயிற்று? அங்குச் சமுத்திர ஜலம் உறைந்து வெறும் பனிப் பாறைகளாகவும், பெரிய பெரிய பனி மலைகளாகவும் குறுக்கிட்டுக் கப்பல் போவதற்கு வழி யில்லாமற் செய்ததுடன் சிற்சில சமயங்களில் கப்பல்கள் இரு பனி மலைகளுக்கும் இடையி லகப்பட்டு நொறுங்கிப் போவதும், குளிர் பொறுக்க மாட்டாமல் கப்பலில் உள்ளவர்கள் விறைத்து உயிர் துறப்பதுமாகிய அபாயங்களைத்தான் அவர்கள் அனுபவித்தார்கள். பல முறை முயன்றும் இவ்வித கஷ்ட நஷ்டங்களும், உயிர்ச் சேதங்களும் ஏற்படுவதை யறிந்த இங்கிலாந்து தேயத்தினர் "ஆர்க்டிக்" சமுத்திரவழி சிறிதும் பயனற்ற தெனக் கருதி, வேறு மார்க்க மறிய முடியாதவர்களாகி எப்படியாவது இந்தியாவோடு சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும் இதற்கென்ன செய்வதெனக் கருதி முடிவாக எப்படியாவது போர்த்துகீஸியர் சென்ற வழியாகவே செல்லலாமென்று உறுதி செய்து கொண்டனர். இந்தியாவின் செல்வ நிலைமையையும் நாட்டு வளப்பத்தையுங் கண்டு ஐரோப்பிய நாடுகள் பல்லாண்டுகளாக அனுபவித்துக் கொண்டும், இடையி லேற்பட்ட இடையூறினால் எதிர்பார்த்துக்கொண்டி ருந்தபடியால் இந்திய லட்சுமியின் (செல்வத்தின்) பேரில் பேராவக்கொண்டு, ஆங்கிலேயருக்கு முன்னமேயே அந் நாடுகளின் நிபந்தனைகளை மீறி ஹாலெண்டு தேசத்தினராகிய டச்சுக்காரர், போர்ச்சுகல் தேசத்தார் சென்ற



வழியிலேயே வந்து இந்தியாவோடு வர்த்தக சம்பந்தம் வைத்துக் கொண் டிருந்தபடியால் ஆங்கிலேயருக்கு இது (டட்சுக்காரரின் செய்கை) ஒரு நல்ல சமயத்திற் கேற்ற வழிகாட்டியாக முடிந்து விட்டது. அதனால் கண்டத்தின் கட்டுப்பாடுகளை யலட்சியம் செய்து கி. பி. 1600-வது வருஷத்தில் ஆங்கிலேயர் ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு வந்து இந்தியாவுடன் வர்த்தகம் செய்யத் தொடங்கி விட்டனர். இந்த வர்த்தகந்தான் இந்தியாவில் தற்கால ஆங்கில அரசாட்சிக்கு அஸ்திவாரமாகும். அக் காலத்தில் இந்தியாவில் அக்பர் சக்ரவர்த்தியும், இங்கிலாந்தில் எலிஜபெத் ராணியும் அரசாட்சி புரிந்து வந்தனர். இங்கிலாந்திலிருந்த எலிஜபெத் மகாராணிக்கு வருஷாந்திரத்தில் கிடைத்த வரும்படியை விடப் பல மடங்கு அதிகமாகவே இந்தியாவிலிருந்த அக்பர் சக்ரவர்த்திக்குக் கிடைத்து வந்ததும், ஆங்கிலேயர் இங்கு வர்த்தக சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டு மென்று பேராவல் கொண்டதற் கொரு காரணமா யிருந்தது.

இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்கள் 1612-ம் வருஷத்தில் "சூரத்"தில் ஒரு பண்டக சாலையையும், 1639-ம் வருஷத்தில் சந்திரகிரி அரசனிட மிருந்த நமது சென்னைமா நகரில் செண்ட் ஜார்ஜ் கோட்டையையும், 1640-ம் வருஷத்தில் ஹூக்ளியில் ஒரு பண்டக சாலையையும் 1690-ம் வருஷத்தில் கல்கத்தாவில் செண்ட் வில்லியம் கோட்டையையும் கட்டிக் கொண்டு வியாபாரம் செய்யலாயினர். இவைதானா? மேலும், கிழக்குக் கரையிலுள்ள பல துறைமுகப் பட்டணங்களையும் தமக்கு வர்த்தக ஸ்தலமாக ஏற்படுத்திக் கொண்டது மன்றி அக் காலத்தில் ஐதராபாத் நவாபாகிய "தானீஷா"வுக்கு அமைச்சராகவும், சேனாதிபதியாகவு மிருந்த "அக்கன்னா," "மாதன்னா" என்ற இரண்டு செல்வாக்குடைய பிராமணர்களைத் தந்திரமாக வசப்படுத்திக் கொண்டு அவ் வழியாகவே உள் நாட்டிலும் சிலவிடங்களைத் தமது வசமாக்கிக் கொண்டனர். இவ்விதமாக ஆங்கிலேயர் இந் நாட்டில் பற்பல இடங்களைத் தமது வயப்படுத்திக் கொண்டதெல்லாம் வர்த்தகத்தின் பொருட்டே யன்றி தேசத்தைக் கட்டி யாளவேண்டு மென்ற கருத்தோடல்ல வென்று சொல்லுவது

உண்மை யெனக் கொள்ளலா மெனினும், வர்த்தகஞ் செய்ய வந்தவர்களுக்குக் கோட்டைகளும், படைகளும் எதற்காகவென் றெண்ணும்போதுதான் அவ் வர்த்தகத்தின் அடிப்படையான சூது புலனாகின்றது. அன்றியும் ஆங்கிலேயர் மற்ற நாட்டினரைப் போலச் சாதாரணமாக வந்து வியாபாரம் நடத்தாமல், இந்தியாவில் வந்து வர்த்தகம் நடத்துவதற்காக வென்றே அந் நாட்டிலிருந்த பல வர்த்தகர்களும் ஒன்று சேர்ந்து "கிழக்கு இந்தியக் கம்பெனி" யென்று ஒரு கம்பெனியை யேற்படுத்திக் கொண்டு வந்து வர்த்தகத்திற்கு அடிகோலியதே அவர்களின் சூதான கருத்தை வெளிப்படுத்துகிறதா யிருக்கிறது.

இந் நாட்டுச் சரக்குகளை வாங்கிச் செல்ல வந்த வெள்ளையர், அந் நாட்டுச் சரக்குகளையும் இங்குப் பரவும்படி செய்தனர். ஆங்கிலேயர் செய்த திறமையான சூதை வெல்ல முடியாமல் பிரஞ்சு, ஹாலெண்டு, போர்த்துகீஸ் முதலிய தேசத்தின ரெல்லாம் இந் நாட்டு வர்த்தகத்தைச் சரிவரக் கைப்பற்ற முடியாமல் தோல்வியுற்றனர். வஞ்ச நெஞ்சம் படைத்த ஆங்கிலேயர்கள், இந் நாட்டில் தமது கருத்துச் சிறுகச் சிறுக நிறைவேறி வருவதை யுணர்ந்து ஸ்பெயின் தேசத்தினரால் கண்டு பிடிக்கப்பட்ட அமெரிக்காவுக்கும் செல்லத் தலைப்பட்டனர். அமெரிக்காவைக் கண்டு பிடித்தது முதல் ஸ்பெயின் தேசத்திற்கு ஏராளமான பொன்னும், வெள்ளியும் வந்து குவிவதைக் கண்ட ஆங்கிலேயருக்கு அடக்க முடியாத பேராசை யுண்டாகி விட்டது. அதனால் ஸ்பெயின் தேசத்தார் சென்ற வழியிலேயே தாமும் சென்று வியாபாரம் நடத்துவதாக முடிவு செய்து கொண்டனர்.

ஆனால், ஆங்கிலேயர் அத்லாண்டிக் சமுத்திரத்தைக் கடப்பதாவது, அமெரிக்காவுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளுவதாவது ஸ்பெயின் தேசத்தாருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இதனால் ஆங்கிலேய வர்த்தகர் எவரேனும் துணிந்து அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்வதாகத் தெரிந்தால் ஸ்பெயின் தேசத்தார் உடனே அக் கப்பல்களை மூழ்குவித்து இங்கிலீஷ்காரருக்குப் பெருத்த நஷ்டத்தை யுண்டுபண்ணி வந்தனர். இவ்வாறு பல முறை செய்து



வந்ததினால் ஆங்கிலேயருக்கும், ஸ்பெயின் தேசத்தினருக்கும் பலத்த விரோதம் ஏற்பட்டு விட்டது. இவ்விதமாக ஸ்பெயினர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் விரோதம் ஏற்படுவதற்கு மற்றொரு முக்கியமான காரண மிருந்தது. அதாவது மதத்தின் பேரில் கொண் டிருந்த குருட்டு நம்பிக்கையே யாகும். அந்த விவரத்தைச் சிறிது புகன்றுவிட்டு மேலே செல்லுவோம்.

## மதப் பிளவு

இயேசுநாதர் தோன்றி, தெய்வம் ஒன்றே யெனவும், அதை வழிபடும் மார்க்கத்தையும் உபதேசித்து அதற்கு முன்பிருந்த குருட்டு நம்பிக்கைகளையும், குருட்டு நடத்தைகளையும் கண்டித்து நாட்டிற் சிறிது சீர்திருத்த முண்டாக்கி யிருந்தாராயினும், அச் சீர்திருத்தம் 1500 ஆண்டுகளுக்குப் பிறகு மாறுபடத் தொடங்கி விட்டது. கிறிஸ்தவர்களுக்கு "ரோம்" நகரம் புண்ணிய ஸ்தலமாகவும், அதில் வசித்திருந்த "போப்" என்னும் மத குருவே ஜெகத் குருவாகவும் இருந்தபடியால் மத விஷயத்தில் "போப்" காட்டியதே நல்வழியாக நம்பி, கிறிஸ்தவர்கள் கடவுள் வழிபாடு செய்து வந்தனர். ஆனால் நாளடைவில் "போப்"பினுடைய செல்வாக்குக் குறைந்து "போப்" மத போதகராக இருக்க வேண்டியதில்லை யென்ற விவாதத்தில் சிலர் தலையிட்டு 1521-ம் வருஷ காலத்தில் மறுக்கத் தலைப்பட்டனர். இதனால் "போப்" வேண்டு மென்போர் சிலரும், "போப்" வேண்டா மென்போர் சிலருமாகப் பிரிந்து நிற்கலாயினர். இதில் "போப்"பை அங்கீகரித்தவர்களுக்கு "காத்தலிக்கர்கள்" என்றும், "போப்"பை மறுத்தவர்களுக்கு "ப்ரோடஸ்டாண்டுக" ளென்றும் பெயர்க ளேற்பட்டன. உலகத்தில் முதன் முதல் ப்ரோடஸ்டாண்ட் சமயத்தைக் கைக்கொண்டவர் ஆங்கிலேயர்களே யாவர். கைக்கொண்டது மாத்திர மன்றி அக் கொள்கையை ஐரோப்பிய நாடுகளில் பரவச் செய்வதிலும் இங்கிலாந்தே சிறந்து விளங்கியது. இதே மாதிரி "காத்தலிக்" கொள்கைகளைப் பரவச் செய்வதில் ஸ்பெயின் தேசம் சிறந்து விளங்கியது. சமயம் இரண்டாகப் பிளவுண்ட காரணத்தால், "போப்" வலிமை யிழந்தவராகி, எஞ்சி நின்ற கூட்டமும் தன்னை எங்கு மதி

யாமற் போய்விடுகிறதோ என்று சிந்தித்து, பிரிந்து சென்றவர்களை யெப்படியாவது அடக்கியொடுக்கிவிட வேண்டுமென்ற கருத்துக் கொண்டு தனக் கனுகூலமாயுள்ள காத்தலிக் அரசாங்கத்தைத் தூண்டிவிட்டு "ப்ரோடஸ்டண்ட்"டை நசுக்கிவிட எத்தனித்தார். இதனால் காதலிக்கர் ப்ரோடஸ்டாண்டுகளைக் கண்டால் கொல்லுவதும், ப்ரோடஸ்டாண்டுகள் காதலிக்கர்களைக் கண்டால் வதைப்பதுமா யிருந்தனர். அக் காலத்தில் ஐரோப்பா நாடுகளில் மத சம்பந்தமான யுத்தங்களும், கொலைகளும் ஏற்பட்டுக் கண்டம் முழுவதும் இரத்தக் காடாகச் சில ஆண்டுகள் வரையில் மாறியிருந்தது. மத விஷயத்தில் ஐரோப்பியர்கள் நடந்துகொண்ட கோரமான கொலை பாதகச் செயல்களைப் போல் மற்றெந் நாட்டினரும் நடந்து கொண்டதாகக் கூற முடியாது. காதலிக் மதத்தினனாகிய அரசனுள்ள நாட்டில் "ப்ரோடஸ்டாண்டு" மதத்தினரைவிட அவ் வரசனுக்கு வேட்டையாட வேறு மிருகங்களே யில்லை. அதுபோலவே ப்ரோடஸ்டாண்ட் அரசனுக்கும் காதலிக்கரைவிட வேறு விரோதிகளில்லை.

நாடு இவ்வித மூட வைரத்தில் கட்டுப்பட்டிருக்கும் வரையில் கொலைகளுக்கும், ரத்தக் களறிகளுக்கும் குறைவென்ன? ஆகவே மத விஷயத்தி லுண்டான இந்த மூடப் பிடிவாதந்தான் ஸ்பெயின் இங்கிலாந்து தேசப் பகைக்கு மூலகாரணமா யிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் வர்த்தகப் பேராசை யொன்று வந்து முளைக்கவே அவ்விரு தேசங்களும் யுத்தத்தில் இறங்கும்படி நேர்ந்து விட்டது. ஆனால் ஸ்பெயின் தேசத்தாருக்கு ஏராளமான செல்வமும், அதன் மூலமாகப் பலவித யுத்த சாமக்கிரியைகளும் இருந்தபடியால் முதலில் ஆங்கிலேயர் அவர்களோடு போர் புரியச் சக்தியற்றவர்களாகி அமெரிக்காவுக்குச் செல்லும் காரியத்தை நிறுத்திக் கொண்டு ஸ்பெயினர்களை வெல்லுவதற்கு மார்க்கமென்ன வென்று சில காலம் யோசித்து முடிவில் 1570-ம் வருஷம் முதல் வேகமாக ஓடத்தக்க நீராவிக் கப்பல்களைக் கட்டிக்கொண்டு அத்லாண்டிக் சமுத்திரத்தில் பதுங்கி யிருந்து அமெரிக்காவிலிருந்து பொன், வெள்ளிகளை யேற்றி வரும் ஸ்பெயின் தேசத்துக் கப்பல்களைச்



சமயம் பார்த்துக் குறுக்கிட்டுக் கொள்ளை யடிக்கும் வேலையில் தலையிட்டு ஏராளமான பொருள்களைத் திரட்டிக்கொண்டு ஸ்பெயின் தேசத்தாருக்கு அளவற்ற நஷ்டத்தை யுண்டுபண்ணி வந்தனர்.

## ஆங்கிலேயரின் வெற்றி

இவ்வாறு பல வருஷ காலம் இங்கிலீஷ்காரார் வழிபறிக்கும் வேலையி லீடுபட் டிருந்ததைச் சகிக்க மாட்டாமல் ஸ்பெயின் தேசத்தார் பெரிய பெரிய யுத்தக் கப்பல்களைத் தயார் செய்து கொண்டு 1587-ம் வருஷத்தில் இங்கிலாந்தின் பேரில் படையெடுத்துச் சென்றனர். இவ்விதமான சம்பவம் நேரிடுமென்பதை யோசித்தே ஆங்கிலேயர், தாம் வழிக்கொள்ளையில் தலையிட்டது முதல் ஏராளமான சேனைகளைத் தயாரித்துக் கொண்டு அநேக யுத்தக் கப்பல்களையும் ஏற்படுத்தி இங்கிலாந்து தேசத்தைச் சுற்றிலும் காவலாக அமைத் திருந்தனர். இங்கிலாந்து கடல் மத்தியிலுள்ள சிறிய தேசமாகையினாலும், அதற்கு நிலப்பரப்பு அதிகமில்லாத படியாலும் தனக்கு வரும் அயல் நாட்டு ஆபத்தெல்லாம் கடலைக் கடந்தே வரவேண்டி யிருக்கிறபடியாலும் தரைப் பழக்கத்தைவிட சமுத்திரப் பழக்கமே சிறந்ததெனக் கருதிக் கடல் யாத்திரையிலும், சமுத்திர யுத்தத்திலும் இங்கிலாந்து இணையில்லாத தேர்ச்சி பெற்று விளங்கியது; இப்போதும் விளங்குகிறது. ஆதலால் அவ் விரு தேசங்களுக்கும் ஏற்பட்ட பலத்த யுத்தத்தில் இங்கிலாந்திற்கே வெற்றி யேற்பட்டது. இந்த யுத்த யாத்திரையால் ஸ்பெயின் தேசத்துக் கப்பல்களில் அநேகம் கடலில் மூழ்கின. சில புயற் காற்றி லகப்பட் டழிந்தன. இவ்வாறு இயற்கை யுற்பாதங்களால் ஏற்பட்ட ஸ்பெயின் தேசத்தாரின் நஷ்டங்கள் ஆங்கிலேயரின் வெற்றிக்கு அனுகூலமாயின. ப்ரோடஸ்டாண்டு அரசாங்கங்களை யெல்லாம் அடியோடு நாசமாக்கிவிட வேண்டுமென்று வெகுளி மேற்கொண்டு புறப்பட்ட ஸ்பெயின் தேசத்தாருக்கு அளவற்ற நஷ்ட கஷ்டங்களும் தோல்வியும் ஏற்பட்டு விடவே, பெருஞ் செல்வமும், பெருஞ் சேனையுமுடைய ஸ்பெயினைச் செயித்ததாகிய பெருமை இங்கிலாந்திற்கு ஏற்பட்டது. அது முதல் ஆங்கிலேயருக்கு ஐரோப்பாக் கண்டத்தில் பெரிய கீர்த்தியும் உண்டாகிவிட்

198532
சென்னை-600 008

# தாமஸ் ஆல்வா எடிசன்.

திரு *K. G.* கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

உலகத்தில் அக் காலத்திலும் தற்காலத்திலும் மேதாவிகளாய் விளங்கியவர்கள் ஒரே நாளில் தங்கள் பெருமைகளை யடையவில்லை. அந் நிலைமைகளுக்கு அல்லும் பகலும் ஊண் உறக்க மின்றியும் உழை உழை யென்று சதா உழைத்து வந்தனர். இவர்களில் அநேகர் இயற்கையின் அதிசயங்களின் அந்தரங்கத்தைச் சிறிது சிறிதாக ஆராய்ந்து ஆராய்ந்து தங்கள் உடல் பொருள் ஆவி

---

டது. செல்வமும் சேனையும் வலுத்த ஸ்பெயினை வென்றபடியால் ஆங்கிலேயருக்கு மற்றெந்த அரசாங்கத்தையேனும் வெல்லுவது ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அதன் பிறகு 1600-ம்வருஷம் முதல் டச்சுக்காரரோடும், மற்றும் சில காலம் பிரஞ்சுக்காரரோடும் ஆங்கிலேயர் யுத்தம் புரிந்தனர். எல்லாவற்றிலும் வெற்றியே பெற்றனர். அது முதல் அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் பிரயாணம் செய்வதில் அவர்களுக்குச் சிறிதும் பயமில்லா தொழிந்தது. அதனால் 1600-ம் ஆண்டு முதல் அமெரிக்காவுக்குச் சென்று ஆங்கிலேயர் சுயேச்சையாக வர்த்தகம் நடத்த முற்பட்டனர். அதுவே அமெரிக்காவில் ஆங்கில ராஜ்யம் ஏற்படுவதற்கு மூலகாரணமாயிற்று. ஆனால், அமெரிக்கா ஆஸ்ட்ரேலியா முதலிய விடங்களில் ஆங்கிலேயர் சென்று ராஜ்யங்களைத் தாபித்துக் கொண்டதற்கு அவ் வைரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மதக் கலகங்களும், கொள்ளைகளுங்கூடக் காரணமாகும். அவ் விவரங்களைப் பிறிதொரு சமயம் பகர வெண்ணி இவ் விஷயத்தை இம்மட்டோடு முடிக்கின்றேன்.

---



முதலியவைகளின் செலவால் உலகத்தின் முற்போக்கிற்கு உபயோகமானவைகளைக் கண்டு பிடித்து உதவி வந்திருக்கின்றனர். இம் மேதாவிகள் அநேகமாய் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்து தியாகத்தில் சிறந்து விளங்கி வந்திருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கது. இவ்வித மேதாவிகளிலே தாமஸ் ஆல்வா எடிசன் என்பவரும் ஒருவராவர். அமெரிக்காவில் அநேக அற்புத வேலைகளைக் கண்டுபிடித்துத் தன் தேசத்தின் தற்கால உன்னத பதவிக்கும், பெருமைக்கும், சதா உழைத்து வந்தவர்களில் இவரே மிகச் சிறந்து விளங்குகின்றார். இவருடைய தியாகத்திற்கும், சகோதர வாஞ்சைக்கும், பெருந் தன்மைக்கும், மன உறுதிக்கும் எவரையும் இணைகூற இயலாததா யிருக்கிறது.

எடிசன் தோன்றிய அக் காலத்தில், மனிதர் உதவிக்கு இயந்திரங்கள் ஏற்படவில்லை. மனிதர் கஷ்டப்பட்டுச் சதா வேலைகள் செய்ய வேண்டி யிருந்தது. ஒரு கிராமப் பாடசாலையில் சில வருஷங்களுக்குப் பயின்று விட்டால் அதனை அக் காலத்தில் உயர்தரக் கல்வி யெனக் கருதி வந்தனர். ஓர் வாலிபன் ஒரு வியாபாரக் கடையில் காசுப் பெட்டியி லிருந்து வருவதும், அப்பொழுது புதிதா யுண்டாகும் புகை வண்டிப் பாதை செய்யும் வேலையிலிருப்பதும், பத்திரிகை விற்பதுமே அக் காலத்தில் உயர்ந்த உத்தியோகமெனக் கருதினர். இப்படிப்பட்ட காலத்தில் கேவலம் பத்திரிகை விற்று வந்து, தற்போது உலக நிபுணர்களில் ஓர் இரத்தினமாய் விளங்குபவர் தாமஸ் ஆல்வா எடிசன் என்னும் சாஸ்திர நிபுணராவர்.

## பிறப்பும் வளர்ப்பும்

தாமஸ் ஆல்வா எடிசன், சாமியல் எடிசன் என்பவருக்கும், நான்ஸி எல்லியட் என்ற மாதினுக்கும் 1847ஆம் பிப்ரவரி 11௳ அமெரிக்கா ஒஹியோ ஜில்லாவில் மிலான் (Milan) என்ற ஊரில் உற்பவித்தார். எடிசன் குடும்பத்தார் ஆதியில் ஹாலண்டு தேசத்திலிருந்து அமெரிக்காவுக்கு நியூ ஜெர்ஸி என்ற மாகாணத்தில் சுமார் 1730ல் குடியேறினர். எடிசன் பரம்பரையில் அநேகர், அதிக காலம் ஜீவித்து வந்திருக்கின்றனர். தாமஸ் எடிசன் பாட்டன் 102 வருஷங்கள் வரையும், அவர் தந்தை 104 வருஷங்கள் வரையும் வசித்துவந்திருக்கின்றனர்.

எடிசன் உருவத்திலும் சக்தியிலும் மிகவும் கேவலமா யிருந்தபடியால் வெகு காலம் வரை பாடசாலைக்கு அனுப்பப்படவில்லை. அப்படி யிருந்தபோதிலும் எடிசன் தான் பார்த்த விஷயங்களைச் சிந்திப்பதிலும், ஆராய்வதிலும் அன்புடையவரா யிருந்தார். ஒரு

நாள் ஒரு பெரிய வாத்து, தன் முட்டைகளின் மீது உட்கார்ந்து சில நாட்களுக்குப்பின் குஞ்சுகளைப் பொரித்ததைக் கண்டார். அடுத்த நாள் எடிசன், திடீரென்று காணாமல் போகவே அவர் தாய் தந்தையர் தேடிக் காணாமல் கடைசியாகச் சில கோழி முட்டைகளையும், வாத்து முட்டைகளையும் சேர்த்து வைத்த குழியில் எடிசன் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டனர். என்னே இவர் குஞ்சு பொரிக்கும் நோக்கம்! ஓர் தினம் மற்றொரு பையனுக்கு ஒரு தோல் வாரை இழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தார். மற்றவன் அதை நறுக்கச் சிறு கோடரியால் வெட்டியபோது, எடிசனின் ஓர் விரலின் நுனியும் சேர்ந்து வெட்டுண்டது. மற்றொரு தினம் விளையாட்டுத்தனமாய் வைக்கோல் படப்பில் நெருப்பு வைத்து அதனைச்சாம்பலாக்கி விட்டதால், எடிசனை அவர் தந்தை ஜனங்களுக்கு முன்னிலையில் விட்டுச் சாட்டைகொண்டடித்தார். இப்படியாக, "இளங் கன்று பயமறியா" தென்ற விதமாய் அநேக வேலைகள் செய்து வந்தார். எடிசனோடு கூடப் பிறந்தவர் இருவர். ஒரு சகோதரி டானி என்பவளும், ஒரு சகோதரர் வில்லியம் என்பவருமாவர். எடிசன் கீர்த்தி பெற்ற வகையில் இவர்கள் எவ் விதத்திலும் ஈடுபட்டவர்களாய்த் தெரியவில்லை. எடிசன் பிறந்த ஏழாவது வருஷம் அவர் தந்தை, தன் குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு போய் போர்ட் ஹூரன் என்ற ஊரில் குடியேறித் தானியங்களையும், மரங்களையும் கொண்டு விற்று வியாபாரம் செய்து வந்தார்.

## படிப்பு

புதிதாய்க் குடியேறிய போர்ட் ஹூரன் (Port Huron) என்ற ஊரில் எடிசன் மூன்று மாதங்கள்வரை பாடசாலைக்குப் போய் வந்தார். இங்கே வகுப்பில் எல்லாரையும்விடப் பெரிய பையனாயும், எப்பொழுதும் கடைசிப் பையனாகவுமிருந்து வந்தார். ஆகவே எடிசன் உபாத்தியாயர், வகுப்புப் பரிட்சை செய்பவரிடம் எடிசன் படிப்பில் ஒரு "மலடு" என்று கூறினார். இவ்வாறே, சர் ஐசக் நியூட்டன், நீராவி இயந்திரம் கண்டு பிடித்த ஜேம்ஸ்வாட், திராவக சாஸ்திர நிபுணர் சர் ஹம்பிரி டேவி முதலிய பெரியோர்களும் தங்கள் இள வயதில் கருதப்பட்டனர். எடிசன் அன்னையாரும், தன் 18-வது வயது வரை கல்வி கற்பித்து வந்தபடியால் அப் பாடசாலைகளின் மீது மதிப்பில்லாமல் எடிசனைப் பாடசாலைக் கனுப்பாமல் வீட்டிலேயே கற்பித்து வந்தாள். இதன் பயனால் எடிசன் தன் 12-வது வயதில் சரித்திரம், நாவல் முதலியவைகளை நன்றாய்ப் படித்துணருஞ் சக்தி யடைந்தார். நியூட்டனுடைய "பிரின்சிப்பியா" என்ற சாஸ்திர நூலை நன்குணர்ந்தார். ஆனால் இவர் கணிதத்தில் திறமை யற்றவராகிப் பிற் காலத்தில் தன் சாஸ்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய கணித வேலைகளைத் தன் சிநேகிதர்களைக் கொண்டு முடித்து வந்தார்.



எடிசன் திராவக, விஞ்ஞான சாஸ்திரங்களில், மிகவும் கருத்தைச் செலுத்தினார். ஒரு மனிதனுள்ளே காற்றை அதிகம் உண்டாக்கினால் இலேசாகி மேலே பறக்கக் கூடுமெனக் கருதி, தன் இள வயதில் ஒரு வேலைக்காரப் பையன் மைக்கல்ஓட்ஸ் என்பவனைக் காற்றை உண்டாக்கும் ஓர்வித பவுடரை (Seidlitz Powder) அருந்தச் செய்தார். இதனால் அவன் பறக்காமல் தேகத்தில் நோவு ஏற்பட்டுக் கதறினான். இவ்வுண்மையை உணர்ந்த எடிசன் அன்னையார், தயாராய் வைத்திருந்த பிரம்பால் எடிசனை முழங்காலில் நன்றாய்ப் புடைத்தாள். எடிசன் சாஸ்திரப் புஸ்தகங்கள் அநேகம் வாங்கிக் கவனமாய்ப் படித்து வந்தார். தான் அனுபவமாய் அறிய வேண்டி அநேக திராவக சாஸ்திரத்திற் குரிய சாமான்களைப் பாத்திரங்களில் சேகரித்து வைத்து வந்தார். எடிசனுக்குச் செலவுக்குக் கிடைக்கும் பண மெல்லாம் இவ்வித சாமான்கள் வாங்குவதற்கே உபயோகப்பட்டன. எடிசன் முதலாவதாகத் திராவக சாஸ்திரத்தில் அதிகமாய்க் கவனஞ் செலுத்தி வந்தபோதிலும் பிற்பாடு விஞ்ஞான சாஸ்திரத்திலேயே கியாதி யடைந்தார். ஆனால் ரஸாயன சாஸ்திரமும் இவருக்குப் பிற் காலத்தின் ஆராய்ச்சிகளில் உதவி செய்தது.

## புகை வண்டியில் பத்திரிகை விற்பனை

எடிசன், ரஸாயன சாஸ்திரத்திற் குரியவைகளை வாங்கும் பொருட்டு போர்ட் ஹூரனுக்கும், டிட்ராய்ட் என்ற நகருக்கும் மத்தியி லோடும் புகை வண்டித் தொடரில் பத்திரிகை விற்கும் பையனாயமர்ந்தார். இதே சமயத்தில் காய்கறிகளும் விற்று வந்தார். ஆனால் அப்பொழுது குடிகளுக்குள் கலகங்கள் ஏற்பட்டதால் பத்திரிகை வியாபாரத்தையே அதிகமாய்க் கைக்கொண்டார். புகை வண்டித் தொடரில் ஓர் மூலையில் ஒரு சிறிய அச்சுக்கூட மமைத்து "வீக்லி ஹெரால்ட்" என்ற நாமத்துடன் பத்திரிகை யெழுதி வெளியிட்டார். சந்தாதார்கள் அதிகரித்தனர். இதனோடு சும்மா யிராமல் வண்டியில் மற்றொரு பாகத்தில் ரஸாயனத் தொழிற்சாலை யொன்றமைத்து ஓய்வு நேரத்தில் ஆராய்ச்சிகள் செய்து வந்தார். துர் அதிஷ்டவசமாய் எடிசன் ரஸாயனத் தொழிற்சாலையில் ஓர் தினம் எரியும் கந்தகத்துண்டு (A Stiets of Phosphorus) மேலே யிருந்து புகை வண்டியினுள் விழுந்த வுடனே நெருப்புப் பற்றி எரியத் தொடங்கிற்று. உடனே சாமான் அதிகாரி, தண்ணீர் கொண்டு நெருப்பைப் போக்கி விட்டதல்லாமல் நமது எடிசன் காதைச் சேர்த்து (பாவி மகன்) ஓங்கி ஒரு அடி கொடுத்ததால் அன்றிருந்து இன்று வரை எடிசனுக்கு ஒரு காது செவிடு பட்டுவிட்டது. இதனால் எடிசன் தன் ஞாபகத்தை வேறு பாதைகளில் செலுத்தாமல் தன் ஆராய்ச்சியிலேயே செலுத்தி புதியவைகளைச் சீக்கிரம் கண்டு பிடிப்பதற்கு மிகவும் சாதகமேற்பட்டு

தாக எடிசனே பிற் காலத்தில் கூறியிருக்கிறார். இச் சம்பவத்திற்குப் பிறகு, எடிசனுடைய சாமான்கள் யாவும் வண்டியிலிருந்து வெளியே எடுத்தெறியப்பட்டன. தாய் தந்தையர் இதுவும் எடிசனின் புத்தியீனத்தால் நடந்ததென மனம் வருந்தினர்.

## ஆராய்ச்சிகள்

### கஷ்ட காலமும் மின் தபாலும் (Telegrophy)

1862ம்௵ ஆகஸ்ட்௴த்தில் ஓர் காலையில் மவுண்ட கிலெமென்ஸ் என்ற (எடிசன் சாமான்கள் எறியப்பட்ட) ஸ்டேஷனில் நின்று புகை வண்டிகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, அந்த ஸ்டேஷன் ஏஜண்டின் குழந்தை இருப்புப் பாதையில் ஆடிக்கொண்டிருந்தது. அத் தருணம் ஓர் புகை வண்டி வெகு வேகமாய்க் குழந்தையை நோக்கி வருவதைக் கண்ட எடிசன், குல்லாவை விசிறி எறிந்து விட்டுக் குதித்தோடி அப் பிள்ளையைத் தூக்கி அப்புறத்தே சென்று காப்பாற்றினார். இதைக் கண்ட மெக்கேன்ஜி என்ற அந்த ஏஜண்ட் எடிசன் செய்த பேருதவிக்கு அவருக்கு என்ன தேவையானாலும் தான் செய்வதாக வாக்களித்தார். அதனால் மற்றவர்களைப் போல் எடிசன் பணம் காசு கேட்கவில்லையாம். ஆனால் தமக்கு மின் தபால் ("டெலெகிராப்") கற்றுக் கொடுக்கும்படி கேட்க அப்படியே மெக்கென்ஜி, எடிசனுக்கு அதனை நான்கு மாதங்களுக்குள் நன்றாய்க் கற்றுக் கொடுத்துவிட்டார்.

கொஞ்ச காலத்திற்குள் கானடா மாகாணத்தில் ஸ்ட்ராட் போர்ட் ஸ்டேஷனில் இராத்திரி, தந்தி கொடுக்கும் வேலையிலமர்ந்தார். இச் சமயத்தில் எடிசனுக்குத் தந்திச் சமாசாரங்களைத் தெளிவாய்க் கேட்க தன் காதின் செவிடு தடையாயிருந்தது. எனினும் தன் சாமர்த்தியத்தால் வேலையைச் சரிவர நடத்தி வந்தார். சில சமயம் புகை வண்டிகள் வருமுன் நித்திரை செய்து விடுவது வழக்கம். அப்படித் தூங்கும் போது எங்ஙனம் வண்டி, தானறியாமல் போய்விடுமோவென எண்ணி வண்டி கடக்கும் போது தெரிவிக்கும் ஒரு மணி யடிக்கும் கடிகாரத்தைச் செய்து கொண்டார். இது விஷயத்தை யறிந்த மேலதிகாரிகள் எடிசனை அரை மணிக்கொருதரம் தான் ஆஜரா யிருப்பதாகத் தந்தி கூறுமாறு ஆக்ஞாபித்தனர். இதற்காக எடிசன், தான் செய்த கடிகாரத்தையும் தந்திச் சாவியையும் இணைத்துத் தானே அரைமணிக்கொருதரம் தந்தி யடிக்கும்படி தன் அறிவின் நுட்பத்தால் செய்து, வழக்கம் போல் நித்திரை செய்து வந்தார். துரதிஷ்டவசமாய் மேலதிகாரி திடீரென்று எடிசனோடு தந்தி மூலமாய்ப் பேசியபோது சுமார் 15 நிமிஷம் வரை பதிலே கிடைக்காததால் அடுத்த ஸ்டேஷனிலிருந்து ஒரு ஆளை அனுப்பி, அவன் வந்து பார்க்கும் போது எடிசன் சௌக்கியமாய் நித்திரை செய்துகொண்டிருந்தார். இதனால் தன் வேலையை



இழந்து பிற் காலத்தில் எந்த மனிதனையும்விட உலகத்தின் சொத்தைத் தன் ஆராய்ச்சிகளால் பதின்மடங்கு அதிகரிக்கச்செய்தவரும், அக் காலத்தில் சாஸ்திர ஆராய்ச்சிகளில் இணைகூற முடியாதவராயுமான எடிசன், தன் 17-வது வயதில் ஒருவருடைய உதவியுமின்றி, யாதொரு நற்சாட்சிப் பத்திரமின்றி வேலை யொன்றுங் கிடையாமலும் அலைந்து திரிந்தார்!

கொஞ்ச காலத்திற்குப் பிறகு எடிசன் பாஸ்டன் நகரில் வேலை செய்யும்போது மின்சாரத்தில் நிபுணரான பாரடே (Faraday) என்பவரின் புஸ்தகங்களை அதிகமாய் ஆராய்ந்து வந்தார். எலிகளையும் மற்றச் சப்தம் செய்து தொந்தரவு செய்யும் ஜந்துக்களையும் மின்சாரப் பொருத்தங்களால் நாசமாக்கி வந்தார். 1869௵ ஜூன்௴ தானாகவே ஓட்டுகளை எண்ணும் இயந்திர மொன்றும் இன்னும் பல இயந்திரங்களையும் செய்து முடித்தார். இதனால் தனக்கு மிகுந்த அநுகூலமேற்படாமல் பாஸ்டன் நகரிலேயே தன் கருவிகளையும் புத்தகங்களையும் கிடத்திவிட்டு நியூயார்க் நகரை நோக்கி, படகுக்கு மாத்திர மிருந்த பணத்தையெடுத்துக் கொண்டு தெய்வமே துணையெனக் கருதித் தனியாகப் புறப்பட்டார். ஷை நகரடைந்ததும் கையிலரைக்காசுமின்றி ஆகாரத்திற்கு வழியில்லாமல் சுற்றித் திரிந்தாரென்றால் அம்மகானின் பரிதாபகர நிலைமையை எவ்வாறெடுத்துரைப்பது? அப்படி அநாதையாகச் சுற்றித் திரிந்தபோது ஒரு தேயிலை பரிசோதிப்பவனைக் கண்டு அவனிடம் கொஞ்சம் தேயிலை கெஞ்சிக் கேட்டு அதன் கஷாயத்தை முதல் ஆதாரமாக அருந்தினராம் எடிசன் பெரியார்! தந்தி வேலைகளில் அறிமுகமான ஒரு சிநேகிதனைக் கண்டார். ஆனால் இச் சிநேகிதனும் வேலை யில்லாக் குறைவால் அவனிட மிருந்த ஒரே ஒரு டாலரை மட்டும் எடிசனுக் குதவினான். அதைப் பெற்று எடிசன் திருப்தியாய் உணவு உண்டார்.

ஒரு தந்தி ஆபீஸில் (Western Union) வேலை கேட்டதில் கிடையாமல் எடிசன் பெயரைக் குறித்துக் கொண்டு அங்கோரிடத்தில் இரவில் படுத்துக்கொள்ளும்படி உத்தரவிட்டனர். அதனால் எடிசனுக்குப் படுக்க மாத்திரம் இடமொன்று அகப்பட்டது. அப்படி இருக்கும்போது அந்த ஆபீஸ் தந்தி இயந்திரம் திடீரென்று கெட்டுப் போய் விட்டது. எல்லோரும் பரபரப்புடன் ஒன்றும் புலனாகாமல் அங்குமிங்கும் ஓடித் திரிந்தனர். அதற்குரியவர் டாக்டர் லாஸ் என்பவரும் வந்து சேர்ந்தார். இச் சமயம் நமது வேலை யில்லா எடிசன், மெதுவாய்ச் சென்று இயந்திரத்தை வெகு நுட்பமாய்க் கவனித்ததில் ஓர் சிறிய ஸ்பிரிங் கம்பி முறிந்து விட்டதைக் கண்டு அதை மறுபடியும் சேர்த்து வைத்தார். சுமார் 2 மணி நேரத்திற்குள் சகல வேலைகளும் எப்பொழுதும் போல் நடந்தன. டாக்டர் லாஸ், எடிசனை மெச்சி அந்த இயந்திர சாலைக்கு மானேஜராக நியமித்தார். அதன்

பின் எடிசன், அவ் வியந்திர சாலையை மென்மேலும் தன் ஆராய்ச்சியைக் கொண்டு புதிதாக்கி நடத்தி வந்தார். பிறகு அவ் வேலையை விட்டு போப், ஆஸ்லி என்பவர்களோடு சேர்ந்து ஓர் கம்பெனி திறந்து பண லேவாதேவிக் கணக்குகளைக் குறிப்பிடும் தந்தி முதலிய இயந்திரங்களைச் செய்து வந்தார். தன் புதிய இயந்திரத்தை லெப்பர்ட்ஸ் (Lefferts) என்பவரிடத்தில் 40,000 டாலருக்குக் கிரயமாக விற்றார். இதை முதல் முதலாக ஓர் பாங்கியில் தன் பேரால் வட்டிக்குப் போட்டு வைத்தார். நியூயார்க் நகருக்கு, வேலையின்றியும் சாப்பிடக் கையில் காசில்லாமலும் வந்து சேர்ந்த ஓர் 'ஏழை' எடிசன், கொஞ்சக் காலத்திற்குள் தன் ஆராய்ச்சியின் வல்லமையை உலகத்திற்குக் காட்டி அதனால் திரவியந் திரட்டி அதை நிதிச் சாலையில் கொட்டி தனவந்தராகும்படி செய்தது, எளிதில் கூடாததும் எதிர் பாராததுமான ஓர் அற்புதச் செய்கையல்லவா?

நியூ ஆர்க் (New york) நகரில் சொந்தமாக எடிசன் இரண்டு கம்பெனிகளைத் திறந்து சுமார் 45 புதிய (தந்தி [illegible]ந்தமாய்) இயந்திரங்களைச் செய்து முடித்தார். நியூ யார்க்கி லி[illegible]த பெரிய தந்திக் கம்பெனி யொன்று எடிசனின் உதவியை நாடிற்று. இக் கம்பெனியிலிருந்து, வாஷிங்டனுக்கும் நியூயார்க் நகருக்கும் தந்திப் போக்குவரத்துண்டு. எடிசன் அநாவசியமா யிருந்த கம்பிகளை நீக்கி, புதுப்பித்து ஒரு நிமிஷத்திற்கு 1000 வார்த்தைகளையும், நியூயார்க் பிலெடெல்பியா நகர்களுக்கு 3500 வார்த்தைகளையும் பேசத்தக்க தந்தி இயந்திரங்களைச் செய்து ஸ்தாபித்தார். இரண்டு சமாச்சாரங்களை ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எதிர்முகமாய் அனுப்பக்கூடியதா யிருந்தது. எடிசன் இரண்டு சங்கதிகளை ஒரே கம்பியில் ஒரே முகமாய்ப் போகும்படி ஆராய்ந்து முடித்தார். பிறகு மின்சாரத்தைக் கம்பிகளில் பலவிதமாய்ப் பிரிந்தோடச் செய்து ஒரே கம்பியில் ஒரே சமயத்தில் நான்கு சமாச்சாரங்களைப் பெறும்படியாகவும் புதுப்பித்தார். ஒரே கம்பியில் நான்கு சங்கதிகளை ஓடச் செய்ததால் அமெரிக்காவில் 1910-ம்வருஷ வரை சுமார் 20,000,000 டாலர்கள் காப்பாற்றப்பட்டனவாம்.

## தூரப் பேச்சு (டெல்லிபோன்)

எடிசன், நியூ ஆர்க் (New york) நகரில் மிஸ் மேரி. G. ஸ்டில்வெல் என்ற மாதை மணந்து கொண்டு 1876ல் நியூயார்க் நகரிலிருந்து 24 மைல் தூரத்திலுள்ள மென்லோபார்க் (Menlopark) என்ற இடத்தில் போய் குடியேறினர்.

கிரகாம்பெல் என்பவர் அமெரிக்காவில் 'டெல்லிபோன்' கண்டு பிடித்து நடத்தி வந்தார். இவருடைய இயந்திரத்தில் ஒரு ஸ்டீல்



எடிசன் கண்டுபிடித்த முதல் கிராமபோன்.



தகடுண்டு. அதில் வாய் வைத்துப் பேசினால், அந்தத் தகடு தகுந்த அசைவு கொடுத்து அதற்கடுத்துள்ள காந்தச் சுருளில் தாக்கவும் அந்த அசைவு, கம்பிகளின்வழி யோடி மற்றோரிடத்தில் செய்தி தெரிவித்தது. ஆனால் இந்த டெல்லிபோனில் சப்தம் குறைவாகி வெகு தூரங்களுக்குச் சங்கதி தெரிவிக்க முடியாமற் போய்விட்டது. இவ்வித டெல்லிபோனைச் சீர்திருத்தம் செய்ய வேண்டு மென்று ஓர் கம்பெனியார் எடிசனைக் கேட்டுக்கொண்டார். எடிசன், சுத்தக் கரித் (Carbon) தகடை உபயோகித்தார். இந்தத் தகடையும் "தூண்டும் ஓர் மின்சாரச் சுருளை" (Induction Coil) யும் இணைத்து மின்சாரம் ஓடிக்கொண்டிருக்கச் செய்து, இணைத்திருக்கும் சுருளுக்கருகில் மற்றொரு (Secondary) சுருளை அமைத்து டெல்லிபோன் கம்பியோடு சேர்த்து வைத்து, இப்பொழுது சுத்தக் கரித் தகட்டில் பேசினால் அவ் வசைவுக்கொப்ப "செக்கண்டரி" சுருளில் தூண்டப்படும் மின்சாரமும் அசைந்தோடுகிறது. இதனால் சப்தம் அதிகரித்து வெகு தூரம் வரை சங்கதிகளைப் பேச முடிந்தது. எ டி ச ன் டெல்லிபோன் கம்பெனிகள், லண்டன் நகரிலும் அமைக்கப்பட் டிருந்தன. ஆங்கிலக் கவிராயர் பெர்னார்ட்ஷா என்பவரும் தன் 23-வது வயதில் (1879) எடிசன் கம்பெனியில் வேலைபார்த்து வந்திருக்கிறார். எடிசன், இதே சமயத்தில் வெகு சொற்பமான உஷ்ண அளவைக் காட்டக்கூடிய ஆயுதமொன்றை (Tasimeter) யும் செய்து முடித்தார்.

## பேசுங் கருவி (*Gramophone*)

ஒரு நாள் எடிசன், டெல்லிபோனி லுள்ள மெல்லிய தகட்டில் (Diaphragm) பேசும் போது அத் தகட்டில் ஒட்டியிருந்த ஓர் ஊசி, தகட்டின் பலமான அசைவுகளால் எறியப்பட்டு எடிசன் விரலில் பாய்ந்து விட்டது. இதை எடிசன் கண்டார்; யோசனை கொண்டார். அப்படிப்பட்ட தகட்டில் ஓர் ஊசியை உறுதியாக அமைத்துப் பேசினால் அத் தகட்டின் அசைவுக்குத் தகுந்தவாறு அந்த ஊசியும் அசையும். அப்படிப் பலமாய் அசையும் ஊசியை, ஓர் மிருதுவான பலமான தகட்டில் படும்படி பொருத்தினால் அத் தகட்டில் ஊசியின் ஆட்டத்திற்குத் தகுந்தவாறு மேடும் பள்ளமு முண்டாகும். இப்படிப்பட்ட கோடுகளில் முன் மாதிரியே ஒரு தகடோடு பொருத்திய ஊசியை மெதுவாகச் சுழன்றோடச் செய்தால் அவ் வூசி ஆட்டமுற்று முன் பேசிய வார்த்தைகளைத் தகட்டின் ஆட்டத்தால் பேசுவிக்கு மென மனதில் கருதி எடிசன் வேலை செய்ய ஆரம்பித்தார். வட்டமான நீண்டதோர் கட்டையைக் கைகொண்டு சுற்றும்படி அமைத்து அதைச் சுற்றி மெல்லிய தகரத் தகட்டை அடித்து வைத்தார். அப்படி யமைத்த கட்டையின் இரு புறங்களிலும் முன் கூறிய விதமாக மத்தியில் ஊசியை யுடைய அசையுந் தகடுகளைச் சிறிய குழாய்களை யுடை


யனவாக அமைத்தார். முதலாவது ஒரு ஊசியைக் கட்டையாலுள்ள தகரத் தகட்டில் படும்படி வைத்து குழாயில் வாய் வைத்து "Mary had a little lamb" என்று பாடி அதே சமயத்தில் தகரத் தகட்டையுடைய கட்டையைச் சுற்றினார். தகரத் தகட்டில் கோடுகள் ஏற்பட்டன. அப்படி யுண்டான கோடுகளில் மறுபுற மமைத்த ஊசியை வைத்துக் கட்டையை மெதுவாகச் சுற்றியவுடன், "Mary had a little lamb" என்று சப்தமுண்டாயிற்று. இப்படி யுண்டாகவே எடிசன் உள்பட யாவரும் பிரமித்து ஆச்சரியமுற்றனர்.

இதைக் கேள்வியுற்ற ஜனங்கள் திரள் திரளாய் எடிசனிருக்கும் இடத்திற்கு ஓடி வந்தனர். ஜனங்களைக் கொண்டுபோக, தனிப் புகை வண்டிகளும் எடிசன் இடத்திற்கு ஓடின. அநேகர் எடிசனை வரவழைத்து அவருடைய 'போனகிராப்' என்ற பேசுங் கருவியை விளக்கிக் காட்டும்படி கேட்டுக் கொண்டனர். பணம் சேகரித்துக் கொண்டு, பேசுங் கருவி செய்யும் கம்பெனி யொன்று திறந்தார். தகரத் தகட்டிற்குப் பதிலாய் அரக்குத் தகட்டையும், அசைவுக்குத் தகுந்தவாறு தகட்டில் மேடுபள்ளங்கள் அதிக ஆழமாய்த் தோண்ட "சப்பயர்" (Sapphire) என்ற உறுதியான கல்லையுடையதாகவும் சீர்திருத்தினார். அதற்குப் பிறகு வட்டமான அரக்குத் தகடுகளில் கோடுகள் அமையும்படி செய்து அநேக சீர்திருத்தங்களுடன் இப்பொழுது நாம் காணும் மாதிரியாகப் பேசுங் கருவிகள் செய்யப்பட்டன.

### மின்சார விளக்கு

19-ம் ஆண்டின் துவக்கத்தில் சர் ஹம்பிரே டேவி, இங்கிலாந்தில் மின்சாரம் உண்டாகும் 2000 பாத்திரங்களைக் கொண்டு இரண்டு சுத்தக் கரிக் கழிகளைச் (Carbon rods) சிறிது தூரத்தில் அமைத்து மின்சாரத்தைச் செலுத்திய வுடன் அக் கழிகளின் நுனிகள் எரிந்து பிரகாசம் கொடுத்தன. 1831ல் பாரடே என்பவர் மின்சாரத்திற்காகக் காந்த இயந்திரமொன் றமைத்துக் கொண்டார். 1841-60-ம் வருஷங்களில் அநேகர் ஒரே ஒரு மின்சார விளக்கு எரியும்படி செய்தனர். ஆனால் அவைகளுள் மிகுந்த பிரகாசமில்லா திருந்தன. எடிசன் அப்படி ஒரு விளக்குக்காகக் கிரகிக்கும் மின்சாரத்தைக் கொண்டு மிகவும் பிரகாசத்தோடு அநேக விளக்குகள் எரியும்படி செய்தார். 1879ஆம் அக்டோபர்மீ 21உ சுத்தக் கரிக்கம்பிக ளமைத்த (Carbon filaments) மின்சார விளக்குகளை நூற்றுக் கணக்காய்த் தொங்கவிட் டிருந்தார். சுமார் 13 மாதங்களுக்குள் 40,000 டாலர்கள் செலவு செய்தார். 40, 50 பேர்கள் வேலை பார்த்து வந்தனர். 1887-1919-ம் வருஷங்களில் காரனேல் கலாசாலையில் விஞ்ஞான சாஸ்திரத் தலைமை ஆசிரியர் டாக்டர் எட்வார்ட் நிக்கலஸ் என்பவரும் அப்பொழுது எடிசன் கீழ்





விளக்குகளுக்கு மின்சாரம் சேமித்துக் கொடுக்கக் கண்டு பிடித்த முதல் இயந்திரம்.

வேலை பார்த்து வந்தார். மின்சார விளக்குகளுக்கு மூங்கில் நார்களாற் செய்த சுத்தக் கரிக் கம்பிகள் மிகவும் பிரகாசம் கொடுப்பதை யறிந்த எடிசன், மூங்கில்களுக்காக சீனு ஜப்பான் தேசங்களுக்கு ஆளனுப்பிப் பெற்று வந்தார். எடிசனுக்காக மூங்கில் தேடிவர ஜேம்ஸ் ரிக்கால்டன் என்பவர் இங்கிலாந்து, சூயஸ் வழியாக இந்தியா, பர்மா தேசங்களையும் சுற்றிப் பார்த்துச் சென்றிருக்கிறார்.

எடிசன் தன் விளக்குகளை எரிக்க அமெரிக்காவில் முதலாவதாகப் பெரியதோர் மின்சாரம் கொடுக்கும் இயந்திரம்-டைனமோ ஒன்றை 1882ௐ செப்டம்பர்மீ 4ௗ செய்து முடித்துப் பூமிக்குள் கம்பிகள் அமைத்து ஊர்களில் மின்சார விளக்குகளை எரியவைத்தார். 1922ௐ எடிசன் இயந்திரத்தால் பலவிதக் கம்பெனிகளால் நியூயார்க் நகரில் 375,475,000 விளக்குகள் எரிந்தன.

1884-ம் ஆண்டில் எடிசன் தன் ஆசை மனைவியை யிழந்தார். 1886ல் மிஸ். மினு மில்லர் என்ற மாதை மணந்து கொண்டார். 1887ல் மென்லோபார்க்கை விட்டு நியூ ஜெர்ஸி மாகாணத்தி லுள்ள வெஸ்ட ஆரஞ் என்ற இடத்திற்குக் குடியேறினர்.

## படக்காட்சி இயந்திரம்

விளையாட்டுப் படக் காட்சியைத் தொடங்கியவர் பிரான்ஸ் தேசத்து மாரே (E. J. Marey) என்பவர். இரண்டாவதாக அமெரிக்கா மைபிரிட்ஜ் (Muybridge) என்பவர். இவர்கள் சாதாரணமாக ஓர் மிருகத்தின் அசைவுகளைப் படக் காட்சியில் காட்ட அநேக புகைப் படமெடுக்கும் கருவிகளை அம் மிருகத்தின் வழியின் ஓர் புறத்தில் வரிசையாக அமைத்து அவைகளின் மூடிகளை ஒவ்வொரு நூல்களால் இணைத்து மிருகத்தின் வழியின் குறுக்காய் மறு பக்கத்தில் கட்டிவிட்டனர். மிருகம் சென்றபோது குறுக்கா யிருந்த நூல்கள் அறுபட்டன. அப்பொழுது ஒவ்வொரு புகைப் படக்கருவியும் திறக்கப்பட்டு அந்தந்தச் சமயத்திற்குரிய உருவங்களைக் கண்ணாடிகளில் படமெடுத்தன. அப் படக் கண்ணாடிகளை வரிசையாக வட்டமா யமைத்து பிரகாசமான விளக்கை (படங்களுக் கருகில்) ஒரு பக்கத்திலும், ஓர் வெள்ளைத் துணியைக் கொஞ்சம் தூரமாக மறு பக்கத்திலும் தொங்கவிட்டுப் படங்களைச் சுற்றி மிருகத்தின் அசைவுகளைப் படரூபமாகக் காட்டினர். இம்மாதிரி காட்டுவதில் ஓர் மிருகம் கால் கைகளை அசைத்தனவே யன்றி அவ் விடத்தை விட்டு நகர்வதாய்த் தோன்ற வில்லை. இத் தருணத்தில் எடிசன் உள் நுழைந்தார். புதிதாகத் தற்காலப் படக் காட்சியை 1889-ம் ஆண்டில் கண்டு பிடித்து உலகத்திற் குதவினர். எடிசன் அநேக புகைப் படக் கருவிகளை உபயோகப்படுத்தாமல்

ஒரே ஒரு கருவியை உபயோகப்படுத்தினார். ஒவ்வொரு புகைப் படமாக வெவ்வேறாய் எடாமல் கண்ணாடியைப் போலவும், உறுதியாயும், இலேசாக வளையக்கூடியதாயுள்ள ஓர்வகை நீண்ட தகட்டை (Celluloid film)ச் சுருளாக்கிப் புகைப் படக் கருவியின் மேலே வைத்துச் சுருளின் ஓர் நுனியை புகைப் படக் கருவியின் குறுக்காய்க் கீழே சுற்றிக் கொள்ளும்படியாக அமைத்துப் படமெடுக்கும் போது கீழ்ப் பாகத்தை மெதுவாகச் சுற்றிக் காட்சியை ஒவ்வொரு பாகமாய் அச் சுருளில் படமெடுத்தார். ஒவ்வொரு படமும் சுமார் 1½ அங்குலச் சதுரமா யிருந்தது. ஒரு மனிதன் கையைத் தூக்கிய காட்சியின் படச் சுருளை நீட்டிப் பார்த்தால் அச் சுருளில் முதல் படம் அம் மனிதன் சாதாரணமாய் நிற்கும் படமா யிருக்கும். கடைசிப் படம் மனிதன் கைதூக்கி நிற்கும் படமா யிருக்கும். இவைகளுக்கு மத்தியில் சுமார் 50, 60 படங்களிருக்கும். இவைகள் ஒவ்வொன்றும் அம் மனிதன் கைதூக்கிய ஒவ்வொரு அசைவின் படமா யிருந்து கடைசி கைதூக்கி விட்ட படத்துடன் சேர்ந்துகொள்ளும். இப்படிப் பட்ட சுருளை, முன் மாதிரியாகச் சுற்றினால் ஓர் மனிதன் உடனே கைதூக்கினதுபோலக் காணும். இப்படியே மற்றக் காட்சிகளும் படமெடுத்துக் காட்டப் படுகின்றன.

இப்படியாக எடிசன், 1877ல் கேட்பதற்குக் "கிராமபோனையும்," 1889ல் பார்ப்பதற்குப் படக் காட்சியையும் கண்டு பிடித்தார். 1912-ம் வருஷத்தில் இரண்டையும் ஒன்று சேர்த்துப் பேசும் படக் காட்சியைக் கண்டு பிடித்தார். படத்தில் நடிப்பவர்கள் பேசிய கிராமபோன் பிளேட்டின் சப்தத்தை மின்சாரத்தால் அதிகரித்துப் படச் சுருள் சுழலும்போது, பிளேட்டையும் ஓடுவித்துக் காட்சியின் திரைக்குப் பின் மின்சார சப்தம் அதிகரிக்கும் கருவியை அமைத்துப் பேசும் படக் காட்சியை உண்டாக்கினார். தற்போது பேசும் படக் காட்சி எங்கும் பரவி வருகிறது. அதைப் பற்றி விரிவாய் எழுத இவண் இடமில்லை.

1880ல் எடிசன், லாங் என்ற தீவில் (Long Island) காந்தக் கட்டிகள் சுரங்கத்தில் வெட்டி யெடுத்து 2,000,000 டாலரை முதலாகக் கொண்டு வியாபாரமும் 'சிமண்ட்' மண் (Cement) வியாபாரமும் நடத்தினார். 1880–82-ம் வருஷங்களில், சிறிய புகை வண்டித் தொடரை, மின்சார சக்தியால் ஓடும்படி செய்து காட்டினார். இரண்டு இயந்திர வண்டிகள் செய்யப்பட்டன. முதலாவது சுமார் 3 மைல் தூரம் ஓடிற்று. பிறகு 1883ல் ஓர் கம்பெனி யுண்டாகி மின்சார புகை வண்டி விர்த்தியைக் கருதி வந்தது.

## அரசாங்கத் தொண்டு

எடிசனுடைய அரிய பெரிய வேலைகளைக் கண்டு அமெரிக்காவின் கடற் படைக் காரியதரிசி, 1915-ம் ௵ ஜூலை ௴ 7௳ எடிசனைக் கடற் படையைச் சீர்திருத்தப் புதிய ஆராய்ச்சிக் கமிட்டிக்குத் தலைவரா யிருந்து ஒத்தாசை செய்யும்படி வேண்டி எழுதிய கடிதத்தில் பின் வருமாறு கண்டிருக்கிறது. "............நாங்கள் யோசித்திருக்கும் அரிய வேலைக்குப், புதிய ஆராய்ச்சிகளில் நிபுணரென உலகமறிந்த தங்களைப்போலொத்தவரின் ஒத்தாசையைப் பெரிதும் நாடி நிற்கிறோம். தாங்கள் எல்லா மனிதரையும்விட உயர்தரமானவராயும், கனவிற் கண்டதையும் செய்து முடிக்கும் வல்லமையும், அவ் வேலைகளை நுட்பமாய்ச் செய்து முடிக்கும் அதிசயமான புத்திக் கூர்மையும் வாய்ந்தவரென்று நாங்கள் யாவரும் அறிவோம்..........." அதே வருஷம் அக்டோபர் ௴ 7௳ "அமெரிக்க ஐக்கிய மாகாணக் கடற் படை ஆலோசனைச் சங்க"த்திற்கு முதல் அக்ராசனாதிபதியானார்.

இச் சங்கத்தோடு ஒத்துழைக்க ஜனங்களைத் தூண்டுவதற்கு, நியூயார்க் நகரில் 1916-ம் ௵ மே ௴ 13௳ பல காட்சிகளுடன் சங்கக் கூட்டத்தோடு எடிசன் ஊர்கோலம் வந்தார். எடிசனுயிரைப் போக்கப் போவதாய்க் குரோதத்துடன் பலர், எடிசனுக்குக் கடிதங்கள் எழுதியனுப்பி யிருந்தும் அஞ்சா நெஞ்சத்துடன் அந்தரங்கப் போலீஸ் பக்கத்துணை கொண்டு ஊர்கோலத்தை வெகு ஆடம்பரமாக முடித்தார். அன்று அவரைத் தெருக்களில் கைகொட்டிப் போற்றாதவரில்லை யெனக் கூறப்படுகிறது. 1917-ம் ௵ ஜனவரி ௴ த்தி லிருந்து எடிசன், கடற் படைச் சீர்திருத்தத்திற்கு 39 அற்புதமான புதிய வேலைகளைச் செய்து உதவினார். இதனால் அமெரிக்கா தேசம், என்றும் எடிசனுக்கு நன்றியறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

எடிசனுடைய ஆராய்ச்சியின் அபாரத்தைக் கேட்டுத் திடுக்கிடாதவரில்லை. இவர் 1869-ம் ௵ ஜூன் ௴ 1௳ யிலிருந்து 1910-ம் ௵ வரை 1328 புதிய ஆராய்ச்சிகள் செய்து பதிவு செய்திருக்கிறார். அதாவது சராசரி 11 நாளைகளுக்கு ஒரு ஆராய்ச்சி வீதம் வேலை செய்திருக்கிறா ரென்றால் எடிசனின் ஆராய்ச்சியின் வல்லமையை எவ்வாறெடுத்துரைப்பது. 1910-ம் ௵ த்தி லிருந்து 1924 வரை எடிசன் எத்தனையோ ஆராய்ச்சிகள் செய்து முடித்திருக்கிறார். ஆகவே எடிசனின் புத்திக் கூர்மை, மனோ வல்லமை, சதா உழை உழை யென்று உழைக்கும் உழைப்பு முதலியவைகளுக்கு யாரை இணைக் கூறுவது!

## சன்மானங்கள்

எடிசன் ஒரு ஆங்கிலேயரா யிருந்தால் இவருடைய உழைப்புக்கு சர் ஐசக் நியூட்டனைப் போல் 'சர்' என்ற பட்டம் பெற்றுச் சர் தாமஸ் ஆல்வா எடிசன் என விளங்கி யிருப்பார். ஆனால் இவர் அமெரிக்கா தேசத்தவரால் அவ்வித பட்டம் பெறவில்லை. ஏனெனில் அமெரிக்காவில் கல்விப் பட்டங்கள் தவிர மற்றப் பட்டங்களை எப் பதவியிலுள்ளவருக்கும் அளிக்கப்படுவதில்லை.

எடிசன் மின்சார விளக்குகளை ஆராய்ந்துகொண் டிருக்கும் போது 1878ல் யூனியன் கலாசாலை, கவுரவப் பட்டமாக பிஎச். டி. (Ph. D.) என்ற பட்டத்தை எடிசனுக்கு அளித்தது. 1889ல் எடிசன் பிரான்ஸ் தேசத்திற்குப் போயிருந்த போது ஓர் பெரும் பட்டத்தை (Commander of the Legion of Honor) யடைந்தார். 1915-ம் ஆண்டில் பிரின்ஸ்டன் சர்வ கலாசாலை, டி. எஸ்ஸி. (D. Sc.) என்னும் உயர்தரப் பட்டத்தை யளித்தது. நியூயார்க் நகரினர், எடிசனுக்கு அவர் மின்சார அபிவிருத்திக்குப் பாடுபட்டதற்காக 1915-ம் ஞு மேமீ 6வ ஓர் பெரிய தங்க மெடலை அளித்தனர். அதே வருஷம் பிராங்லின் வித்தியா சாலையின் (Franklin Institute) தங்கப் பதக்கத்தையும் பெற்றார். அச் சமயம் டாக்டர் கெல்லர் கூறியதாவது. "............இவருடைய (எடிசனுடைய) பெயரைப் போல் எவருடைய பெயரும் இத் தேசத்திலும் எத் தேசத்திலும் புகழடையவில்லை யென்று எவருடைய எதிர்ப்புக்கும் பயமின்றிக் கூறுவேன்..........." 1916-ம் ஆண்டில் நியூயார்க் ஸ்டேட் சர்வ கலாசாலை, எல் எல். டி. (LL. D.) என்ற பெருமை வாய்ந்த பட்டத்தையும் அளித்தது. எடிசனின் முதல் முக்கிய ஆராய்ச்சிக்குரிய மேன்லோ என்ற இடத்தில் ஓர் பெரும் பாறைக் கல்லை நிறுத்தி அதில் சித்திர வேலை யமைந்த வெண்கலத் தகட்டை அழுத்தி எடிசனின் உருவத்தையும், அவர்செய்த அரிய தொண்டையும் சுருக்கமாக எழுதி அமைக்கப்பட்டு 1925-ம் ஞு மேமீ 16வ எடிசனுடைய மனைவியினாலேயே திறந்து வைக்கப்பட்டது. இதனருகே எடிசன் ஒரு தினம் உட்கார்ந்து தன்னைப் பெருமைப்படுத்தி வைத்திருப்பதைக் கண்டு களித்தார்.

## குடும்பம்

எடிசன் முதல் மனைவி (1884)ல் இறந்த பிறகு, மிஸ். மினா மில்லர் என்ற மாதை (1886)ல் மணந்து கொண்டதாக முன்பே கூறினோம். இம் மாது நன்றாய்க் கற்றுணர்ந்தவள். பல சங்கங்களுக்குக் காரியதரிசியா யிருந்தாள். எடிசன் அடிக்கடி தனக்குப் புலப்படாத சில விஷயங்களில் தன் மனைவியின் நோக்கத்தை யறிந்து அதன்படி நடந்து கொள்ளுவது வழக்கம். எடிசனுக்குத் தன் முதல் மனைவியால் தாமஸ் ஆல்வா, வில்லியம் லெஸ்லி என்னும் இரு புத்திரர்களையும்,





மென்லோ யென்ற விடத்தில் நிறுவப்பட்டிருக்கும் தனது உருச் சிலையருகே, எடிசன் ஓர் தினம் அமர்ந்து உவகை யடையும் காட்சி

மாரியன் என்ற புத்திரியையு மடைந்தார். இம்மாது, ஜெர்மனி தேசத்துப் போர்வீரனை மணந்து சென்று விட்டாள். இரண்டாம் மனைவியால் எடிசன், மாடெலின் என்ற புதல்வியையும், சார்லஸ் என்ற புதல்வனையும் பெற்றார். சார்லஸ் என்பவரே தற்போது எடிசன் கம்பெனிகளை மேற்பார்த்து வருகிறார்.

---

எவனொருவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறானோ அவன் பிறருக்கும் தேசத்திற்கும் பணிசெய்யக் கூடியவனாகின்றான்.

* * *

வறுமை யடைந்தவன் க்ஷேமத்தைப் பெறுகிறான். துன்ப மடைந்தவன் இன்பத்தைப் பெறுகிறான்.

* * *

இன்பதுன்பம் சாஸ்வதமல்ல. அறிஞன் யாவற்றையும் வரவேற்கிறான். ஆனால், அவற்றில் நன்மை தருவதை மட்டும் பிறருக்களித்துக் கடனைத் தீர்க்கின்றான்.

* * *

சுருங்கப் பேசுவதைக் கொண்டு நிறைய வேலை செய்தலைக் கைக்கொள்வதே உயர்ந்தோர் முறை.

* * *

முதலாவது உனது நிலைமையைக் கவனி. பின் உனது குடும்பம், கிராமம், தேசம், மதமாகியவற்றிற்குத் துணை செய்.

* * *

அடிமை வாழ்வில் காண்பது ஒன்றுமில்லை. சுதந்திர வாழ்விலோ யாவும் மனோகரமாயும் க்ஷேமமாயும் இருக்கும்.

* * *

எதற்கும் யோசனை வேண்டும். ஆரம்பித்துவிட்டு அலங்கோல முறுதல் காரிய வீரரிடம் கனவிலுமில்லை. மலை கலங்கினும் நிலை கலங்காமையே கருமாதிகாரியின் கட்டளைக் கல்.

ரா. சு.

---

# கன்றின் கண்கவர் காட்சி.

திரு. சூ. ம. மிக்கேல் அவர்கள்.

எழில்பெறும் ரப்பர்ப் பந்துபோல் எழும்பி
எழும்பிவிளை யாடுகிற தெங்கள் சிறுகன்று
காலையில் அன்னைதன் பாலமு துண்டு
ஞாலத்தில் வாழ்வது வெகுநல மென்று
கவலைநோ யின்றிக் களிவெறி கொண்டு
உவகையின் இன்ப வடிவம் போன்று
எண்டிசை களிலும் எழும்பித் தாவிக்
கொண்டாட்ட மாடிக் கும்மாள மடித்துக்
கதிரவ னுக்கு நல்வரவு கூறி
எதிர்கொண் டழைக்கும் அழகினைப் பாரீர்!
மென்மையாய்த் தென்றல் விசிறி வீச
நின்றுமெய் குளிர நாற்புறம் நோக்கிக்
காற்றொடு காற்றாய்க் கலந்திடக் கருதிய
தோற்றமேற் கொண்டு துள்ளித் துள்ளிப்
பள்ளிச் சிறுவர் பந்தய மனைத்தும்
எள்ளத் துணையென் றிகழ்தல் போலக்
குதித்து உயரக் கிளம்பி மண்ணில்
மிதித்து நடக்க மனமில்லது போல்
ஓடி ஆடிச் சாடிப் பந்தயம்
போடுது சிறகுடைப் பறவைக ளோடே!
புல்லிடை ஓர்புள் போகவும் யானுட்
கொள்வதைக் கொள்ளாநீ கொள்வை கொல்லோவென
மெள்ளப் பின்போய் விரட்ட அக்குருவி
கள்ளப் பட்டுக் கடுகிப் பறக்கவும்
தானும் பறந்ததைத் தான்பிடித் திடுமாம்!
வானைத் தொடவழி பார்த்து விழிக்கும்!
தொட இயலாது திகைத்து நிற்கும்!
நடனமாடி அந் நினைவை மறக்கும்!
கோழியை விரட்டிக் கொண்டுபோய் விட்டு



வேலியைத் தாண்டி மின்னல் விரைவுடன்
தாயை வந்து தொட்டு நிற்கும்.
ஆயிரந் தடவை "அம்மா! அம்மா!
அம்மா எனவலி தழைக்கும் அழகை
இம்மாத் திரமென இயம்புதற் கெளிதோ?
பழைய குயிலின் பாட்டிலும் இனிதே!
குழவிகள் அழுகைபோற் கரைக்குது நெஞ்சை
"கால் வலிக் குமடா கண்மணி யே வா
மேல் வலிக் குமடா," வென்று தாய்ப்பசு
ஆவி நெக்குருகி அருகில் அழைத்து
காவினால் தடவி நோவினைத் தீர்த்து
உருகி உருகி மருவி மருவி
அருமை பாராட்டி அன்பெலாம் கூட்டி
உச்சி முகந்து முத்த மிடுகையில்
அச்ச மறியாப் பச்சிளங் கன்று
பிடிக்கும் ஓட்டம் பெற்றவள் மறுக
நடிக்குமே இன்ப நாடகம் பின்னும்
சாலச் சின்னஞ் சிறிய பிள்ளை
நாலு பேர்க்கும் நல்ல பிள்ளை
கள்ளங் கபடு காணாப் பிள்ளை
பகை தெரியாத பச்சைப் பிள்ளை;
வகைப்பசும் பயிர்போல் வளரும் பிள்ளை
குற்ற மறியேன், குறையொன் றில்லேன்
வெற்றி வெற்றி வாழ்வெலாம் வெற்றி
இன்பமே யென்றும், துன்பமொன் றில்லை
அன்பும் அறமும் அருளுமே உண்மை
மானிடர் காள்! நீர் வீணிடர்ப் படலேன்?'
ஏன்? எனைப்போல் இரும்," என்பது போலச்
செக்கச் செவந்த சிறிய கன்று
மிக்க அழகிய மெல்லிய கன்று:—பின்னர்,
தன்னந் தனியே துள்ளல் சலித்து
என்னையும் விளை யாடவிளித்தல்போற்

பைய என் பக்கம் நோக்கி வர யான்
செய்யும் பாட்டைச் சற்று விடுத்து
எழுந்ததைப் பிடிக்க ஏகுங் காலை
விழுந்தடித் தோடி விடுகிற தென்னைத்
திரும்பிப் பார்த்துத் தூத்திப் பிடிக்க
வரும்படி அழைக்குது எய்த்து யான்தூர
வாளா நின்றால், நல்ல பிள்ளைபோல்
மீளவும் என்பால் நெருங்குது மெள்ள
ஆண்டதைப் பிடிக்க அணுகிய வுடனே
மீண்டும் பறக்குது வெகுதொலைக் கப்பால்!
கொடிய விடாய்போல் கிட்டுது தொட்டியை
குடியென நீரைக் கொட்டி வைத்தால்
எட்டி யெட்டிக் கிணற்றினுள் நோக்குது
கிட்டா நிலவைக் கேட்கும் பிள்ளைபோல்!
பேருக்குக் கொஞ்சம் பருகிய பின்என்
ஓரமாய் வந்து அன்னையின் அருகில்
சேர்ந்துநிற் பதுபோல் சாய்ந்தென் மீது
சோர்ந் தென் உடலைத் தடவிக் கொடுவெனத்
தாய்முக நோக்கல்போல் என்முக நோக்கச்
சேய்போல் நினைத்துத் தடவிவிடுவன் யான்

* * *

கண்கவர் காட்சிப் பசும்புயர் கன்றே
பசுவின் கன்றே பச்சிளங் கன்றே
மாந்துளி ரதுபோ லமைந்துறுங் கன்றே
சின்னஞ் சிறிய கன்றே யானும்
உன்னொடு சேர்ந்துன் தோழ னானேன்
நின்னொடு பழகிய நேர்மையால் யானும்!
நீபெற்ற இன்பமே யானும் பெற்று
"யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"
எனுஞ்சான் றோர்மொழி யெங்கணும்
பொலிக இறையருள் பொலிக வையகமே.

---

# பத்திரிகை உலகம்.

பட்டாணியர்களின் வீர வாழ்வு

லண்டனிலிருந்து வெளியாகும் நவம்பர்மீ "எம்பயர் ரெவ்யூ," என்ற பத்திரிகையில் மிர். "ரூபி ஷார்ப்" என்பார் "இந்தியாவில் பாரம்பரை நடனம்" என்னும் ஒரு வியாஸம் வரைந்துள்ளார். அதில் அவர் பொதுவாக வட மேற்கு எல்லைப்புறங்களி லுள்ள பட்டாணியர், காட்டகர் ஆகிய வீர மக்கள் போர்க் கருவிகள் தாங்கி நடிக்கின்ற ஆட்டங்களில் விகசிக்கும் வீரஞ் செறிந்த அபிநயத்தைப் பற்றியே விளக்கி ஆச்சரியப்படுகிறார். அவ் வியாஸ ஆரம்பத்தில் அம் மக்கள் வாழ்க்கையைப் பற்றி அவர் கூறுவதாவது:—

எல்லாருடைய கண்களும் இந்தியாவை நோக்கிக்கொண் டிருக்கும் இது போன்ற சமயங்களிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விரோதமாக எல்லைப்புற வாசிகளின் உதவியை நாட முயற்சிக்கும் போதும் பாரம்பரையாக இராஜ விசுவாசம் படைத்த படை வீரர்களின் வம்ஸத்தைச் சேர்ந்த போர்ச் சேவகர்கள் தமது அதிகாரத்தின் கீழ் இருப்பது கண்டு, இந்திய இராணுவ உத்தியோகஸ்தர், அவர்கள்பால் அளவற்ற பெருமையும் பூரண திருப்தியும் கொள்கிறார்கள். அம் மக்களில் மிகவும் பிரதானமானவர்கள் சிந்து நதிக்கரையின் மேல்பாகத்திலுள்ள பிரிட்டிஷ் பிரதேசத்தில் வசிக்கும் காட்டகர்களும், பட்டாணியர்களுமாவர். தீரம் மிகுந்த இம் முஸ்லீம் மக்கள் ஒப்பற்ற புஜபலம் கொண்ட ஓர் மலைவாசிகள். அவர்களுக்குள் ஒவ்வொரு குடும்பத்தி லிருந்தும் குறைந்தது ஒருவரேனும் யுத்த வீரர்களாகச் செல்ல வேண்டுமென்ற வழக்கம் இருந்து வருகிறது. குடும்பத்திலுள்ள மூத்த புதல்வன் சாதாரணமாக வயோதியர்கள், பெண்கள், குழந்தைகள் இவர்களைப் பாதுகாப்பதற்கும், மூதாதைகள் விட்டுப்போன நிலங்களைப் பயிர் செய்வதற்கும் வீடுகளில் இருந்து கொள்கிறான். அவனது இளைய சகோதரர்களோ இராணுவ சேவையைப் பின்பற்றச் செல்கிறார்கள். இந்திய இராணுவத்தில் இவர்கள் இவ்விதம் ஒப்பற்ற வீரர்களாக அமைந்திருக்கும்போது கிராமங்களிலிருக்கும் இவர்களது வம்சத்தைச் சேர்ந்த

மற்றோர்களும் போர்த் திறமையிற் சிறிதளவேனும் குறைந்தவர்களா யிருக்க மார்க்க மில்லை. எல்லைப்புறங்களில் எப்பொழுதேனும் எதிரிகளது படை யெடுப்பு நேரிடுமாயின் நாம் (பிரிட்டிஷ் தளபதி) கொடுக்கும் முதல் அறிவிப்பிலேயே அவர்களும் ஆயுதங்கள் தாங்கி நமக்கு உதவி யளிக்கிறார்கள்.

The "Empire Review;" London.

## அமெரிக்க மக்களின் வயது வளர்ச்சி

அமெரிக்காவைச் சேர்ந்த "இலினாயிஸ்," மாகாணத்துச் சுகாதார இலாக்காவின் அரசாங்க அறிக்கை தனது நவம்பர் மீ வெளியீட்டில், அம் மாகாண மக்களின் நீடித்த கால வாழ்வையிட்டுக் கூறுவது கவனிக்கற்பாலது. இந்திய மக்களின் சராசரி 24½ வயது வாழ்வை யறிந்துள்ள நம்மனோர்க்கு இக் குறிப்புப் பிரயோஜனமா யிருக்கு மென்று நம்புகிறோம்.

1929ல் இலினாயிஸ் மாகாணத்தில் மரணமடைந்த 87,789 மக்களில் 100-க்கு 10 பேர் வீதம் 80 வயது சென்றவர்கள். ஆனால் 10 வருடங்களுக்கு முன்னால் அதாவது 1919-ம் ஆண்டில் இவ் வயதுவரை இருந்து இறந்தவர்கள் 100-க்கு 8 பேர்களே யாவர். 1907-ம் ஆண்டிலோ (1909-ம் ஆண்டுக் கணக்குக் கிடைக்கவில்லை.) 100-க்கு 6½ பேர் வீதமே 80 வயது சென்றவர்களா யிருந்தனர்.

இலினாய்வில் சென்ற 20 வருடங்களில் 70 வயது சென்று இறந்தவர்களின் தொகை முன்னிருந்த நிலையிலிருந்து இரு மடங்கிற்கு மேல் பெருகி யிருக்கிறது. எனவே 1929-ம் ஆண்டு இறந்தவர்களில் 100-க்கு 26 பேர்களுக்கு மேல் தங்கள் 70-தாவது ஆண்டுப் பூர்த்தி வைபவங்களைக் கொண்டாடி யிருக்கிறார்கள். 1919-ம் ஆண்டில் இவ் வயது சென்றவர்கள் 100-க்கு 20 பேர்களும், 1907-ம் ஆண்டிலோ 100-க்கு 17 பேர்கள் மட்டிலுமே காணப்பட்டனர்.

இலினாய்வில் 20 வருடங்களுக்கு முன் 50 வயதிற்கு மேலிருந்து இறந்தவர்கள் மூன்றில் ஒரு பங்கே யாகும். தற்பொழுது ஒரு பாதி மக்களுக்கு மேல் 50 வயது நிறைந்தவர்களா யிருக்கின்றனர். எனவே இலினாய்வில் இறந்த 87,789 மக்களில் 1000-க்கு 576 பேர் 50 வயதிற்கு மேல் உள்ளவர்களும், 1907-ம் ஆண்டுக் கணக்கின்படி 1000-க்கு 376 பேர்களுமே அவ் வயது நிறைந்திருக்கின்றனர்.

50 வயதிற்கு மேல் இருப்பவர்களின் தொகை அதிகப்பட்டதினால் ஒவ்வொருவரின் சராசரி வயதும் மிகைப்பட்டு விட்டது. 1860-ம் ஆண்



டிற்குப் பின்னால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மக்களின் சராசரி வயதில் 100-க்கு 17 பங்கு அதிகம் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் மக்களின் சராசரி வயது விவரம்.

| ஆண்டு | வயது |
|---|---|
| 1860 | 41.0 |
| 1901 | 48.2 |
| 1909 | 51.3 |
| 1919 | 55.3 |
| 1927 | 59.1 |
| 1928 | 58.2 |

சிசுக்கள், குழந்தைகள், பாலர்கள் இவர்களை மிகக் கவனமாகப் பார்த்து இரட்சித்ததினாலேயே மக்களது சராசரி வயது வளர்ந்திருப்பதற்குக் காரணமாகும். சாஸ்திரீய முறையில் சிசுக்களுக்கு உணவளித்தும், சுகாதாரத்தைப் பாதுகாத்தும், தொத்து வியாதிகள் அணுகாது கவனித்தும் வந்ததினால் உலக மகா யுத்தத்தின் பிறகு இலினாய்வில் பிறந்த சிசுக்களில் 1000-க்கு 105 மரணம் ஏற்பட்டுக்கொண் டிருந்ததானது, இப்பொழுது 65 வீதமே மரணமாகிக்கொண் டிருக்கிறது. 1910-ம் ஆண்டிலிருந்த 150 விகிதம் மிகக் குறைந்திருப்பது தெரியவரும். சுருங்கக் கூறினால் இலினாய்ஸ் மகாணத்தில் சிசு மரணத்தின் தொகை 20 வருடங்களுக்கு முன்னிருந்த நிலையிலிருந்து ஒரு பாதி குறைந்துவிட்டது.

The "Illinois Health Messenger," Springfield.

## தேகப் பயிற்சியின் தற்கால முறைகள்

டாக்டர் "றெனி லீடண்ட்" என்பவர், பெல்ஜியம் தேசத்தைச் சேர்ந்த "லீஜ்" மாகாணத்திலுள்ள தேகப் பயிற்சிக் கலாசாலையில் 20 வருட காலம் மருத்துவப் போதகாசிரியரா யிருந்து சுகாதார ஆராய்ச்சிக் கழகத்திற்கு அங்கம் வகித்தவர். அவர் சர்வ தேச தொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோளின்படி 'இன்டர்நாஷனல் லேபர் றெவ்யூ' என்னும் பத்திரிகையில் "தேகப் பயிற்சிக் கழகமும் அதன் சாஸ்திரீய பலனும்" என்ற அரியதோர் கட்டுரை வரைந்துள்ளார். அதில் தேகப் பயிற்சியின் தற்கால முறைகளின் பலாபலன்களைப் பற்றி எழுதுவதில் ஓர் பகுதி வருமாறு:—

தேகப் பயிற்சியின் சாஸ்திரீய உலகம், தற்பொழுது மூன்று முக்கியமான முறைகளில் பிரிக்கப்பட் டிருக்கிறது. அவைகள் அளித்துள்ள நியமங்களால் விளைந்திருக்கும் மருத்துவ பலன்களைக் கொண்டே அவைகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

(1) ஜான் ஆமரூஸ் **(Jahn Amoros)** அவர்களின் கருவி முறை (கழைகள், ஏணிகள், வளையங்கள், குதிரை, டிறப்பீஸ், ஹாரிஸாண்டல் பார் முதலியவை) அளித்து வரும் தேகப் பயிற்சி, பிரகிருதி சாஸ்திரத்திற்கு ஏற்றதாகக் கருதப்படவேயில்லை. இக் கருவி விளையாட்டுகளின் அனுபவம் பொதுவான வைத்திய விதிகளுக்கு ஒத்திருக்கவுமில்லை. எண்ணிறந்த ஆசிரியர்கள் (லாகரான்ஜ் **Lagrange**; டிஸ்ஸி, **Tissie**; குவர்மன்பிறஸ், **Guermonprez**; டெமூர், **Demoor**; வெற்றின்டார்ப், **Wettendorf**; லீமாரினல், **Lemarinel**; டான்ஜோ, **Danjow**, கெய்ஸின், **Kaisin**; பாய்கி, **Boigey** முதலியோர்) அம் முறைகளை ஆராய்ந்தறிந்து யாவர்களும் அவை உடற்கூறு சாஸ்திரத்திற்கு முற்றிலும் விரோதமானதென்று நிரூபிக்கின்றனர். அம் முறையில் ஒரு மனிதன் எவ்வளவு பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற விதி இல்லவே இல்லை. அனுபவ பூர்வமாக வளர்ச்சியைக் குறிக்கத்தகும் விதிகளும் அதில் காணப்படவில்லை. வைத்திய விதிகளையும் அதில் கையாளப்படவில்லை.

(2) "ஹீபர்ட்" முறை நேர்மாறாக சகலவிதமான சரீரத்தின் அவசியங்கள் யாவற்றையும் அளிக்க வல்லதாயிருக்கிறது. "ரோல்லியர்" என்பாரின் பரிசோதனையில் வாயு ஸ்நானம், சூரிய ஸ்நானம் ஆகியவற்றில் பல விருத்தியும் நரம்பு பலமும் தகுந்தவாறு வளருகின்றன. ஹீபர்ட் என்பாரின் நோக்கமே சரியான பலத்தைப் பெறுவதற்காகும். அவரது அபிப்பிராயத்தின்படி பந்தய ஓட்டம், வெகு தூர ஓட்டம், சாட்டம் ஏற்றம், பாரம் தூக்குதல், குண்டு எறிதல் ஆகிய விளையாட்டுகளில் சரீர பலம் பெறுகின்ற திட்டம் அமைந்து கிடக்கின்றது. நீந்துதலும் இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இக் கட்டுரையாளரின் அபிப்பிராயத்தில் **(Dr. Rene Ledent)** இது வித்தியா குருவின் பரிசோதனைக்கு அடங்குவதன்று. தவிர, ஹீபர்ட் என்பார் வாலிபர்களில் 100-க்கு 75 பேர், விதிகளின்படி நீந்தமுடியாதவர்களாயிருக்கிறார்களென்று கூறுகிறார். அன்றியும் இம் முறைகளில் சுவாச உறுப்புக்கள், இரக்தாசயம், ஜீரண கருவிகளின் வளர்ச்சி இவைகளை உடனுக்குடன் பரிசோதித்தறியக் கூடாததாயிருக்கிறது. கனம், உயரம், மார்பு அகலம் இவைகளினால் மட்டும் பிரயோஜனமில்லை. பலமும் ஆரோக்கியமுமே பரியாயமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவ் விளையாட்டுகளின் பரிசோதனையே ஆரோக்கியத்திற்குப் போதுமானதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மருத்துவ பூர்வமாகப் பார்த்தால் ஹீபர்ட் அவர்களின் முறையில் தகுந்த முகாந்தரங்கள் காண முடியவில்லை.

(3) "லிங்" என்பாரின் முறை, சரீர உறுப்புக்களின் இலகுவான அசைவுகளின் மூலமே கற்பிக்கிறது. அவை குறிப்பிடுவதுபோல் சரியான விதங்களில் பழக்கம் செய்வதால் சரீர உறுப்புக்கள் யாவும் ஒன்றுபோல்



வளர்ச்சியடைகின்றன. இரத்த ஓட்டம், சுவாச வலிமை, நரம்பு வலிமை, யாவும் ஒழுங்காக உரம் பெறுகின்றன. உயிர்ச் சத்துக்கள் வளருகின்ற விதத்தையும் மிக நுட்பமாகக் கவனித்து வரலாம். இம் முறையையே நீண்டகால அனுபவ வாயிலாகக் கொண்டு பல திறப்பட்ட மக்களுக்குத் தேகப் பயிற்சி அளித்து வரும் இம் மாகாண வித்தியா சாலையில், ஆயிரக் கணக்கான மக்கள்பால் கண்டறிந்த ஆதாரங்களில் மிகச் செவ்வையான பலன்கள், மருத்துவ சாஸ்திரத்திற்குத் தகுந்தவாறு விளைந்திருக்கின்றன.

The "International Labour Review," Geneva.

## மேல் நாடுகளும் பொற் காசுகளும்

சர்வ தேச சங்கத்தால் நியமனம் பெற்ற பொன் விளைவு பரிசோதனைக் குழுவினர் வெளியிட்டிருக்கும் தஸ்தாவேஜிகளை ஆதாரமாகக் கொண்டு மிர். "ஹெர்பர்ட்—எஸ்—ஓக்லி" என்பார் "பொன்னும் அதன் உபயோகமும் அழிவும்" என்ற தலைப்பின் கீழ் நவம்பர் மாதம் வெளியான "ரெவ்யூ ஆப் ரெவ்யூஸ்," என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அதில் மேல் நாடுகள் பொற் காசுகளைச் சேமித்து வைத்திருக்கும் நிலையைக் குறித்து அவர் எழுதுவதாவது:—

சர். "ஹென்—றி ஸ்ருக்கோவ்ஷ்" என்பார், பொன்னும் அதன் விலை மதிப்பும் என்ற கட்டுரையில், 1925-ம் ஆண்டு முடிவிலிருந்து 1929-ம் ஆண்டு முடிவுவரை இராஜாங்க பொக்கிஷங்களிலும் மத்திய பாங்கிகளிலும் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொற்காசுகளின் நிலையைக் காட்டுகின்ற ஓர் பட்டியல் தயாரித்துத் தந்துள்ளார். இத் தொகைகளை நிர்ணயம் செய்வதற்கு நமது தேசத்தின் நிலைமை (இங்கிலாந்து) சரியானதோர் வழிகாட்டியாயிருக்கிறது. இங்கிலாந்து தேசத்தின் பொற்காசுத் தொகை, அதன் ஜனத் தொகையில் சராசரி ஆள் ஒன்றுக்கு மூன்று பவுன் மூன்று ஷில்லிங் வீதம் **(£3-3sh)** இருந்து வருகிறது. இத் தொகை இவ் வருஷங்களில் ஒருவித மாற்றத்தையும் அடையாது ஒரே நிலையில் இருந்து வந்திருக்கிறது. இந்த நிலைமையின் பலத்தாலேயே அது உலகத்திற் சிறந்த காசுக்கடையாகவும் **(Money market)** உலக வியாபாரங்களில் பெரும் பகுதிக்குப் பணம் கொடுத்து உதவும் "மார்வாரி"யாகவும் இதுகாறும் இருந்து வந்ததாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருள் நிலையும், இவ் வருடங்களில் அதன் ஜனத் தொகையில் ஆள் ஒன்றுக்கு ஆறு பவுன் ஏழு ஷில்லிங் வீதம் **(£6-7sh)** நிரந்தர நிலையை எய்தியுள்ளது. 1925-ம் ஆண்டு முடிவில் பிரான்ஸ் தேசம், ஆள் ஒன்றுக்கு மூன்று பவுன் ஒன்பது ஷில்லிங் **(£3-9sh)** பெற்றிருந்தது. 1929-ம் வருட முடிவிலோ அது ஜனத் தொகையில் ஆள் ஒன்றுக்கு எட்டுப் பவுன் **(£8)** அதிகம் அடையலாயிற்று. ஏனென்றால் அந் நாடு சேமித்திருந்த 16 கோடியே 40 லட்சம் (16,40,00,000) பவுன், அப்பால் 33 கோடியே 60 லட்சம் (33,60,00,000) பவுனுக்கும் அதிகப்பட்டது. ஜெர்மனி தேசம் பவுன் சேர்ப்பதில் சிறிது ஏழ்மைப்பட்டிருந்தாலும் ஆள் ஒன்றுக்கு முதன் முதலில் ஒன்பது ஷில்லிங்காயிருந்து பின்னால் ஆள் ஒன்றுக்கு ஒரு பவுன் ஏழு ஷில்லிங் நிலையில் வந்துள்ளது. "அற்ஜண்டைனா" தேசம், அமெரிக்காவைப் போன்று

*மகா யுத்த காலத்திலேயே பெரும் லாபம் சம்பாதித்தது. இப்பொழுது அது ஆள் ஒன்றுக்குச் சராசரி ஒன்பது பவுன் நாலு ஷில்லிங் (**£9-4sh**) வீதம் அடையப் பெற்றிருக்கிறது. அந்தோ! இந்தியாவே! உன் நிலையை மதிப்பிட்டுக் கூறுவார் யாருளர்?*

The "Review of Reviews," London.

## முஸ்லீம் மன்னர் பெருமானது சமரச ஞானம்

*அக்பர் சக்கரவர்த்தி சமய வழிபாட்டில் கொண்டிருந்த சமரசக் கொள்கையை யிட்டு "அக்கல்ட் ரெவ்யூ" என்னும் பத்திரிகையில் ஆசிரியர் எழுதிய முதல் கட்டுரையில், ஓர் பகுதி காணப்படுகிறது. சமய விஷயங்களில் தம் தம் கொள்கையே சிறந்த தெனப் பிடிவாதம் செய்யும் சமய சித்தாந்திகள் இதனை நன்கு கவனிப்பார்களாக:—*

*முன்னூறு வருடங்களுக்கு முன்னால் இரண்டு பெரிய முஸல்மான்கள் சர்வ தேசங்களுக் குகந்த ஆன்மார்த்த உலகத்தைக் கண்டனர். உண்மை மதம் என்ன என்பது பற்றிப் புதியதோர் அறிவை உலகிடை நாட்ட அவர்கள் முயன்றனர். அவ்விரண்டு பேர்களில் ஒருவர், இந்திய சக்கிரவர்த்தியா யிருந்த மகா அக்பர் எனப்படுபவர். மற்றவரோ அவரது முதல் மந்திரியாகிய அபுல் பாஸல் என்பவராவர். இந்துக்களின் பூர்வீக கலைஞானங்களை நன்கு ஆராய்ந் தறிந்த அவர்கள், இதர மதங்களினிடையும், உயர்ந்த தத்துவங்களும் அரிய போதனைகளும் அடங்கிக் கிடப்பதால் அம் மதத்தில் பற்றுள்ள கோடிக் கணக்கான இந்துக்களை நாஸ்திகர்கள் என்று ஒருபோதும் அழைக்கலாகா தென்றனர். இந்துக்களின் உயரிய கொள்கை எதில் அடங்கிக் கிடக்கிறது?*

*அக்பர் அதற்கு அடியில் வருமாறு மொழிந்தார்.*

*"ஓ கடவுளே! ஒவ்வொரு கோவிலிலும் மக்கள் உன்னையே தேடி வருவதைப் பார்க்கிறேன்; ஒவ்வொரு பாஷையிலும் அவர்கள் நினது புகழைப் பேசுவதையே கேட்கிறேன்."*

*"பல தெய்வ வணக்கமும் இஸ்லாமியக் கொள்கையும் நின்னையே உணர்கின்றன."*

*"ஒவ்வொரு மதமும் நீ ஒருவனே என்றும் உனக்கு நிகர் ஒன்றுமே யில்லை என்றும் கூறுகின்றது."*

*"மசூதியாயிருப்பின் மக்கள் பரிசுத்தமான பிரார்த்தனையை உச்சரிக்கின்றனர்; கிறிஸ்து மத ஆலயமாயிருந்தால் மக்கள் உனது அருளை வேண்டி மணியை அடிக்கின்றனர்."*

*"சில வேளைகளில் நான் கிறிஸ்து மதாலயத்தையும் சில வேளைகளில் மசூதியையும் நாடிச் செல்கிறேன்."*

*"ஆனால் உன்னை நாடியே நான் கோவில் கோவிலாய்ச் செல்லுகிறேன்."*



*"வேதப் புரட்டிலோ அல்லது வேத வழியிலோ உனக்கு ஒருவிதத் தொடர்பும் கிடையாது; ஏனென்றால் சமய வேதமும் ஒரே சமய நெறியும் சத்தியத்திற்குப் புறம்பாக இருக்க முடியாது."*

*"சமய பேதம் சமய பேத வாதிகளுக்கும், வைதீகம் வைதீகர்களுக்குமே சாலும்; ஆனால் ரோஜாவின் சுகந்த மணத்தை விற்கிறவர்களிடம், சாரம் போன ரோஜா இதழ்களே தங்குகின்றன." இதுவே அக்பரது கொள்கையா யிருந்தது.*

The "Occult Review," London.

## ஜப்பானில் ஓர் பிரபல நூலாசிரியர்

*"நேஷன் அண்ட் அதினியம்" என்னும் பத்திரிகையில் ஓர் ஆங்கிலேயர், ஜப்பான் தேசத்து நூலாசிரியர்களைப் பற்றி ஓர் கட்டுரை வரைந்துள்ளார். அதில் "மாறி ஓகே" என்ற ஓர் பிரபல ஆசிரியரைக் குறித்து அவர் கூறுவதாவது:—*

*எட்டு வருடங்களுக்கு முன் மரண மடைந்த இன்னொரு பெரிய ஆசிரியர் "மாறி ஓகே" என்பவராவர். இராணுவ இலாக்காவில் மருத்துவ உத்தியோகத்தி லமர்ந்து, விடா முயற்சி செய்துகொண் டிருந்த அவர், ருஷ்ய ஜப்பானிய யுத்தத்தின் போது ஜப்பானியப் போர் வீரர்களின் தேகாரோக்கியத்திற்குப் பூரண பொறுப்புதாரியா யிருந்தார். பகல் முழுவதும் மருத்துவத் தொழிலில் விடா வேலை பார்த்து இராக்காலங்களில் நூல்கள் எழுதுவதில் பெரும் பொழுது கழித்தார். எடிஸனைப் போலவே அவரும் மூன்று அல்லது நான்கு மணி நேரம் நித்திரை போதுமான தென்று உணர்ந்தார். எண்ணிக்கையில் அடங்காத அவரது மொழி பெயர்ப்பு நூல்களினால் அவர் எப்பொழுதும் ஞாபகப்படுத்தப் படுகிறார். அந் நூற் பரப்புகள் பின் வருமாறு:—*

*காத்தி* (**Goethe**), *லெஸிங்* (**Lessing**), *மாப்மான்* (**Mauptmann**), *ஸடர்மான்* (**Sudermann**), *வெடக்கிண்ட்* (**Wedekind**), *ஷினிட்ஸலர்* (**Schnitzler**), *ஹாப்மன்ஸ்தல்* (**Hofmannsthal**); *அன்றியும் ஷேக்ஸ்பீயர்* (**Shakespeare**), *இப்ஸன்* (**Ibsen**), *ஸ்டிறின் பெர்க்* (**Strindberg**), *ஹன்ஸ்* (**Hans**), *ஆன்டர்ஸன்* (**Anderson**), *மேட்டர்லிங்க்* (**Maeterlinck**), *டி அனன்ஸியோ* (**d' Annunzio**), *ஒஸ்கார்* (**Oscar**), *வில்டி* (**Wilde**), *பெர்னட்ஷா* (**Bernard Shaw**) *ஆகிய ஆசிரியர்களின் நூல்களையும் ஜெர்மன் மொழியினின்றும் மொழி பெயர்த்தனர். இவைகள் மட்டு மன்றி அநேக நாடகங்களையும் இயற்றி அறுபதுக்கு அதிகமான கதைப் புத்தகங்களையும் எழுதி முடித்தார்.*

The "Nation and Athenaeum," London.

## இந்தியர்களின் பலவீனம்

“பிரபுத பாரதா” என்னும் பத்திரிகையில் அதன் ஆசிரியர் “இந்தியாவின் பொருளாதாரத்தில் சுவாமி விவேகானந்தரின் கருத்து” என்ற ஓர் கட்டுரை வரைந்துள்ளார். அதில் சுவாமி சென்னையில் மொழிந்த அரிய கருத்துக்களை மேற்கோளாகக் கொள்ளுவது கவனிக்கத்தக்கது. தற்கால நிலைமையைப் பொறுத்த அளவில் விவேகானந்தரின் மொழிகள் சென்னை மாகாண வாசிகளுக்கே சாலவும் பொருந்தும். அவை பின் வருமாறு:—

*நமது துயரங்களில் மூன்றில் ஒரு பாகத்திற்கு நமது சரீரத் தளர்ச்சியே காரணமாகும். நாம் சோம்பேறிகள்; நம்மால் வேலை செய்யவும் இயலவில்லை; நம்மால் ஒற்றுமைப்படவும் முடிவதில்லை; நாம் ஒருவரையொருவர் நேசிப்பதுமில்லை; நாம் மிகவும் தன்னலம் உடையவர்கள். ஒருவருக்கொருவர் பொறாமை யின்றியும் ஒருவரை யொருவர் வெறுக்காமலும் நம்மில் மூன்று பேர்கூட ஒன்று சேர்வதில்லை. நாம் இருந்து வரும் நிலைமை இதுவே யாகும். நூற்றாண்டுகளாக நெற்றியிலிடும் குறிகளை இப்படி யிடுவதோ அல்லது அப்படி யிடுவதோ என்பதில் ஒருவர்க் கொருவர் சண்டை யிட்டு அளவு கடந்த தன்னலப் பிரியத்தால் அழிந்து போகும் விதத்தில் பிரிந்து கிடக்கின்ற கூட்டத்தார்கள் நாம். ஒரு மனிதனுடைய பார்வை, என்னுடைய உணவைக் கெடுத்துவிட்டதா இல்லையா என்ற அற்ப விஷயங்களைப் பற்றிப் புத்தகங்கள் புத்தகங்களாக எழுதி முடிப்பவர்கள் நாம். சென்ற சில நூற்றாண்டுகளாகவே நாம் இவ்விதம் செய்துகொண்டிருக்கிறோம். ஆச்சரியமும் அழகும் சிறந்து விளங்கும் ஆராய்ச்சி விஷயங்களில் தங்கள் ஞான சக்தியைப் பிரயோகம் செய்து வரும் ஒரு கூட்டத்தாரிடமிருந்து நாம் இந் நிலையில் ஒன்றையுமே எதிர் பார்க்க முடியாது. நாம் இவ்விதம் வீண் காலம் கழிப்பதைக் கண்டு வெட்கப்பட வேண்டாமா? ஓ! சில சமயங்களில் இவைகள் மிகவும் அற்பமானவை என்று நாம் எண்ணினாலும் அவைகளை விடுவதற்கு மனம் வரவில்லை. நாம் பல காரியங்களை நினைத்து அவைகளைக் கைவிடுவதே யில்லை. கிளியைப் போன்று நாம் கேட்டவைகளையே நினைத்துக்கொண் டிருப்பதல்லால் அவைகளை நடைமுறையிற் கொண்டுவர முன் வருவதே யில்லை. இவைகளுக் கெல்லாம் என்ன காரணம்? சரீர பலவீனமே. இத்தகைய பலவீனமான மூளையை நாம் அடைந்திருப்பதாலேயே நாம் ஒன்றையுமே செய்து முடிக்க இயலாதவர்களா யிருக்கிறோம்.*

The “Prabudha Bharatha,” Calcutta.

---

# ஆசிரியர் குறிப்புகள்.

## சந்தா நேயர்களுக்கு

சென்ற நவம்பர்மீ “நவீன பாரதி”யில் “அதற்கு முன் 3 மாதம் சஞ்சிகை வெளிவராது போயினமைக்கு ஈடாக அனுபந்த மொன்று அச்சிட்டு உதவுவதாய் எண்ணியுள்ளோம்” என ஆசிரியர் குறிப்பில் குறிப்பிட்டிருந்ததை அன்பர்கள் கவனித்திருக்கலாம். மேற் குறிப்பிட்ட சூசிகையானது பிறர் கலப்பின்றி நம்மைப் பொறுத்ததாகவே யிருந்ததால் அப்போது ஸ்திரமாக அறிவிக்க முடியாமல் டிசம்பர் அல்லது ஜனவரியில் அறிவிப்பதாகக் குறிப்பிட நேர்ந்தது. இப்பால் சிறையில் வதியும் ஆசிரியர் திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்களின் கருத்தையும் இன்னும் சில அறிஞர்கள், அன்பர்களின் ஆலோசனையையும் அறிந்ததில், அவர் தம் எண்ணங்களனைத்தும் ஒன்று போலவே எமது கருத்துக்கு மாறுபடுவதா யிருக்கிறது. அவ் வறிவிப்பினை ஈண்டு வெளியிடுகிறோம்.

“தற்போதுள்ள நெருக்கடியான நிலைமையில் விருத்திக்கான வழிகளெல்லாம் தடைபடுத்தப்பட்டு நிற்கும்போது, ஓர் சின்னஞ் சிறு காரணத்திற்காகக் கடனைத் தீர்க்க வேண்டி-3 மாதம் பத்திரிகை வெளிவராது நின்று விட்டதிற்காக-பத்திரிகை ஒன்றிலேயே வருடந்தோறும் நிகழ்ந்துவரும் ஆயிரக்கணக்கான நஷ்டத்தைக் கருதாம லிருந்தாலும் பயனிலா வழியையா கொள்ள வேண்டும்? வாசக நேயர்கள் மற்றப் பத்திரிகைகள் எவ்விதம் நடந்துகொண்டதென்பதை அறிந்து வருபவர்களா யிருப்பதால் நிலைமையையும் உண்மையையும் தெரிவார்கள் என்னும் நம்பிக்கை பற்றி, அவஸ்யமான விஷயங்கள் படங்கள் மற்றவைகளுடன் வெளிவரத் தகுதியல்லாத திணறடியான இந் நிலைமையில் அனுபந்தம் வெளியிடுவதை மறந்துவிட வேண்டும்” என்பதாகும்.

எவ்வளவு துன்பமடையினும் துக்கமுறினும் இன்பமே யடையினும் தேசப் பணிக்குத் தங்களைத் தியாகஞ் செய்துவிட்டவர்களின் வாக்கு செயல் ஆகியவனைத்தும் உயர்தரமாகவே ஒலித்து உண்மையும் திண்மையும் நல்கி யாவருக்கும் நலந்தருவதா யிருக்கின்றது.

அவர்தம் கருத்து, அனுபந்தம் வெளியிடும் விஷயத்தில் பரந்து விரிந்து எவ்வளவு தூரம் சென்று நிற்கின்றதென்பதை அறிவோருக்கு மேலும் ஈண்டுக் குறிப்பிட வேண்டிய அவசிய மில்லை யென்றே நினைக்கின்றோம்.

இந்த டிசம்பர் சஞ்சிகையுடன் இவ் வாண்டைப் பூர்த்தி செய்து 1931-ம் ௵ ஜனவரி௴ முதல் புது வருடமாகப் பத்திரிகையை ஆரம்பிப்பதாகவுள்ளோம். ஆகையினால் அன்பர்கள் தங்கள் தங்கள் சந்தாத் தொகையை விரைவில் ஜனவரி௴ 25உக்குள் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிச் சிரமத்தைப் போக்கி ஊக்கத்தை நல்கி உதவி புரிவதுடன், இப் புதிய ஆண்டின் பரிசாக, ஒவ்வொருவரும் ஒவ்வோர் புதிய சந்தா அன்பரையேனும் அவஸ்யம் சேகரித்துப் "பாரதி"க்கு உதவுமாறு பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

இச் சஞ்சிகை வெளிவர வேண்டிய காலத்திற்குப் பின் சிறிது தாமதமாயே இப்போது வெளியீடு செய்தலைப்பற்றி இங்குச் சற்றுக் குறிப்பிட வேண்டியதும் அவஸ்யமாக விருக்கிறது. முக்கியமான சில கட்டுரைகள், இம்மணி அச்சிட்டு முடியுந் தருவாயில் கிடைக்கப் பெற்று அதுவும் இதில் வெளிவர விரும்பியதால், 32 பக்கங்கள், அளவில் அதிகமானது குறித்து நேர்ந்த தாமதத்தை மன்னிக்க வேண்டுகின்றோம். அன்பர்கள் பொறுப்பார்களாக.

## வாழ்க நம் பண்டித நேரு

பண்டித மோதிலால் நேரு சிறையினின்றும் விடுதலை யடைந்த பின்னரும் நெடுநாட்களாக நோயினின்றும் குணமாகாது மிகவும் கஷ்டப்பட்டும் காந்தலும் இருமலும் ரத்தம் கக்குதலுமாகிய சிரமத்துக்குள்ளாகி வந்து, தற்போதே குணம் கிடைக்கப் பெற்று வருகிறதாகச் செய்தி யறிந்து மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம்.

பண்டித நேருவைப் பற்றியோ, அவரது தியாகம், குணம், செயல் ஆகியவைகளையோ—அவர் தம் குடும்பத்தைப் பற்றியோ ஈண்டு விவரிக்க வேண்டிய அவஸ்ய மில்லை. இந்தியராவோர் அவரின் செயல் குணம் குடும்ப நிலைமை யாவும் நன்கறிந்தே இருப்பர். அவரது நோய் நீங்கிப் பூரண சௌக்ய முற எம்பெருமானை வழுத்தி நிற்கின்றோம்.

## விடுதலை யடைந்த மாளவியா ஜீ

இன்று தேசியப் போராட்டத்தில் சிறியாரென்றோ பெரியாரென்றோ பெண்களென்றோ சிறுமிகளென்றோ சொல்வதற்கின்றி சம்பந்தப்பட்டு வருகிறதினால், தேசியத்தின் தன்மையைப் பற்றி



உள்ளபடி சொல்லச் சாத்தியமில்லாம லிருக்கின்றது. போராடுவோர் சிறைபுகவே அவர்களுக்கு அனுதாபம் காட்டுவோரும் சிறைபுக நேர்கின்றது. இவ்விதமே கக்ஷிபேத மின்றி மதபேத மின்றி தேசப் பணி செய்து வருகின்றனர்.

பண்டித மதன்மோகன் மாளவியாவும் இவ்விதமே தேசியத்தில் ஈடுபட நேர்ந்தது. தேசத்தின் தீவிர நிலைமையால் பூரண ஞானமுடைய இவர், அதனை மறுக்காது அவ்வாறே ஏற்றுச் சிறை புகவும் துணிந்து சிறைக் கோட்டத்தையும் பெற்று அதன் இயல்பையும் கண்டு அறியச் சென்றவர் போல் மகிழ்வுடனே இருந்து வந்தார்.

உயர்ந்த சௌகரியத்தில் வசித்தவர்களுக்கும் வயது சென்றவர்களுக்கும் வாடிக்கை யில்லாதவர்களுக்கும் சிறை வாழ்வு சில நாட்களுக்குக்கூடச் சகிக்கச் சாத்தியமிருக்காதென்றே, நிகழ்ந்துவரும் செயல்களால் அறிய முடிகிறது. தற்போது பண்டிதருக்கோ வயது மிக அதிகம் ஆகும். சமீபத்தில் தான் இவரின் 70-வது வயதுப் பூர்த்தி விழா நடைபெற்றது. இந் நிலைமையில் சிறையில் வதிவதானால், எவ்வளவு வசதி செய்துகொடுத்திருப்பினும் சாத்திய மில்லை யென்றே சொல்லல் வேண்டும். சில நாட்களாகப் பண்டிதர், நோயில் அவதிப்படவும் பலவீன மடையவும், தேசத்தின் கவனமும் அரசியலாரின் எண்ணமும் ஒருங்கு சேர, மிக விரைவில் சிறையினின்றும் நோயின் காரணமாகவே விடுதலை யடையப் பெற்றார். கூடிய சீக்கிரம் இவர் பூரண சௌக்யம் அடைந்து முன்போல் தேசப் பணி செய்ய ஆற்றலுடையவ ராமாறு தேவி அருள் புரிவாளாக.

## தலைவர் படேலின் பரிதாப நிலைமை

ஓர் சமயம் இந்திய அரசாங்கத்தையே ஆட்டி வைத்த எம்பிரான் வித்தல்பாய் படேல், இன்று சிறையில் துன்பமுற்று வரும் நிலைமையை யறிய எம்து உயிர் நடுங்குகின்றது; உடல் வாடுகின்றது; கரணங்களும் செயலற்று விடுகின்றது. அந்தோ! அடிமை இந்தியாவில் ஏதேதெல்லாம் அடைய வேண்டி யிருக்கின்றதோ! என்னவெல்லாம் நிகழ வேண்டி யிருக்கின்றதோ யாரறிவார்!!

இந்தியாவின் சட்டசபையில் தலைவராக அமர்ந்து நாட்டுக்கும் அரசாங்கத்திற்கும் நம்பகமாக நீண்ட காலம் செம்மையுற நடந்து இறுதியில் சர்க்காரின் போக்கை உணர்ந்து ஜனங்களுக்கு அஃது பயன்தரா தென்பதை அறிய உணர்த்தித் தமது கொள்கையைப் பல் வழிகளிலும் சட்டசபையில் நிறுவி இதற்கு முன்னும் பின்னும் இவ்விதம் திறமையுடன் தலைவராக வந்தவர் இலர் எனச் செப்பும் தன்

மையில் தலைமையைக் காத்துக் கௌரவித்து நாட்டுக்கும் நம்பினோருக்கும் உண்மையான உழைப்பாளியாகிச் சர்க்காரின் அடக்கு முறையைச் சகிக்காது, ராஜினாமா செய்து தேசியத் தொண்டி லீடுபட்டுச் சிறை புகுந்து அம்பாலா என்ற சிறையில் வதிந்து வரும்போது, திரு. படேல் சிறை வாழ்வினால் அசௌக்கிய முற்றதும் அதுவே கடினமான நோயாக மாறி பல்வேறு நோய்களுக்குக் காரணமாகி வைத்தியர்களால் சோதித்தும் கண்டு பிடிக்கச் சிரத்தை யில்லாதவர்களாகிச் சிரமமே யடைய நேர்ந்தது. இவ்விதம் ஸ்ரீ படேல் துன்ப மடைந்து வருங்காலையில் அம்பாலா சிறையிலிருந்து கோயம்புத்தூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டு மிகவும் அபாய திசையிலிருந்து வருகின்றார்.

அவர்தம் நிலை, நடக்கவும் சக்தி யற்று ஓர் சிறு பள்ளமோ மேடோ ஆகிய விடங்களில் ஏற இறங்கவும் சாத்தியமற்றதாகத் தெரிகின்றது. இவ்வித நிலைமையில் கோயம்புத்தூரில் வைத்தியப் பரீட்சை செய்ய ஜெயிலின் ஓர் புறமுள்ள விடத்திற்குச் செல்லவும் நேர்ந்ததாம். அந்தோ! இஃது இம்மட்டோ!! அங்கு நடந்துவந்த களைப்புடன் பரீட்சைக்காக வைக்கப் பெற்றிருந்த கட்டிலில் வைத்தியர் குறிப்பிட்ட வண்ணம் அமர்ந்து படுக்கவும், தலைப்புறமுள்ள இரும்புக் கம்பி முறிந்துவிடவே திரு படேல் கீழ் விழுந்து அபாயத்திற் குள்ளாகவும் நேர்ந்ததாம். அவ் வமயம் ஜெயில் பார்வையாளராக வந்திருந்தவர்களின் துணையால் சிரமம் போக்கி இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட தென்றும் அறிகின்றோம். ஏற்கெனவே நோயுற்ற சரீரத்திற்கு. எதிர்பாராத இந்த விபத்தும் சேரவே மிகவும் ஆபத்தாகவே தோன்றுமென்றே தெரிகிறது. ஜெயில் விசிட்டர்களின் அறிக்கையினால் கட்டிலிலிருந்து விழுந்தது முதல் தலையில் வலி யிருந்து வருத்தி வருகிற தெனவும் தெரிவித்ததாகக் காணப்படுகிறது. தற்போது திரு. படேலை இரு சொந்த டாக்டர்கள் சோதித்து, நிலைமையையும் விளக்கமாக எடுத்துரைத்து, சிறையிலிருந்தே சிகிச்சை செய்ய விரும்பினால் போதிய வசதி யில்லை யெனவும், அவசியம் வசதிகள் நிரம்பிய தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் குழுமி யிருக்கும் ஐரோப்பாக் கண்டத்திற்கோ அல்லது வேறிடத்திற்கோ மாற்ற வேண்டு மெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதிலிருந்து அவரின் அபாய நிலைமை நன்கு தெரிகின்றது. இனியும் அவரை இந்தியர் யாவரும் ஓரே விதமாக மதிக்கும் திரு. படேலை-அரசாங்கத்தையே ஓர் சமயம் திக்குமுக்கா டடையும்படி செய்ததிற்காக, இவ்விதம் இம்சிக்கின்றார்க ளென்றெண்ணி வருவதை நிவர்த்திக்கவேண்டியேனும் உடனே அவரை விடுதலை செய்ய வேண்டும். வெள்ளம் அணை கடந்து சென்ற பின்னரே கவனிக்கும்



சுபாவத்தைக் கொண்ட இந்திய அரசாங்கம் இவ்வித சந்தர்ப்பத்தில் தன் இரு கண்ணையும் இமையாது கவனித்து அரசாங்கத்தின் நேர்மையையும் பார்லிமெண்டின் மானத்தையும் காப்பாற்ற வேண்டியது அவஸ்யமாகும். இதிலெல்லாம் ஜனங்களின் வெறுப்பையோ துவேஷத்தையோ அடைவதானால், உள்ள நம்பிக்கையும் மறைந்துவிடுமென் றெச்சரிக்கின்றோம் ஆகையினால், ஜனங்களின் விருப்பத்தை மதித்து திரு. வி. ஜே. படேலின் நிலைமைக் கிரங்கிச் சிறிதும் தாமதியாது விடுதலை செய்வதை விரும்புகின்றோம். அரசாங்கத்திற்கு இவ் வழியில் கௌரவமும் ஒரு சிறிது நன்றியும் காத்து நிற்கிறது. கவனித்துக் காலத்தில் செய்யும் பணியைச் செய்வதை விரும்பி எதிர் பார்க்கின்றோம்.

## இலங்கையின் பெருங் கிழவர் பிரிந்தார்

சென்ற மாத இறுதியிலே சர். பொன்னம்பலம் இராமநாதன் தமது 80-ம் பிராயத்திலே கொழும்புமா நகரிலே தேகவியோக மாயினா ரென்றறிய மிகவும் விசனிக்கின்றோம்.

இலங்கையில் பன்னெடுநாள் தனது காலத்தைப் பொதுஜன சேவைக்கே ஈந்து அரசாங்கத்தாராலும் ஜனங்களாலும் நன்கு மதிக்கப் பெற்று இலங்கையினர் யாவருக்கும் ஒப்பற்ற தலைவராய் மிளிர்ந்தா ரென்னில் இவரின் ஊழியத்தைப் பற்றி எவ்வாறு புகழ்வோம்.

இவர், யாழ்ப்பாண நிலைமையை நன்கு அறிந்து சைவர்கள் மிகுதியோரிருந்தும் புறச் சமயத்தாரால் நடத்தும் வித்யாலயங்களே மிகுதியும் இருந்து வருவது கண்டு, அங்குக் கற்போரிற் பலரும் சமய நம்பிக்கை யிழக்க நேரிடு மென்று உண்மை யுணர்ந்து, இராமநாதன் கல்லூரியை நிறுவி பெண்களுக்கும் அவ்விதமே அமைத்து இரு பாலார்க்கும் கல்வியையும் சைவத்தையும் நல்கி அவர்களின் க்ஷேமமே தம் நலமெனத் தம் பொருளை வாரி இறைத்து வளர்த்து வந்தார். இதுவன்றி இவரின் ஆங்கில பாஷா அறிவு அறிஞர்களாலும் மெச்சக்கூடிய தாயு மிருந்ததுடன் தமிழிலும் வல்லுனராக இருந்து சில இலக்கியங்களும் இலக்கணங்களும் சுயமே இயற்றியும், ஆரியத்தினின்றும் தர்ஜமா செய்தும் நல்கியுள்ளதாகத் தெரிகின்றது. இன்று இலங்கை தனது ஒப்பற்ற அறிஞரை, தியாகியை, ஓர் பெருந் தலைவரை இழந்து விட்டது. தமிழுலகம் ஓர் பெரும் புலவர் சிகாமணியைத் துறந்து விட்டது. சைவ சமயமோ வல்லமையுள்ள மைந்தனை மறைத்துக் கொண்டது. உலகமோ ஓர் சீர்திருத்த வாதியை இழந்து துக்கிக்கின்றது. இவர்தம் பிரிவால் இன்று உலகமே பெரும் நஷ்ட முற்று விட்ட தென்றே சொல்லல் வேண்டும்.

தாயிழந்த கன்று போல் வாடி நிற்கும் இலங்கை வாசிகளாகிய சோதரர்களனைவருடன் கூடி, சர். பொன். இராமநாதன் அவர்களின் ஆன்மா சாந்தி பெற எம்மிறை பொருளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

## வெள்ளப் பிரவாகமும் தமிழ் நாடும்

சென்ற அக்டோபர் முதலே வருணனின் சீற்றம் தமிழ் நாட்டினிடத்தில் மெல்ல மெல்லப் பாய்ந்து ஓரே மழையாக மாதக் கடைசிக்குள் நாட்டின் பல பாகங்களிலும் இன்னல் விளைவித்து விட்டது. மழை சிற்சில சமயமே கொடூரமாயிருந்த தென்றாலும் அபாயம் நிகழாதெனவே ஜனங்கள் எண்ணியிருந்தனர். அவர்களின் எண்ணம் அவ்வளவும் பொய்த்துப் போகவில்லை யென்றே சொல்லல் வேண்டும். எனினும், நிலங்களெல்லாம் நீர்ப் பெருக்கால் மூழ்கியும் ரயில் பாதைகளெல்லாம் வெள்ளத்தால் கொண்டு செல்லவும் பாலங்களெல்லாம் அழிக்கப்பட்டும் விட்டதினால் போக்கு வரத்தும் நிகழ இயலாததாய் விட்டது. சில கிராமங்கள்கூட வெள்ளத்தால் பாதிப்படைந்து விட்டது. எங்கும் எப்போதும் ஏழை,ஜனங்களே இந்த வெள்ளத்தினால் அவதியுறுகின்றனர். அக்டோபர்—நவம்பர் மாதங்களின் மழைத் தொல்லையால் பெரிதும் நாசமடைந்த நிலப் பரப்பு, தஞ்சாவூர் ஜில்லா முழுதும் திருச்சி ஜில்லாவின் ஓர் சில பகுதியுமே யெனலாம். நீரால் நாசமுற்றுப் பாழடைந்த நிலத்தைச் சென்னைக் கவர்னர் பார்த்தும் சென்றார். சில விடங்களில் தஞ்சை ஜில்லாவில் மட்டும் நிலத்தின் வரிவஜா, வருட மொன்றுக்கு மட்டும் செய்யப்பட் டிருக்கின்றதென அறிகிறோம். வெள்ளத்தால் பாழடைந்த நிலத்தினின்றும் வரி வசூல் செய்வதை நிறுத்தி வைக்கவோ வஜா செய்யவோ கவர்னர் போன்றார் வந்து குடியானவர்களைக் கண்ணைத் துடைக்க வேண்டிய அவஸ்ய மில்லை. அவர்கள் நிலம் சீர்கெட்டு விட்டதைச் செப்பனிட்டு முன் னிலைமைக்குக் கொணரப் பண வுதவியும் பிற சௌகர்யாதிகளும் செய்யவே சர்க்கார் துணிவு கொள்ள வேண்டும். இந்தியா விவசாயிகள் பெருத்த நாடு. தென்னாட்டில் நீர் வளத்திலும் நில வளத்திலும் சிறந்த பிரதேசம் தஞ்சை ஜில்லாவாகும். தோன்றும் வெள்ளப் பெருக்கெல்லாம் பிரதானமாக இந்த ஜில்லாவின் நிலங்களையே பாழாக்கி விடுகின்றது. இதற்கு முன், சென்ற 1924-ம் வருடத்தில் நிகழ்ந்த வெள்ளச் சேதத்தாலுற்ற நஷ்டம் இன்னும் அங்குப் பூரணமாக மறையா முன்னம், பின்னும் அவ்வித விபத்துக்கே இலக்காக நேர்ந்தது பற்றி வருந்தாதிருக்க முடியவில்லை.

அரசாங்கம், தனியாக இந்தத் தஞ்சை ஜில்லாவை மட்டும் வெள்ளப் பெருக்கிலிருந்து காக்கப் புதிய வழி யொன்று கண்டு பிடித்துக், குடிகளுக்கு நலஞ் செய்ய வேண்டியது அவஸ்யமாகும். மேலும் இவ்விதமே கஷ்டமடைந்து வருவதாயின் இன்னும் சில தடவைகளில் தஞ்சையின் செல்வமும் பிறவும் பயனற்றனவாய், நிலம் வெறுந் தரிசாய் ஜனங்கள் விரும்பா விதமாக ஆகிவிடுமோ வென அஞ்ச வேண்டி யிருக்கின்றது. ஆதலால் அரசாங்கம், வேண்டியது செய்ய உடனே கவனஞ் செலுத்தி வளம்பல செறிந்து தமிழ் நாட்டின் நாயகமா யிலகும் தஞ்சையைக் காக்குமாக.



## வெள்ளம் பெருகிய சென்னை மாநகர்

நவம்பர் இறுதியில், ஓர் 3 தினங்களடித்த மழையால் சென்னை நகரமே நீரில் மிதப்பது போன்று தோன்றியதிலிருந்து மழையின் வேகத்தை ஒருவாறு உணரக்கூடும். அநேக ஆண்டுகளுக்குப் பின் இவ்வளவு பெரு மழையும் கடும் காற்றும் இப்பொழுதுதான் சம்பவித்திருக்கிறதென அறிவிக்கின்றனர். சென்னையில் ஆங்காங்கு சேரிகளும் குப்பங்களும் பாக்கங்களும் உண்டு. இங்கெல்லாம் மிக மிக எளியவர்களின் வாசமே அதிகம். எனினும், அவர்தம் இல்லங்களோ மாட மாளிகை யல்ல; கூடகோபுரங்களால் அமைந்த மெத்தை—அடுக்கு மெத்தை வீடல்ல. சென்னை சென்று சில நாள் அங்கே தங்கி இப் பகுதியைக் காண்போருக்கே இதன் உண்மை புலனாம். சென்னை நகரின் உட்பாகம் அலங்காரமாகவே தோன்றுமெனினும், வெளிப்புறம் முழுதும்......................என்று திட்டமாய்ச் சொல்லிவிடலாம். எமது ராஜதானியின் தலை நகரில் வசிக்கும் ஏழை எளிய கூலி ஜனங்களின் நிலைமையே இவ்வாறிருக்கின்றதென்றால் ஈதென்ன பரிதாபம்!

சென்னையிலுற்ற பலத்த காற்றும் மழையும் திரண்டு முதலில் நகரத்தையும் நகரின் புறத்தையும் சாடி, ஏழைகளின் குடிசைகளையெல்லாம் உண்டு ஏப்பமிட்டு, அவர்களின் ஒன்றிரண்டான பண்டங்களையும் அணிமணிகளையும் கூடக் கைப்பற்ற விடாது துரத்தித் தன்னந் தனியராகப் பிள்ளைகள் சகிதமாகவும், இன்னும் பல்வேறு விதமாகவும் உயிர் ஆசை கொண்டவர்களாக நீரிலாவிடஞ் செல்லும் நிலைமையினர்களாய்த் துடிதுடித்துப் பதைபதைத்து நகரை யடையத் துணிந்து செல்லும்போது, ஆங்கும் நீரால் தடுக்கப்பட்டவர்களாக அல்லோல கல்லோலப்பட்டு வருந்தினரென்றால், அவர்தம் நிலைமை சொல்லத்தான் கூடியதோ! எண்ணத்தான் சாத்தியமானதோ!!

இதிற் பெரும்பாலும் பெரம்பூர் பாரக்ஸில்தான் மிக மிக ஜனங்கள், வீட்டை இழந்தும் சாமான்களைக் கொள்ளை கொடுத்தும் பரிதவித்தனரென்று தெரிகிறது. வெள்ளத்தால் சிரமப்பட்டு உணவுக்குத் திண்டாடியவர்களுக்கும் உடைக்குக் கஷ்டப்பட்டவர்களுக்கும்

ஒருவாறாகச் சென்னை வாசிகளும் கார்பரேஷனரும் உதவி செய்தனரெனினும் இஃது போதிய உதவியாகாதெனவே தோன்றுகின்றது. குடிசை இழந்தவர்களுக்கும் பொருள் இழந்தவர்களுக்கும் சொற்ப சகாயமேனும் செய்து அவர்கள் வாழ்வுக்கு உறுதுணையான உதவி செய்ய வேண்டியது முக்கியமாகும். இதற்கெல்லாம் அரசாங்கத்தின் பிரவேசமே முதலாவதாயிருக்க வேண்டும். எங்கே! இவ்வித உத்தமமான காரியாதிகளைக் கவனிக்கவா சர்க்காருக்கு நேரம்!! எவன் காங்கிரஸின் பேரால் பேசுகிறான், எழுதுகிறான், செய்கிறான் அவனைச் சந்தேகிக்கவும் பிடிக்கவும் தண்டிக்கவுமே நேரமில்லாத போது, தேசிய வாதிகளைப் புறங்காண, மேலும் ஆட்களைத் தேடிப் பிடித்து எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டிருக்கும் போது, மேலே குறிப்பிட்ட நற்செயல்களுக்கெல்லாம் செலவிடக் காலமெங்கே? பணமெங்கே? ஆட்களெங்கே யிருக்கும்?

## லண்டனிலா இந்து முஸ்லீம் ஒற்றுமை?

இந்திய இராஜீய சிக்கல்களைக் களைந்து இந்தியருக்கும் பிரிட்டிஷாருக்கும் சம்மதமான முறையில் ஓர் இராஜீயத் திட்டம் வகுப்பான் வேண்டி இந்தியப் பிரதிநிதிகளும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களிற் சிலரும் லண்டன்மா நகரிற் கூடிப் பேசித் தீர்மானிக்க, சென்ற நவம்பர்மீ 12உ முதல் அந்த வட்ட மேஜை மகாநாடு ஆரம்பமாகிச் சில கூட்டங்களும் நடைபெற்றன. அவைகளில் இராஜீயத் திட்டம் வகுப்பதற்கு முட்டுக் கட்டையாக நிற்பது, இந்து முஸ்லீம் ஒற்றுமையடைய வேண்டிச் செய்த முயற்சி சிலாக்கியமல்லாது முடிந்ததானென்று அறிய வருந்தாதிருக்க முடியாது. வட்ட மேஜை மகாநாட்டுக்குச் சென்றிருக்கும் இந்தியர்களோ மற்றவர்களோ தேசத்தாரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பொதுஜனப் பிரதிநிதிகளல்ல. யாவரையும் இந்திய அரசாங்கமே நியமித்து அனுப்பியதாகும். எனினும் இப் பிரதிநிதிகள் திரமையிலோ சுதந்திரத்தில் விட்டுக் கொடுக்கும் தன்மையிலோ தாழ்ந்தவர்களல்ல வென்றே சொல்லத் தகுதியுடையவர்களா யிருந்தாலும் 6000 மைலுக் கப்பால் சென்றும் தங்கள் மதப் பித்தத்தால் தேசத் துரோகம் செய்யப் பிரவேசிப்பது முற்றிலும் பெரும் ஆபத்தாகவே முடியும். வட்ட மேஜைப் பிரதிநிதிகள் கப்பலேறும் போது, இந்தியாவின் நிலைமை என்ன? இன்று உள்ள நிலைமை யென்ன? நிலைமையில் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்திருக்கின்றதா? தேசீய இயக்கத்தில் இதுபோது 60,000 உத்தம பாரதப் புதல்வர்கள் புதல்விகள் சிறைக் கோட்டத்திலே போக பாக்கியங்களை மறந்தவர்களாக துன்பத்தையே இன்பமாகப் பாவித்துத் தவமிருந்து வருகிறார்கள். நாளுக்கு நாள் அரசாங்கமோ அடக்கு முறையாலும் அவசரச் சட்டங்களாலும் பிற வழியாலும்



தேசியத்தை ஒடுக்கவே துணிந்து நிற்கின்றது. அரசாங்கத்தின் கடமை, எப்படியும் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்டுவதாகவே சொல்லப்பட்டு வருகின்றது. சர்க்காரின் பிடிவாதப் போக்கால் நாளுக்கு நாள் ஜனங்களின் மனம், உறுதி கொண்டு அபார தியாகத்தையும் செய்து தேச விடுதலைக்கே உயிர் உடலிற்றங்கி யிருப்பதாகவும் கருதும் நிலைமைக்கு வந்து விட்டது. இவ்வித ஜனங்களை அடக்கு முறையாலோ பிறவற்றாலோ மடக்குவதோ தடுப்பதோ சாத்தியமானதென இன்னும் அரசாங்கம் அறியாது தவித்துக்கொண்டிருக்கின்றதிற் கிரங்காதிருக்க முடியாது.

இந்தியாவில் நிலைமை இவ்வித மிருக்க, இந்தியருக்கு இராஜீய அமைப்புத் திட்டம் வகுக்க லண்டன் சென்றுள்ள பிரதிநிதிகளின் செயலோ மிகவும் வருந்தும் நிலையா யிருக்கின்றது. இந்தியா மிக மிகப் பெரிய தேசம். 33 கோடி ஜனத்தொகையுள்ளதும் பல்வேறு ஜாதி பாஷை மதம் ஆகியவற்றிற்குள் அமைந்ததுமான அடிமை நாடு. ஆளும் நாடோ, இந்தியாவில் 13ல் ஓர் பங்குள்ளதும் $4\frac{1}{2}$ கோடி ஜனத்தொகையைப் பெற்றதும் பல வளங்கள் குறைந்து உணவுக்கும் பிற தேசத்தையே எதிர்பார்க்கும் தன்மையதுமான பிரிட்டன், இது இன்று இந்தியாவின் செல்வங்களையோ கலைகளையோ கலா வல்லுனர்களையோ மதியாது, மமதையால் செருக்குண்டு நிற்கிறதைக் காணலாம். வட்ட மேஜைக்குச் சென்றுள்ள பிரதிநிதிகளிற் பலர், பெரும் அறிஞர்கள் எனினும் அடிமை நாட்டிற் பிறந்த தோஷத்தால் மதிப்பிழக்கும் சந்தர்ப்பங்கள் நிகழ வேண்டியதாயிற்று. இவ்வாறெல்லாம் கேவலப்படினும் இன்னும் மதம் ஜாதி என்ற அந்தகாரத்தில் சிக்குண்டு பின்னும் விடாப் பிடியாக நின்று சென்றகாரியத்தை விரைவில் முடிவுக்குக் கொணராது தாமதம் செய்து வருவது, இரத்தத்தில் நெடுங் காலம் ஊறிய அடிமைப் புத்தியின் குணமோ இந்தியாவின் துரதிஷ்டமோ யாதோ அறியக்கூட வில்லை! இது பற்றி விசால புத்தியுள்ள இந்தியன் வருந்தாதிருக்கக் கூடவில்லை. தேவி பாரதியின் அடிமைத்தளை களைவதற்கு ஏற்ற காலத்தில் அநும் மக்கள் பல்லாயிரர் செல்வங்களைத் துறந்து லோகங்களை மறந்து துன்ப முற்று வருட்போது லண்டனிலா ராஜிய அமைப்புக்கான கூட்டம் வேண்டும்? இந்து முஸ்லீம் ஒற்றுமை அங்குதானா முடிவுறப் போகிறது?

வட்டமேஜை மகாநாட்டைப் பற்றிப் பலர் பலவாறு ஜோஸியம் சொல்லி விட்டனர். மேலும் பலர் இன்னும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் ஜோஸியமெல்லாம் எவ்வளவு தூரம் உண்மையா யிருக்குமென்றறியத் தற்போதைய நிலைமையில்

தடையா யிருப்பவர்கள் இந்து முஸ்லீம் பிரதிநிதிகளே. இவர்கள் தங்கள் பிரச்சினையை இந்தியாவினிடம் விட்டு விட்டுச், சென்ற விடத்தில் புத்திசாலித் தனமாக நடந்திருந்தால் மிக விரைவில் ஓர் முடிவுக்கு வந்திருக்க முடியும். அதிலிருந்து பிரிட்டிஷாரின் தந்திர ஜாலங்களும் உண்மை நோக்கமும் நன்கு தெரியலாம். ஒன்றையுமே அறிய முடியாதபடி சின்னஞ்சிறு விஷயங்களுக்காகவும் திட்டமிட்டுச் செய்யும் நிலைமைக்கு முன், அதன் பலாபலனைப்பற்றி ஆராயும் கூட்டத்தை மிகத் தடபுடலாக நடத்தி ஆரவாரமான அழகிய வார்த்தைகளால் அடுக்கி முடித்து விடுவதில் விளையும் பயனென்ன?

இந்தியர் விஷயத்தில், கன்சர்வேடிவ், லிபரல், லேபர் பார்ட்டிகள் யாவும் ஒரேமுக மாகவேதான் வேலை செய்யும். அபிப்பிராயமும் ஒரேவித மாகவேதா னிருக்கும். இதில் மயக்கமும் கவலையும் கொள்ள வேண்டியதில்லை. ‘தன் கையே தனக்குதவி’ என இந்தியர்கள் கருதின லல்லாது ஏமாற்ற மடைந்து காலத்தையும் மனத்தையும் இழக்க வேண்டியதேயாகும்.

வட்ட மேஜைக் கூட்டத்திற்குச் சென்றுள்ள இந்தியப் பிரதிநிதிகளுக்கு நாளுக்குநாள் பொறுப்பு அதிகரித்து வருகின்றது. இந்தியாவுக்கு அவர்களால் நன்மை செய்ய முடியாது போயினும் அவஸ்யமில்லை. ஆனால் மானத்தை இழந்தோ காட்டிக்கொடுத்தோ வந்துவிட வேண்டாமென்றே அறிவிக்க வேண்டியது இந்திய ரொவ்வொருவரின் கடமையா யிருக்கின்றது.

துவேஷமும் குறுகிய நோக்கமும் அவநம்பிக்கையும் மதப்பித்தும் கொண்டு சகோதர பான்மையும், பரந்த எண்ணமும், சமத்வத் தன்மையும், சுதந்திரப் பற்றும் கொள்ளாது பிரதிநிதிகள் ஆரம்பத்தில் இந்தியர்கள் விருப்பத்தை மதிக்காமற் சென்றார்களானாலும் இன்றுள்ள நிலைமையை யுணர்ந்து ஆற்ற இவர் தம் தொண்டை எதிர்பார்க்கும் இந்தியாவுக்கு வேண்டியதைச் செய்வார்களாக.

## புரட்சிக்காரர்களின் பயங்கரச் செயல்கள்

க்ஷாத்திரங் கொள்வதையோ பழி வாங்குவதையோ கனவிலேயும் எண்ணாத இந்தியா, பிரிட்டிஷாரின் ஆட்சியின் பழக்கத்தால் புரட்சியில் நாட்டங் கொண்டு, இந்தியாவின் வட திசையில் ஆங்காங்கு தனித்தனியாகப் புரட்சியினர் சில காலமாக மிக மிகப் பயங்கரச் செயல்கள் செய்து வருகின்றார்கள். இவர்களின் கொள்கை, தேசத் துரோகம் செய்கின்றவர்களையும்—தேசீயத்திற்கு இடையூறாக நிற்போர்களையும்



கண்டிப்பதாகவே தோன்றுகின்றது. இவர்களின் தொண்டு, அஹிம்சை இந்தியாவில் ஹிம்சையை உண்டாக்கி நாட்டுக்கும் ஆட்சியினருக்கும் தீங்கு விளைவிப்பதா யிருப்பதால் இவர்களுக்காகவே சில பிரத்தியேகச் சட்டங்கள் இயற்றப்பட் டிருக்கின்றது. இச் சட்டங்களின்படியே புரட்சிக்காரர்களைப் பிடித்து விசாரித்தும் தண்டித்தும் வருகின்றனர். சென்ற 2 வருடங்களாக இவ் வியக்கத்தினர் விரிந்து பரவி, சில அபாய அபாரச் செயல்களைச் செய்திருக்கின்றன ரென்று பத்திரிகை வாசிப்போர்க ளறிவர். இவைகளில் மீரத், லாகூர்ச் சதிவழக்குகள் முந்தியவை யாகும். இதற்குப் பின்னும் சில விடங்களில் தனித்தனியே குண்டுகள் எறியப்பட்டு கேஸ் நடந்து வந்திருக்கின்றது. இவ்விதம் இந்தப் புரட்சிக்காரர்கள் தங்கள் உயிரையும் மதியாது திரணமாக நினைத்துத் தேச விடுதலைக்காக வேலை செய்து வருவதாகச் சொல்லப்பட்டு வருவதை அஹிம்சை இந்தியா ஒப்புக் கொள்ளுவதாகவில்லை. வைசிராயின் வண்டியில் நிகழ்ந்த வெடி குண்டுச் சம்பவத்தி லிருந்தே காங்கிரசின் உயரிய உண்மை எண்ணத்தை அரசியலார் நன்கு அறியச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தியாவின் நிலைமைக்கு மோசம் செய்வதோ படுகொலை செய்வதோ தகுதி யல்ல வென்பதையும் அதனால் விரும்பிய பலனுக்குப் பிரதியாகத் தீமையே சம்பவிக்கு மென்பதையும் எண்ணிச் சத்தியத்தால் இந்தியாவின் உரிமையைப் பெற்றாலன்றி வேறு வழியில் பிரவேசிப்பது கூடாதென்ற முடிவு கண்டு அதன்படியே நடந்து வரும் பாரத நாடு, எப்படிப் புரட்சிக்காரர்களின் இயக்கத்தை வெறுக்காதிருக்க முடியும்!

சென்ற அக்டோபர் மாத முதலாக நாளிது வரை புரட்சிக்காரர்கள் மிகவும் துணிவுகொண் டுள்ளார்க ளென்று சொல்ல வேண்டும். உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பம் ஆவதற்கு முன்பே தோன்றி பல விடங்களில் வெடி குண்டுகளை வீசி வந்துள்ளனர். எனினும், அவர்கள் அச் செயலினை லெல்லாம் ஜெயம் பெற்றவர்களாகத் தெரியவில்லை யென்றே சொல்லவேண்டும். புரட்சிக்காரர்களும் மனிதர்கள்தான். அதனால் சீற்றமுற்று சிட்சைக் குள்ளாகுவோரும் மனிதரே. இவர்கள் சூழ்நிசயங்களால் வரும் மாறுபாடே அபாயத்திற்குக் காரணமாய் முடிகின்றது. அதுவன்றி அதிகார மமதையும் உத்தியோகச் செருக்கும் கொண்ட சில அறிவிலிகளால் கோப மூட்டப்பட்டும் விடுவதால், ஏற்கெனவே வெறுப்புற்று, ஆவேசத்தோ டலைந்து திரியும் இவர்களுக்கு நெருப்பில் நெய் வார்த்த தொப்பவும், புண்ணில் கோலிட்டுக் கிளறியது போலவும் உந்தப்பட்டுத் தலை கால் தெரியாது இன்னவிடமென் றுணராது எங்கும் வெடி குண்டுகளை வீசி நாசமடையச் செய்கின்றனர்.

அறிவில்லாத சிலரின் செய்கையால், எங்கும் அநியாயம் செய்யப்படுகிறதென்று வதந்தி கற்பித்து வேட்டை நாய்கள்போல் மோப்பம் பிடித்து வரும் உளவறிவோரின் அடாத செயல்களால் மனங் கொதிப்புண்டு புத்திகலங்கி நியாயம்தவறி பொறுப்புள்ள இலாக்காத் தலைவர்களையே மாய்க்க வழி தேடுகின்றனர்.

சமீபத்திலே கல்கத்தா போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், கல்கத்தா ஜெயில் சூப்பெரிண்டெண்ட் ஜெனரல், பஞ்சாப் கவர்னர் இன்னும் சில அதிகாரிகளும் புரட்சிக் காரர்களின் கொடுமைக் காளானார்களென்பது அறிந்த விஷயம். சமீபத்தில் சுடப்பட்ட பஞ்சாப் கவர்னர் சிறிது காயத்துடன் தப்பினார் என்றறிய மகிழ்ச்சி யடைகின்றோம். அன்னவர் சீக்கிரம் பூரண சௌக்கியம் பெற்றாரென்று செய்திகள் வருவதிலிருந்து சந்தோஷ மடையக் கூடியதா யிருக்கிறது.

புரட்சிக்காரர்களின் சாத்மீக மற்ற ஹிம்சைச் செயல்களால் உயிரிழந்தாரனைவருக்கும் அரசாங்கம் மிகவும் கடமைப்பட் டிருக்கின்றது. மேலும் புரட்சிக்காரர்களின் அபாயத்தி லிருந்து தப்பத் தகுந்தவாறு அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டியது அவஸ்யமாகும். இவர்கள் இவ்வித கொடுஞ் செயல்களிற் பிரவேசித்ததற்கு முதற் காரணம், நிரபராதிகளான பொது ஜனங்களைப் போலீசார்கள் கடிகொண் டடித்து இம்சிப்பதாலும் ஜெயில்களில் அன்னவர்களை வாட்டிவதைப்பதாலும் மனஞ் சகியாது சகோதரர்களின் நிலைமைக் கிரங்கித் தடுமாற்ற முற்று உயிரையே தியாகஞ் செய்து விட்டுப் பழி வாங்கும் தொழிலிற் பிரவேசன மாகின்றனர். அரசாங்கம் தயாளத்துடனும் நம்பிக்கை யுடனும் நடந்துகொண்டால் ஆள் தூக்கிச் சட்டந்தான் வேண்டுமோ, கிரிமினல் சீர் திருத்தச் சட்டந்தான் அவஸ்யமோ, ஒன்றுமே வேண்டுவதில்லை. அடக்கு முறையையும் அவ நம்பிக்கையையும் கூடாச் சட்டங்களையும் சர்க்கார் தொலைத்து விட்டால் அன்றே புரட்சியைக் கொன்ற கௌரவம் பெற்றுவிடலாம். தேசம் க்ஷேமமுற, அறிஞர் நிம்மதியுற, வீரர்கள் மகிழ்ச்சி பெற. சர்க்கார் திரும்பக் கோலோச்ச தாராளமாக நடந்து தனது ஜனங்களை நம்ப வேண்டியது, இந்திய அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். அஃது பிரிட்டிஷாருக்கும் இந்திய மக்களுக்கும் பெரும் நன்மையையே தருமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

## நோபில் பரிசு பெற்ற, சர். சி. வி. ராமன்

உலகத்திற்கே கலைக் ஞானத்திற் தக் தாயகமாய் நின்று தனது கலையை வாரி வீசி யாவருக்கும் உயர்வு தாழ்வின்றி நல்கிய இந்தியா, இன்று ஒவ்வொன்றிற்கும் அன்னிய நாட்டையும் அன்னியரையுமே எதிர் நோக்கும் நிலைக்கு வந்துவிட்டது. ஜாதிப் பூசலையும் சமயப் பிணக்கையும் பொது முயற்சிகளிலும் கூடப் புகுத்தும் சமர்த்தர்களாக வந்துவிட்டபோது சாஸ்திர வளர்ச்சியோ ஞானப் பயிற்சியோ பெருக இங்கே இடமேது. அடிமைப் பாரம் முதுகில் மிக அழுத்தமாகச் சுமத்தி யிருக்கின்றபோதும் உயர்வு தாழ்வும், நம்பிக்கை யின்மையும், துவேஷக் கற்பனையும் வளர்கவே துணிவுண்டாகின்றதன்றி, நாட்டின் நிலைமையையும் பெரியோர்களின் தன்மையையும் கலைக் ஞானத்தின் பெருமையையும் அறிய முடிகிறதில்லை. எனினும் ஆங்காங்குச் சில சிற்ப, சித்திர, கணித சாத்திரிகள், கலா வல்லுநர்கள், தத்துவ அறிஞர்கள், ரசாயன பூத பௌதீக விஞ்ஞான நிபுணர்கள் தோன்றாம லில்லை. இவர்களின் ஆராய்ச்சினாலும் கண்டு பிடிப்பினாலும் இந்தியாவின் கலா ஞானத்திற்குப் புதிய பிரகாசம் கொடுத்து வரப்படுகின்றது. இவர்களில் சிறந்து தற்போது விளங்கும் பெரியார்கள் டாக்டர் ரவீந்திரநாத தாகூர், சர். பி. சி. ராய், சர். ஜகதீஸ் சந்திர போஸ், மகாத்மா காந்தி, திரு. ராதா கிருஷ்ணன், சர். சி. வி. ராமன் போன்றவர்களாகும். இவர்களின் தொண்டு இன்று தேவி பாரதியை அலங்கரிப்பதாக விருக்கின்றது.



தென்னாட்டினரில் ஒருவர் இளம் வாலிப பிராயத்தினர் கல்வியில் அறிஞர், சின்னஞ் சிறு வயது முதலே பல அரிய பெரிய காரியங்களையும் சாதித்தும் கண்டு பிடித்தும் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் புகழ் பெற்றவராகிய சர். சி. வி. ராமனுக்கு நோபில் பரிசு கிடைத்த செய்தி யறிய மகிழ்ச்சி யுறார் இலர். மிக்க மகிழ்வுடன் அவர் இப் பரிசைப் பெற்று சுகமே தாயகம் திரும்பிய செய்தி யறிய மேலும் மேலும் ஆனந்த மடைகின்றோம்.

இந்த நோபில் பரிசைப் பற்றியும், அதனை முறைபட அளிக்க சபையொன்றினை யாவரும் மெச்சும் படி வகுத்து, வேண்டிய செல்வத்தை மகிழ்வுடன் உலக க்ஷேமத்தைக் கோரி நல்கிய பெரியாரைப்பற்றியும் "பாரதி"யின் மாலை 2 மணி 7-ம் சஞ்சிகையில், 'ஆர்பர்ட் நோபிள்' என்ற தலைப்பின் கீழ் படத்துடன் வெளி வந்துள்ளதை நேயர்கள் வாசித்தது ஞாபக மிருக்கலாம் எனினும் மறு முறையும் அதனை வாசிப்பது நலமாகும்.

இதுபோது நம் பாரத பூமியில், இந்த நோபில் பரிசு பெற்றவர்கள் இருவராகும். டாக்டர் ரவீந்திரநாத் டாகூர் இலக்கியத்திற்காகவும் சர். சந்திரசேகர வேங்கடராமன் சாஸ்திரத்திற்காகவும் இவ் வெகுமதியினைப் பெற்றிருக்கிறார்கள்.

மேலும் ராமன் தமது ஆராய்ச்சியில் பல உண்மைகள் கண்டு உலகத்திற்குப் பயன் மிகத் தந்துள்ளதை அடுத்த, ஜனவரி சஞ்சிகையில் படத்துடன் வெளி வரும் அவரது சரிதையில் காண வேண்டுகின்றோம். மேலும் மேலும் நமது திரு. ராமன், ஆராய்ச்சியில் அற்புதங்களைக் கண்டு பிடித்து உலகத்தாருக்கு நன்மை விளைவிக்க, எல்லா

வித செல்வங்களையும் சுக க்ஷேமத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்குமாறு எல்லாம் வல்ல கருணை வள்ளலை வேண்டி விழைகின்றோம்.

## போலீசாரின் அதிக்கிரமங்கள்

தேசிய இயக்கம் வலுக்க வலுக்கப் போலீசாரின் அதிக்கிரமமான மூடச் செயல்களும் பெருத்துப் பல தீமைகள் வளர்வதற்கும் காரணமாகின்றது. வட நாட்டில் போலீசார்களின் அடாத செயல்கள்தான், புரட்சிக்காரர்கள் மிகவும் தாராளமாக வெளி வந்து வஞ்சந் தீர்த்துப் பரிசுத்த இந்தியாவுக்கு மாசையுண்டாக்கக் காரணமாயிருக்கிறது. தென்னாட்டிலும் இவ்விதமாக எங்கு எதிர்ப்பு வந்துவிடுகின்றதோவென அஞ்சவேண்டியிருக்கின்றது. இதுபற்றி மிகவும் ஜாக்கிரதையுடன் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கவலையெடுத்துச் சந்தர்ப்பத்தில் சமாளித்து இரு தரப்பிலும் நஷ்டமும் கஷ்டமுமின்றித் திறமையுடன் நடந்துகொள்ள வேண்டியதே முறைமையும் கடமையும் நீதியுமாகும்.

தேசியப் போராட்டம், ஒரு மனிதனுக்கோ அன்றி ஒரு பிரிவினருக்கோ சொந்தமானதல்ல. அன்றியும் அதில் பிரவேசித்தோரனைவரும் தமது சுக போக பாக்கியங்களுடன் உடல் பொருள் ஆவியையும் அர்ப்பணம் செய்தே நிற்கின்றனர். இவர்களிடம் யாரும் தாராளமாக நடந்து கொள்ளலாம். போலீசாரோவெனில் மற்றவர்களைப் பார்க்கிலும் மிக மிகத் தாராளமாகவும் நம்பிக்கையுடனும் சென்று, விஷயமிருப்பின் விளக்கியுரைத்துக் கலந்து செல்லுவதானால் செல்லலாம். அல்லது குற்றஞ் சுமத்தப்பட்டிருப்பினும் சந்தடியும் ஆர்ப்பாட்டமுமின்றி அழைத்துச் செல்லலாம். வீணாக அமளியும் புரளியும் உண்டாக்கின் பாமர ஜனங்களால் தொந்தரவு நிகழவே செய்யலாம். இதற்காக அவர்களை குறுந் தடியாலும் துப்பாக்கிச் சனியனாலும் தாக்கி மேலும் மேலும் அவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பது சரியல்ல. சில உத்தமப் போலீஸாரின் நடத்தையால் அனேக ஜனங்கள் வீணாக மாண்டொழிவதினின்றும் காக்கப்பட்டார்களென்பதை நாம் சமீபத்தில் கண்ட விஷயமொன்றினால் அறிய முடிந்தது. சிட்சித்தால் திருத்தவேண்டும்; அல்லாவிடில் அதில் யாது பயன்? தேசியத்தில் தற்போது போலீஸார் இயற்றி வரும் அடக்கு முறை சமீப காலத்தில் அடியோடழிவதற்கேதுவாகிய குறிகள் காணப்பட்டு வருகின்றதென்றே சொல்லவேண்டும். அப்போதேனும் அதனைப் பின்பற்றித்தானே ஆகவேண்டும். அதற்கு முன், புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால் மோசம் போனதென்ன? ஒன்றுமில்லையே. அதுவுமன்றி ஒருவாறு நல்ல பெயர் கிடைக்கவும் சாத்தியமாகலாம். உயர்ந்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இதனைக் கவனித்தாலன்றி சேவகர்களால் சமாதான



முறையைக் கைக்கொள்ளக் கூடிய அத்தனை இலகுவான விஷயமல்ல. ஆகையினால் சமீபத்தில் கோயம்புத்தூரிலும் இராஜமகேந்திரம் வனபோஜனக் கூட்டத்திலும் நடைபெற்ற தடியடிகளையும் கொடும் வசைமொழிப் பிரயோகங்களையும் போல் மேலும் நடைபெறுதெனப் போதிய முறையைப் போலீஸ் அதிகாரிகள் கைக்கொண்டு ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும். அவ்விதம் செய்வதில் எவ்வளவோ துன்பமும் கஷ்டமும் ஒழிகின்றது. எதிலும் சமாதான முறையைக் கைக்கொள்ளலாமென்ற உண்மையை இதுபோது போலீஸாரே காட்டிக் கொடுக்க வேண்டும்.

## மீண்டும் இரு அவசரச் சட்டங்கள்

தேசிய இயக்கம் ஆரம்பித்து மிக மிக வேகமாக வளர்ந்தோங்கி அரசாங்கத்தையே நடுக்குறச் செய்து பல்வேறு வழிகளில் திணரடிக்கவே, வைசிராய் புதிய சட்டங்களையியற்றி அடக்க வேண்டிப் பிரவேசித்தார். இச் சட்டங்களால் போதிய பயன் விளைந்ததாக யாரும் ஒப்புக்கொள்ளவில்லையென்பதுடன், சமீபத்தில் கல்கத்தா ஐரோப்பிய வர்த்தகர் சங்கத்தில், இர்வின் பிரபுவே, தேசியத்தை அடக்கு முறைகளால் அழித்துவிடவோ சிதைத்துவிடவோ முடியாதெனப் பேசியிருக்கின்றது கவனிக்கத்தக்கது. எனினும் அவ்விதம் பேசிய அந்த லார்டு இர்வினே முன் இயற்றி இறந்துபோன அச்சுச் சட்டத்தைப் பின்னும் சில சீர்திருத்தத்துடன் சிருஷ்டித்தும், வரி மறுப்பைத் தடுக்கும் சட்டத்தையும் இயற்றியிருக்கின்றாரென்று அறிகின்றோம். இத்துடன் அவசரச் சட்டங்கள் 11 ஆகும். தோன்றிய அவசரச் சட்டங்களுடன் இவை இரண்டும் சேர்ந்து அரசாங்கத்தின் கருத்தையும் போக்கையும் சில நாட்களுக்குக் காப்பதாகவே இருப்பினும், அதனால் ஜனங்களினிடத்திலுண்டாகும் துவேஷத்தையும் வெறுப்பையும் சர்க்கார் அறியாமற் போவதே ஆச்சர்யமாகும். பக்ஷமற்ற ஜனங்களாக்கி அடக்கு முறைச் சட்டங்களால் பிணிப்புறச் செய்து எவ்வளவு காலந்தான் இந்தியாவை ஆளமுடியும்!

## புதிய வைசிராய்

ஒன்றுமில்லாத விஷயங்களுக்கெல்லாம் இந்தியாவில் ஜோஸியங்கள் மலிந்து கிளம்புவது வாடிக்கையாயிருக்கும்போது, வைசிராய் ஸ்தாபன விஷயமாய் அனுமானிப்பதிலோ ஜோஸியம் சொல்லுவதிலோ போட்டா போட்டி நிகழாமல் இருக்க முடியுமென்று எங்ஙனம் கூற முடியும்? வரப்போகும் வைஸிராயின் ஸ்தானம் பற்றி எத்தனையோ பிரபுக்களின் பெயர்கள் அடிபட்டன; கனவான்களாகவே வரக்கூடுமென ஒரு சாரார் எண்ணியிருந்தனர். இந்திய மிதவாதிகளிற் பலர், ராஜ குடும்


பத்தினியி லொருவர் இந்திய வைஸிராயாக வருவதை விரும்பி எதிர்பார்த்து மிருந்தனர். சொன்ன ஜோஸியங்களும் எண்ணிய எண்ணங்களும் எங்கோ சென்று மறைந்து விட்டன. என்றாலும் பின்னும் கடைசியாக இரு பெயர்கள் வெளி வந்து அதுவும் அடிபட்டுக் கடைசியாக லார்ட் வெல்லிங்டனே என்று உத்தியோக தோரணையி லுறுதி செய்யப்பட்டது கண்டு ஆச்சரியமுறுவாரில்லை. வெல்லிங்டன் பிரபுவைப்பற்றி இந்தியர்களிலே பம்பாய், சென்னை மாகாணத்தவர்களுக்குத்தான் நன்கு தெரியும். அவர் தம் கவர்னர் ஆட்சியில் பம்பாய் வாசிகள் கசப் படைந்ததும் கவர்னரின் காலம் முடிந்து கப்பலேறும்போது அவர் செய்த பணிகளுக்குப் பிரதியாகப் பம்பாய் வாசிகளனைவரும் வழியனுப்பு வைபவத்தை பஹிஷ்கரித்து மகிழ்வித் தனுப்பியதும், சென்னையில் கிண்டியை நகரமாக்கி அதில் சாஸ்பதமாகக் குதிரைப் பந்தயத்தை நடந்தேற வழிகாட்டி வருடந்தோறும் ஏழைகளின் நிலைமையைப் பின்னும் வறுமைக்குள்ளாக்கிப் பேராசையைப் பெருகுவித்ததுடன் மாகாண அதிபர் என்ற முறையில் தமது தர்பாரில் நடத்திய யாவும் இதற்குள் இந்தியர்கள் மறந்தவர்களல்ல.

இந்த பிரபுவே அடுத்த கவர்னர் ஜெனரலாக வரப் போகின்றாரெனில், இந்தியாவின் நிலைமையில் பின்னும் பிற் போக்கும் குழப்பங்களுமே நிறைந் திருக்குமென் றெண்ணுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. குடியானவர், உண்மையான கிறிஸ்தவர், பக்தர் என்ற இர்வின் பிரபுவின் வைசிராய் ஆட்சியிலேயே இந்தியா அல்லோல கல்லோல முற்று நிலை தடுமாறி குழப்பங்களுக்கும் பயங்கரக் கொலைகளுக்கும் காரணமாகி அநேக அவசரச் சட்டங்களியற்றவும், 60,000 தேசிய வாதிகள் சிறையி லுழலவும் நிகழ்ந்து விட்டபோது, ஆடம்பரத்தில் மூழ்கி அதிகார மமதை கொண்ட லார்ட் வெல்லிங்டன் ஆட்சியைப் பற்றியோ விவரிக்க வேண்டும்!

## இலங்கைவாழ் அன்பர்களுக்கு

சென்ற இரு வருடங்களாக "பாரதி"யின் அபிவிருத்திபற்றி இலங்கைக்கோர் அன்பரை அனுப்புவதாக எண்ணியிருந்தோம். கால நிலையாலும் சந்தர்ப்ப பேதத்தாலும் அஃது நிறைவேறக்கூட வில்லை. சமீபத்தில் "பாரதி"க்குச் சந்தாச் சேர்ப்பதற்கும் பிற ஆதரவு பெறுவதற்குமாகப் பொறுப்புள்ள நண்பரொருவரை அனுப்பிவைப்பதாகத் தீர்மானிக்கப் பெற்றிருக்கின்றது. அன்பர்களும் பத்திரிகாபிமானிகளும் பாரதத் தொண்டர்களும் "பாரதி"க்காக முன்னர்ச் செய்திருக்கும் பணியைப் பார்க்கிலும் பன்மடங்கு அதிக [illegible] வரும் [illegible]ர்க்கு வேண்டிய உதவிகளனைத்தையும் தந்து, [illegible]யின் விருப்பத்தையும் எமது ஆவலையும் பூர்த்தி செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

198532
சென்னை-600 0?3




## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண பக்கம் | 1-க்கு | மாதம் | 1-க்கு | ரு. | 10—0—0 |
| ,, | ,, | ½ க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼ க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, | ,, | 20—0—0 |

¼ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களை அனுமதிப்பதில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

# "நவீன பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல் நோக்கமாகக்
கொண்டு

**தேச விடுதலைக்காக உழைக்கும்**
**தேசிய மணங் கமழும்**
**'நவீன பாரதி'க்கு**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம் செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக் கொடுங்கள்.

### சந்தா விபரம்.

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ. **2—8—0**
அல்லது **4** ஷில்லிங்

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணா 6. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
"நவீன பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Printed, Edited and Published by R. SUBRAMANYAM,
at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.